# யாத்திராகமம்

எபிரேய பாஷை பேசுபவர்கள் இந்தப் புத்தகத்திற்கு யாத்திராகமம் என்று பெயரிட்டார்கள். யாத்திராகமம் என்பதன் அர்த்தர் “புறப்பட்டுப்போதல்” என்பதாகும். இது இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குச் செல்வதை சரித்திரமாக பார்க்க முடிகின்றது

காலக்கிரமம்.

| | |
|---|---|
| மோசேயின் மரணம் | கி.மு. 1805 |
| எகிப்தில் இஸ்ரவேலர்கள் அடிமைப்படுத்தப்படல் | கி.மு 1730 |
| மோசேயின் பிறப்பு | கி.மு. 1526 |
| யாத்திரையும், நியாயப்பிரமாணமும் கொடுக்கப்படல் | கி.மு. 1446 |

**பின்னணி**

கானானில் ஏற்பட்ட பஞ்சத்திற்குத் தப்பி எகிப்திற்கு வந்த பிற்பாடு (ஆதி. 46), இஸ்ரவேலர்கள் 400 வருடங்கள் கசப்பான அடிமைத்தனத்தை அனுபவித்தார்கள். ( ஆதி15:1-14).இப்படி நடக்கும் என்று ஆபிரகாமுக்கு கர்த்தர் ஏற்கனவே கூறியிருந்தார். (ஆதி. 15:13-21)ஆனால் அந்த 400 வருடங்களுக்குப் பிற்பாடு,கானானியர்களை நியாயம் தீர்க்கும் ஆயுதமாக இஸ்ரவேலர்கள் கானான் திரும்புவார்கள். இஸ்ரவேலர்களை எப்படி கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் என்று யாத்திராகமம் கூறுகின்றது. அவர்களை ஒரு தேசமாகவும் நியாயப்பிரமாணத்தினால் ஆளப்பட்டார்கள் அத்துடன் அவர்களின் தாய் நாடாகிய கானானுக்கு வழிநடத்த தொடங்கினார்.

**எழுதியவர்**; மோசே

- மோசே எழுதிய ஆதியாகமத்தின் தொடர்ச்சியை யாத்திராகமம் 1:1 சுட்டிக்காட்டுகின்றது.
- இந்தப்புத்தகத்தை மோசேதான் எழுதினார் என்பதற்குரிய ஆதாரங்களை இந்தப்புத்தகம் தன்னகத்தே கொண்டுள்ளது. (17:14; 24:4; 34:27).
- யாத்திராகமத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மோசேயே கண்கண்ட சாட்சியாகும்.

• எகிப்தியரின் வீட்டிலேயே மோசே தன்னுடைய  கல்வியைப் பெற்றுக் கொண்டார். (2:1-11; அப் 7:22) அந்த கல்வியே அவரை எழுத்தாளனாகவும் சரித்திரவியலாளனாகவும் உருவாக்கியது.

• யாத்திராகமத்தையும் மிகுதியான பஞ்சாகமப் புத்தகங்களையும் மோசேயே எழுதினார் என்று வேதாகமத்தின் ஏனைய எழுத்தாளர்கள் கூறியுள்ளார்கள். (யோசுவா. 8:31;  லுக்கா 20:28; யோவான்   1:45).

**காலமும் இடமும்.**

1 ராஜா 6:1இன் காலவரிசைப்பட்டியல் ஏறக்குறைய கி.மு. 1446இல்  இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டு வெளியேறியதாக கூறுகின்றது. (12:40-41).இந்தக் காலப்பகுதியிலேயே மோசே யாத்திராகம நிகழ்வுகளை எழுதி வைத்தியருக்கலாம், இவர் சீனாய் வனாந்தரப் பகுதியூடாக மக்களை வழிநடத்தினார்.

**நோக்கம்**

• ஆதியாகமத்தில் கூறப்பட்டுள்ள இஸ்ரவேலர்களின் சரித்திரத்தின் தொடர்ச்சியைக் கூறுவதற்காக.

• தனிப்பட்ட முறையிலும், உறவுமுறையிலும், உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் கர்த்தருடைய இயல்பினை தொடர்ச்சிய வெளிப்படுத்துவதற்காகவும்.

• தன்னுடைய மக்களைக் விடுதலையாக்கவதற்கு விருப்பத்தையும் வல்லமையையும் காண்பிப்பதற்காகவும்.

• இஸ்ரவேலர்களுக்கு நன்நடத்தைக்கான, சமூகவாழ்வுக்கான, ஆவிக்குரிய செயற்பாட்டிற்கான நியாயப்பிரமாணங்களைக் கொடுப்பதற்காகவும்.

**முக்கிய சம்பவங்கள்.**

• யாத்திராகமப் புத்தகத்தின் நிகழ்வுகள் இஸ்ரவேலர்கள் ஒரு தேசமாக மாறுவதைக் குறிக்கின்றது.

»    இதனுடைய தேசம் இன்னும் பெற்றுக் கொள்ளமல் இருந்த போதிலும், யாத்திரகாமம் முதல் அதிகாரத்திலேயே இதனுடைய சுதந்திரத்திற்கான யுத்தத்தைக் குறிப்பிட்டுக் கூறுகின்றது.

»   நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது அவர்களுடைய வாழ்வுக்கான யாப்பு என்று அழைக்கப்படுகின்றது.

•  யாத்திராகமத்தில் இஸ்ரவேலர்களின் ஆசாரிப்புக் கூடாரத்தினதும், பண்டிகைகளின் ஆரம்பத்தினையும் குறிப்பிட்டுக் கூறுகின்றது.

• செங்கடலைக் கடந்து சென்ற அற்புத நிகழ்வானது பழைய ஏற்பாட்டின் உயிர்தெழுதல் என்று அழைக்கப்படுகின்றது, பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இஸ்ரவேல் சரித்திரத்தின் கர்த்தருடைய வல்லமையாக இதனைத் திரும்பிப் பார்க்கின்றார்கள்.

**மற்றய வேதாகமப் புத்தகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.லேவியராகமம்.** :

• யாத்திராகமம் எவ்வாறு கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளை எகிப்திலிருந்து பெற்றுக் கொண்டார் என்பதைக் காண்பிக்கின்றது. லேவியராகமம் எப்படி எகிப்தை தன்னுடைய மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சித்தார் என்று கூறுகின்றது.

• புதிய ஏற்பாட்டில் நிருபங்கள் சுவிஷேசமாக அமைந்தது போல யாத்திராகமம் லேவியராகமத்திற்கு அமைந்துள்ளது.

» **யாத்திராகமம்**, **சுவிஷேசம்**: பஸ்கா ஆட்டுக்குட்டியை காண்பிக்கின்றது. லேவியராகமம், நிருபம்: பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்கின்றது.

» **யாத்திராகமம்**, **சுவிஷேசம்**.கர்த்தர் எங்களை நோக்கி வருகிறார்; லேவியராகமம், நிருபம் *:* நாங்கள் கர்த்தரிடம் செல்லுதல்.

• யாத்திராகமத்தில் கர்த்தர் இரட்சகராக இருக்கின்றார். லேவியராகமத்தில் அவர் பரிசுத்தம் செய்பவராக இருக்கின்றார்

• யாத்திராகமத்தில் அவர் சீனாய் மலையிலிருந்து பேசுகிறார். லேவியராகமத்தில் அவர் பரிசுத்த இடத்திலிருந்து பேசுகின்றார்.

• பழைய ஏற்பாட்டின் பாவத்தின் அடையாளமாக இரண்டு அடையாளத்தின் ஒருஅடையாளமாக புளிப்படைதலை யாத்திராகாமம் காண்பிக்கின்றது. (12:15-20). இரண்டாவது அடையாளமாகிய குஷ்டரோகத்தை லேவியராகமம் அறிமுகப்படுத்துகின்றது,(லேவி 13–14).

# சுருக்கம்.

1. **விடுதலை-;**
2. **கர்த்தருக்கென்று பிரிந்து வாழுதல்.**
3. **கர்த்தர் மக்களுடன் வாழவிரும்புதல்.**
4. **கர்த்தருடைய மகிமை.**
5. **கர்த்தர் தங்கும் இடங்கள்.**
6. **நாம் பிரிந்து வாழவேண்டும்.**

7. **ஆவிக்குரிய உணவு.**
8. **பாடல்கள் மூலம் கர்த்தரைத் துதித்து பாடல்வேண்டும்-;.**
9. **கர்த்தருக்கு கீழப்படிதல்.**
10. **பார்வோனும் யாத்திரகாம கதையும்.**
11. பிராத்தனை.
12. **கடந்து செல்லுதல..(பஸ்கா.(**
13. **மோசேயின் உடன்படிக்கை.**
14. பிரதிஷ்டைபண்ணுதல்.
15. **கர்த்தர்.**
16. **பலிபீடம்.**
17. **கழுவுதல்.**
18. **இரக்கமுள்ள கர்த்தருக்கு எதிராக பொய்த் தெய்வங்கள்.**
19. **நற்குணம்.**
20. ஆசாரிப்புக்கூடாரதளபாடங்கள்.
21. **யாத்திரகாமம் புத்தகம்.**
22. **யாத்திரகாமப் புத்தகத்தை யார் எழுதினார்கள்.**
23. **யாத்திரகாமம் புத்தகத்தின் நோக்கம்.**
24. **இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்படல்.**
25. வாக்களுக்கப்பட்ட தேசத்தை நோக்கிய பிரயாணம்.
26. **குற்றம் காண்கின்ற பார்வை.**
27. **சரித்திர ரீதியான அல்லது மரபுரீதியானது.**
28. **இஸ்ரவேல் சரித்திரத்தின் தொடர்ச்சி (யாத். 1:1-6)**
29. **யாக்கோபின் பிள்ளைகளின் பெயர்கள்.**
30. **எகிப்திற்குச் சென்ற யாக்கோபின் வம்சாவழியினர்.**
31. **யோசேப்பின் மரணம்.**
32. எகிப்தில் இஸ்ரவேலர்கள் ஒடுக்கப்படுதல்.
33. **A .**ஜனங்களின் பெருக்கம்**(யாத் 1:7).**
34. **ஒரு பயங்கரமான அரசன்.**
35. **அடிமைத்தனம்.**
36. **ஒருராஜாவின் ஆணை.**
37. **மோசேயின் பிறப்பு.**
38. **ஒரு தாயின் அன்பு.**
39. **ஒரு பிள்ளை கொடுக்கப்பட்டார்.**
40. **மோசேயின் கல்வி.**

41. **ஒடுக்கப்படுவோர் மீது மோசே கருசனை கொண்டார்.**
42. **விடுதலை வீரராக செயற்பட்டார்.**
43. **சமாதனம் செய்பவராக மோசே செயற்பட்டார்.**
44. **மோசே அகதியானார்,**
45. **எரியும் முள்செடி.**
46. **மோசேயைக் கர்த்தர் அறிந்து கொண்ட சூழ்நிலை.**
47. **ஆராதிக்கும்படியான தனிப்பட்ட அழைப்பு.**
48. **பெரியதேவையும்.**
49. **மிகப்பெரிய வாக்குறுதி.**
50. **இப்போது நீ வா.**
51. **மோசேயினுடைய தாழ்மை.**
52. **கர்த்தர் தன்னை வெளிப்படுத்தல் ",இருக்கிறவராகவே இருக்கிறேன."**
53. **இஸ்ரவேல் மூப்பர்களுக்கான செய்தி.**
54. **பார்வோனுக்கான செய்தி.**
55. **கர்த்தர் மோசேக்கு அற்புத வல்லமை கொடுத்தது.**
56. **ஆரோன் மோசேயின் வாயாக நியமிக்கப்பட்டார்**.
57. **மூன்று கூட்டங்கள்.**
58. **மோசேயின் மகன் விருத்தசேதனம் செய்யப்படல்.**
59. **மோசேயும் ஆரோனும் சந்தித்தல்.**
60. **இஸ்ரவேல் மூப்பர்களோடு சந்தித்தல்.**
61. **மோசேயின் ஊழியம்.**
62. **பார்வோனுக்கு முன்பாக மோசே செல்லுதலும் அதன் பயன்களும்.**
63. **எகிப்திய பேரரசனுடன் நேர்முகம்**
64. **முடிவு.**
65. **இஸ்ரவேலர்களின் முறைப்பாடு.**
66. **மோசேயின் ஜெபம்.**
67. **விசுவாசக்குலைச்சலான கர்த்தருடைய பதில்.**
68. **"இப்போது நீங்கள் காண்பீர்கள்"**
69. **கர்த்தருடைய நாமம்.**
70. **இஸ்ரவேல் பிள்ளைகளுக்கான ஏழு மடங்கு வாக்குறுதிகள்.**
71. **நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட ஜனங்களின் பலகீனமான விசுவாசம்.**

72. **ஆரோனினதும்.**
73. **புதிப்பிக்கப்பட்ட சேவை.**
74. **வாதைகளும் இருதயத்தைக் கடினப்படுத்தலும்.**
75. **இருதயத்தைக் கடினப்படுத்தும் யோசனை.**
76. **இது இருதயத்தைத் தானாகவே கடினப்படுத்துகின்றது.**
77. **இவைகளுக்கு எதிராக இருதயம் தானாகவே கடினப்படும்**-;
78. **இருதயத்தின் ஒருபகுதி கடினப்படுதல்.**
79. **வாதைகள் அறிவிக்கப்பட்டது.**
80. **காலையில் பார்வோனுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது.**
81. **மூன்றாவது சோடிகளிலுள்ள மூன்று வாதைகள்.**
82. வாதைளும் அதன் பாதிப்பு வகைகளும் (அட்டவணை).
83. **எகிப்பின் 10வாதைகள் (அட்டவணை).**
84. **கடந்து செல்லுதல்.**
85. **வருடத்தின் ஒழுங்கு மாற்றப்பட்டது.**
86. **பஷ்காவுக்கான அறிவித்தல் மோசேக்கு கொடுக்கப்படல்.**
87. **பஷ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்த்துவும் இரட்சிப்பும்.**
88. **விடுதலையின் ஞாபகமாக இருக்கட்டும்.**
89. **கட்டளை ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது.**
90. **ஜனங்களின் மூப்பர்களுக்கு விதிமுறைகள் கொடுக்கப்பட்டன.**
91. **பிள்ளைகளுக்குப் பெற்றோரே பொறுப்பாயிருப்பார்கள்.**
92. **பத்தாவது வாதையும் முதல் பஷ்காவும்.**
93. **இஸ்ரவேல் மக்களின் புறப்படுதல்.**
94. **எகிப்திய பார்வோனினால் இஸ்ரவேலர்கள்அனுப்பிவிடப்படல்.**
95. **யாத்திரை.**
96. **முதற்பிள்ளையை பிரதிஸ்டை செய்தல்.**
97. **செங்கடலைக்கடத்தல்.**
98. **பஷ்காவின் இரவு.**
99. **சேவைக்கான கட்டுப்பாடுகள்.**
100. **மதசார்பான வழிநடத்தலகள்.**
101. **எகிப்திற்கு வெளியே தன்னுடைய பிள்ளைகளை கர்த்தர் வழிநடத்தினார்.**
102. **கோசானிலிருந்து செங்கடல்வரை.**
103. **யோசேப்பினுடைய வேண்டுதல் கனப்படுத்தப்பட்டது.**
104. **அக்கினிஸ்தம்பமும்மேகஸ்தம்பமும்,**

105.செங்கடலைக்கடத்தல்.
106.பார்வோன் வந்து கெண்டிருக்கிறார் .
107.இஸ்ரவேலர்களின் பிரச்சனையான யாத்திரை.
108.செங்கடலுக்கூடாக வழிதிறத்தல்.
109.எகிப்தியர் கவிழ்த்துப் போடப்பட்டார்கள்.
110.மகத்தானகிரியையைசெய்து முடிக்கப்பட்டது.
111.இரட்சிப்பின் பாடல்.
112.சூர் வனாந்தரத்தில்.
113.கட்டளையும் சட்டமும்.
114.ஏலிம்.
115.சீன் வனாந்தரம்.
116.முறுமுறுப்பு புதுப்பிக்கப்படல்.
117.கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவை வாக்களித்தார்.
118.மன்னாவும்.
119.“இது மன்னா”.
120.மன்னாவும் ஓய்வு நாளும்.
121.ரெவிதீமிலேஇஸ்ரவேலர்கள்.
122.அடிக்கப்பட்ட கன்மலை.
123.அமலேக்கியருடனான யுத்தம்.
124.இஸ்ரவேலர்கள்சீனாய்வனாந்தரத்தில்சேர்ந்தார்கள்.
125.இஸ்ரவேலர்கள்சீனாய்வனாந்தரத்தில் .
126.சினாய் மலையின் முன்பாக இஸ்ரவேலர்கள்.
*127.*சினாய்ஓரேப் என்ற பெயர்களின் பாவனை ,
128.மோசே பேச்சு வார்த்தையின் இணைப்பாளராக இருந்தார்.
129.வாக்குறுதிகள்.
130.உடன்படிக்கையின் அவசியம்.
131.*ஜனங்களின் பதில்.*
132.சீனாயில் கர்த்தரின் மகிமை.
133.உடன்படிக்கைப் புத்தகம்.
134.இஸ்ரவேலர்களே “எனக்குச்சொந்தசம்பத்தாயிருப்பார்கள்”
135.மோசெயின் நியாயப்பிரமாணத்திலிருந்து.
136.நியாயப்பிரமாணத்தின் மூன்றுபிரிவுகள்.
137.ஒழுக்கக் கோவை.
138.சடங்காச்சார சட்டம்.

139.**குடி உரிமைச்சட்டம்.**
140.**இன்றய சட்டங்களின் பொருத்தம்-;**
141.**நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனமும்.**
142.**உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளல்-;**
143.**ஆசாரிப்புக் கூடாரத்தின் மாதிரி.**
144.**தகுதியான வேலைகாரர் தெரிவு செய்யப்பட்டார்கள்.**
145.**பொன் கன்றுக்குட்டியைச் செய்து ஆராதித்தார்கள்.**
146.**ஜனங்களின் கொதிப்பு.**
147.**புத்தியில்லாத உடன்பாடு.**
148.**மலை உச்சியில் கர்த்தர் மோசேயுடன் கூட இருந்தார்.**
149.**பாவத்திற்கு எதிராக பயங்கரமான கோபம்.**
150.**நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.**
151.**மோசே பரிந்து பேசுகிறவராகச் செயற்பட்டார்.**
**152.ஆசரிப்புக் கூடாரம். கூடாரம் (படம் )**
153.**ஆசரிப்புக் கூடாரம். கூடாரப் பாத்திரங்கள் (படம்**)
154.**யாத்திராகமம் புத்தகத்திலிருந்து கவனத்தில் கொள்ளக்கூடிய நபர்கள்.**
155.**ஆரோனிடமிருந்து கற்கக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்.**
156.**மோசே.**
157.**மோசேயிடமிருந்து கற்கக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்.**
**158.கர்த்தருடைய பெயர்கள்.**

**யாத்திராகமப் புத்தகமானது இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.**

1. **இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்படல்.** (யாத்1:1-15:21)

2. **வாக்கழிக்கப்பட்ட தேசத்தை நோக்கிய பிரயாணம், சீனாய் மலையில் இஸ்ரவேலர்கள் .** (யாத். 15:22-40:38)

இஸ்ரவேலர்கள் எகிப்திற்கு வெளியே பிரயாணம் செய்து கொண்டிருக்கும் வேளையில், நடந்த பாதைகளே இப்புத்தகத்தின் பிரதான அம்சமாகவுள்ளது. அத்துடன் தொடக்கம்,முடிவு என்னும் இரண்டு விடயங்களும் இதில் அடங்குகின்றது. தொடக்கம் என்பது இஸ்ரவேலர்களின் அதிகரிப்பையும், வளர்ச்சியையும்

கூறுகின்றது, அதாவது அவர்கள் கோத்திரம் என்ற நிலையிலிருந்து ஒரு தேசமாக மாறியது. முடிவுரை யானது, சீனாய் மலையில் நியாயப்பிரமாணமும், உடன்படிக்கை கொடுக்கப்பட்டதையும் கூறுகின்றது. 360 வருடங்களுக்கான பதிவுகளை யாத்திராகமப் புத்தகம் கொண்டுள்ளது. சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படலும், யோசேப்பினுடைய மரணத்திற்கும் இடையில் காணப்பட்ட காலமும். இந்தக் காலப்பகுதிகளில் கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் நிமித்தம் இஸ்ரவேலர்களின் துரித வளர்ச்சியைக் காண முடிகின்றது. சுருக்கமாக யாத்திராகமப் புத்தகத்தின் உள்ளடக்கத்தைக் கூறுவதாயின், இஸ்ரவேலர்களின் வளர்ச்சி சம்பந்தமான பார்வோனின் எச்சரிக்கை, அவர்களின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான முயற்சிகள், அந்த முழுத்திட்டத்தின் தோல்விகள், மோசேயின் பிறப்பும் அவரது கல்வியும், தன்னுடைய மக்களை ஒடுக்குதலில் இருந்து அவர் எடுத்த அதிகாரமற்ற முதல் முயற்சி, அவர் மீதியான் தேசத்திற்குத் தப்பி ஓடுதல், தன்னுடைய மக்களை விடுவிப்பவராக தெய்வீக நியமனம், தன்னுடைய மக்களை விடுதலை செய்யவேண்டும் என்பதற்கான பார்வோனுடன் எற்பட்ட பேச்சுவார்த்தைகள், 10 உபாதைகளும் பார்வோனை மேற் கொள்ளுதலும். பஸ்காபண்டிகையின் ஆரம்பமும், இஸ்ரவேலர்களின் புறப்படுதலும், பார்வோனின் பின் தொடர்தலும், செங்கடல் சீனாய் மலைக்குப் பாதையாக மாறுதலும், பத்துக்கற்பனை கொடுக்கப்படுதலும், உடன்படிக்கைப் புத்தகத்தை ஜனங்கள் ஏற்றுக் கொள்ளுதலும். சுருப வணக்கத்திற்குள் சென்ற நாட்களும் அதற்கான தண்டனையும், ஆசாரிப்புக்கூடாரம் கட்டுதலுக்கான வழிநடத்தலும், மதநம்பிக்கை வாழ்வுக்கான அறிவுறுத்தல்களும்.

### A. குற்றம் காண்கின்ற பார்வை

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் பொதுவாக எபிரேய மக்களின் உள்ளத்தின் வெளிப்பாடாகும். காலத்திற்குக் காலம் அவர்கள் தேசிய இலங்கியங்களை அபிவிருத்தி செய்கிறார்கள். இஸ்ரவேலர்களின் மதம், பாபிலோனிய, அசீரிய , எகிப்திய , இந்திய மதங்களைப்போல், மனித மதங்களாக ஆரம்பமாயின. அதாவது பல கடவுள் வணக்கங்கள், அது மெதுவாக ஒருகடவுள் வணக்கத்திற்கு மாறுகின்றது. இஸ்ரவேலர்களின் மதமானது ஆரம்பத்தில் சுரூப வழிபாடுகளைக் கொண்டதாக இருந்தது, பஞ்சாகம காலங்களில் உயிரற்ற போலி மதங்களும், பல கடவுள் வணக் கங்களும் இடம்பெற்றதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. பல அறியாத குற்றம் காண்பவர்களின் குற்றச் சாட்டுக்களுக்கு பஞ்சாகமப் புத்தகங்கள் உள்ளா கின்றன. சில பகுதிகள் மாத்திரம் மோசேயின் காலத்திற்குட்டது எனவும் கூறுகி ன்றனர். யாத்திரகாம காலங்களிலும், மோசேயின் காலத்திலும் எபிரேய மதங்கள், பஞ்சாகமத்தின் கடைசிப்பகுதிகளாக, ஒரு கடவுள் வணக்கம் இருக்கவில்லை, ஆனால் பல கடவுள் வணக்கம் இருந்தது. படிப்படியாக எபிரேய மத நம்பிக்கை முன்னேற்றம் கண்டது, மத நம்பிக்கையின் விருத்தியின் மூலம் மனித

நடவடிக்கைகள் முன்னேற்றம் காணத் தொடங்கின. கிறிஸ்த்துவுக்கு முன் 8ம் நூற்றாண்டில், அரைப்பகுதி பாகால் சுரூப வணக்கம் உருவாக்கப்பட்டது, அரைவாசி ஒருகடவுள் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது, இவைகள் தீர்க்கதரிசனப் புத்தங்களினூடாக அறியக்கூடியதாகவுள்ளது, இது பஞ்சாகமத்தில் வித்தியாசப்படுகின்றது. யோகோவா, தேசிய கடவுளாகவும், அவர் முன்பு எருது வடிவில் யூதாவிலும், இஸ்ரவேலிலும் வணங்கப்பட்டிருந்தார், இந்த நடவடிக்கைகள் ஒரே கடவுள் வணக்கமாக மாறி இஸ்ரவேலின் மதமாக மாறியது. குற்றப்படுத்தல் கொள்கையானது, எங்கும் மதநம்பிக்கையில் சிறப்பான வெளிப்பாடுகளை எபிரேய மக்களில் காணவில்லை, ஆனால் சாதாரண மக்களின் மனித வெளிப்பாடுகளைக் கொண்டதாகவிருந்தது, இது பொதுவாக எல்லா தேசத்திற்கும் ஒத்ததாக இருந்தது. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள், எபிரேய மக்களின் வரலாற்று வெளிப்பாடாக அமைகின்றது, ஆனால் எல்லா மனிதர்களுக்கும் ஏற்ற மதவிசுவாசத்தைக் காண்பிக்கவில்லை

**B. சரித்திர ரீதியான அல்லது மரபுரீதியான;-** இந்தப் பார்வையின்படி பார்க்கும்போது, ஒருவர் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் நிச்சயமாக கர்த்தருடைய வார்த்தைகள் என்று நம்புகின்றார்கள்.குறிப்பிட்ட சில பரிசுத்தமனிதர்கள் தாங்கள் பரிசுத்த ஆவியினால் அசைக்கப்பட்டதாக கூறுகின்றார்கள். இந்தப்புத்தகங்கள் எபிரேய ஜாதிகளுடை எண்ணங்களைக் கொண்டிருக்கவில்லை, ஆனால் சர்வ வல்லமையுள்ளவர்களின் போதனையாக இருக்கின்றது. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள், எபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்த போதிலும், அவைகள் எபிரேய இலக்கியங்கள் அல்ல, மாறாக தெய்வீக வெளிப்பாடுகளாகும். பழைய ஏற்பாட்டுப் புத்தகம், இயற்கையான உலக மதம் அல்ல, ஆனால் சர்வ வல்லவரைப் பற்றியது. இது இருளை வெளிச்சமாக்குகிறது, பிழைகளைச் சரியாக்குகின்றது, அத்துடன் மற்றய மதங்களால் செய்ய முடியாத, இருதய மாற்றத்தைக் கூறுகின்றது. ஆதியாகமம் தொடங்கி மல்கியா வரையும் ஒரே கடவுள் பற்றியே கூறுகின்றது. தொடக்கம் முதல் முடிவுவரை வாக்குறுதிகளும், இரட்சிப்பும், இரட்சகர்பற்றிய கொள்கைகளும் கூறப்பட்டுள்ளன. இஸ்ரவேல் மக்களுக்கு பல சமயவழிபாடு, இறைவன் இல்லை என்ற நம்பிக்கை, எல்லாம் கடவுளே என்ற நம்பிக்கையை மோசேயோ அல்லது தீர்க்கதரிசிகளோ கொடுக்கவில்லை. எபிரேய மக்கள் தாங்களாகவே, காலத்திற்குக் காலம், சுரூப வணக்கக்காரராக மாறினார்கள். இந்த மதமானது யோகோவாவால் கொடுக்கப்பட்டது என அவர்கள் நம்பவில்லை. சுருக்கமாகப் பார்ப்போமாகில், மதமானது ஒரு வெளிப்படுத்தலாகும், இது பரினாமக் கோட்பாடல்ல. இது கர்த்தரிடம் இருந்து வந்த வெளிப்பாடாகும், ஆனால் எபிரேயர்களின் மனதில் உதித்த பரினாமம் அல்ல. உண்மையான கிறிஸ்தவம், நம்பிக்கையின் உறுதிப்பாட்டுடன், சுதந்திரமான தேடுதலை உற்சாகப் படுத்துகின்றது. இது குற்றப்படுத்தும் செயற்பாட்டை வரவேற்கின்றது. குற்றப்படுத் துதல் என்பது

நாகரீகமற்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது, இது உண்மைக்கும் சத்தியத்திற்கும் ஏற்றதாக இருத்தல் வேண்டும். கிறிஸ்தவம், சபைகளில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளை நம்புகின்றது. நாங்கள் எங்கள் இருதயத்தை திறந்து, யாத் திரகாமம் முதல் யோசுவா வரை இடம்பெற்ற பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளை நம்ப வேண்டும். எங்கள் இருதயம் கர்த்தருடைய வார்த்தைகளை நம்ப வேண்டும். பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மூலம் பல உண்மைகளை நாம் அறிகின்றோம் அவைகள் எங்களுக்கும் பெரும் ஆசீர்வாதமானவைகளாகும், அத்துடன் கர்த்தரைப்பற்றிய அதிக விளக்கங்களையும் நமக்குத் தருகின்றது அதுமட்டுமல்லாமல் புதிய ஏற்பாட்டின் விளக்கங்களையும் தருகின்றது. பழைய ஏற்பாட்டைப் படிக்கும் போது புதிய ஏற்பாட்டின் பலன்களை எம்மால் உணர்ந்து கொள்ளமுடியும்.

## I. இஸ்ரவேல் சரித்திரத்தின் தொடர்ச்சி (யாத் 1:1-6)

**A. யாக்கோபின் பிள்ளைகளின் பெயர்கள் (யாத் 1:1-4)** ஆதியாகமம் 32ம் அதிகாரத்தில் முற்பிதாவாகிய யாக்கோபு மொசமத்தோமியாவிலிருந்து கானானுக்குத் திரும்பும் வழியில், யாக்கோபு ஆற்றைக் கடப்பதற்கு முன்பாக தேவதூதனுடன் போராடினதை நாம் காணமுடிகிறது. இங்கேயே கர்த்தரால் இஸ்ரவேல் என்ற நாமம் தரிப்பிக்கப்பட்டது. வேதாகமம் முழுவதும் யாக்கோபின் சந்ததியார் யாவரும் இஸ்ரவேலர்கள் என அழைகப்படுவதைக் காணலாம். யாத்திரகாமப் புத்தகம், யாக்கோபின் பிள்ளைகளின் பெயர்களை துல்லியமாகக் கூறுகின்றது. வேதாகமத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் ஒன்றுடன் ஒன்று இசைந்திருப்பதை கதைகள் மூலம் இப்போது எம்மால் உணரமுடிகிள்றது.

**B. எகிப்திற்குச் சென்ற யாக்கோபின் வம்சாவழியினர் (யாத் 1:5)** கானானிலிருந்து எகிப்திற்குச்சென்றவர்கள் எழுபதுபேர் மட்டும் அல்ல என்பதை நாம் முதலில் மனதில் பதித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். குடியேற்றத்தில் இடம்பெற்றவர்கள் யாக்கோபின் பிள்ளைகளும் அவர்களின் குடும்பத்தார்களுமாகும். இது அவர்களது மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் வேலைக்காரர்கள் சேர்ந்தது. இது ஒரு பெரிய குடியேற்றக்காரர்களாகும். எகிப்தில் குடியேறியபோது, தலைவர்களின் எண்ணிக்கையைமட்டும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, இஸ்ரவேல் மக்களின் பிள்ளைகளினதும், ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளையும், இந்த மக்களுக்கூடாக, உலக இரட்சகர் உருவாகுவதையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். யோசேப்புடைய சகோதரர்கள், அவர்மீது கொண்ட எரிச்சலினாலும், பொறாமையினாலும், எகித்தியருக்கு அடிமையாக விற்றுப் போட்டார்கள். இதுவே யாக்கோபுடைய சந்ததியாவரும் எகிப்தில் அடிமைகளாக உருவாகக் காரணமாகவிருந்தது. கர்த்தர்

யோசேப்பை எகிப்தில் ஆசீர்வதித்தார். அவர் அடிமைத்தனத்திலிருந்தும், சிறையிருப்பிலிருந்தும் மீட்கப்பட்டு பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டார், ஒரு சர்வ அதிகாரம் கொண்ட பதவி கொடுக்கப்பட்து, யாத்திராகமப்புத்தகத்தில், இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்தும் மீட்கப்பட்டதையும், ஒரு ஜாதியாக உருவாகி கர்த்தரை சேவிக்கிறதற்காக தீர்மானத்தை மேற்கொள்வதையும் பார்க்கிறோம். யோசேப்பு தன்னுடைய சகோரர்களின் கொடூரத்தினால் எகிப்திற்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், கர்த்தருடைய தாராள மனப்பாண்மையினாலும், மன்னிப்பின் கிருபையினாலும் எகிப்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள் என்பதே உண்மையாகும். இவை யாவும் கர்த்தருடைய திட்டமேயாகும். கானான் தேசத்தில் ஒரு ஜாதியாக இஸ்ரவேல் மக்களால் உருவாக முடியவில்லை, காரணம், அங்குள்ள புறமதத்தவர்களோடு அவர்கள் உறவாடி, சம்பந்தம் கலந்தமையாகும். மந்தை மேய்ப்பவர்களும், மாடுமேய்ப்பவர்களும் அருவருப்பானவர்கள என்ற காரணத்தினால், எகிப்தில், மிகவும் செழிப்பான நகரமாகி கோசான் இவர்கள் வசம் கொடுக்கபட்டது(ஆதி46:34),அவர்கள் ஒரு புறம்பான ஜாதியாக வைக்கப்பட்டார்கள். காலப் போக்கில் இவர்களும் ஒரு வல்லமையுள்ள ஜாதியாக உருவெடுத்தார்கள்.

**C. யோசேப்பின் மரணம். (யாத்1:6)**யோசேப்பு 110 வருடங்கள் உயிரோடு இருந்தார். அந்த வருடங்களில் 17 வருடங்கள் எகித்தில் ஜீவித்தார். அனேகமான இந்த வருடங்கள், யோசேப்பு அவர் விரும்பியவாறு சகல வல்லமையுடனும், சகல ஆசீர்வாதங்களுடனும் வாழ்ந்து வந்தார். யோசேப்பு மரணமாகும்வரை 71 வருடங்கள் யாக்கோபு பரம்பரை எகிப்தில் வாழ்ந்தார்கள், யோசேப்புக்கும், மோசேயின் பிறப்புக்கும் இடையில் **278** வருடங்கள் சென்றன.

**II.** எகிப்தில் இஸ்ரவேலர்கள் ஒடுக்கப்படுதல். **(யாக்:7-22)**

**A .**ஜனங்களின் பெருக்கம்**(யாத்1:7)**

இங்குதான் யாத்திரகாமத்தின் கதை ஆரம்பமாகின்றது. யோசேப்பு மரித்த பின்பு சரித்திரத்திற்குள் நாம் இப்போது பிரவேசிக்கின்றோம். அந்த நேரத்தில் எவ்வளவு இஸ்ரவேலர்கள் இருந்தார்கள் என்ற தகவல்கள் எமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களின் பெருக்கம் அதிகமாக இருந்தது என்ற தகல்கள் கொடுக்க ப்பட்டிருந்தன. குடும்பம் ஒரு தேசமாக வளர்ச்சியடைந்தது. அவர்கள் கனியுள்ளவ ர்களாகினார்கள், அதிகமாகப் பெருகினார்கள். அவர்கள் பெருக்கம் அதிகரித்துக் கொண்டே போனது. இதனால் அவர்கள் ஆசீர்வாதமாக இருந்தது போலும், அழிவும் ஏற்பட்டது. புதிதாக வந்த பார்வோனுக்கு யோசேப்பைப் பற்றி எதுவுமே தெரியாதிருந்தது. இஸ்ரவேலர்கள் மேலிருந்த நல்ல அபிப்பிராயங்கள் அற்றுப்போயிருந்தன. ஆதியாகமத்தில் யாக்கோபு "நான்தேவன், நான்

உன்தகப்பனுடைய தேவன்; நீ எகிப்துதேசத்துக்குப் போகப்பயப்பட வேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோசேப்பு தன்கையால் உன்கண்களைமூடுவான் என்று சொன்னார்." ( 46:3-4,).

**B. ஒரு பயங்கரமான அரசன்.**

புதிய ராஜா என்று குறிப்பிடப்படுவது, அளவுக்கு அதிகமான நேர்மையுள்ளவர் என்று பொருள்படும். உண்மையில் இது ஒரு புதிய ராஜபரம்பரையைக்குறிக்கும். **புதிய** இரா ஜாதான் முதல் முதலில் இஸ்ரவேல் பிள்ளைகள் மீது குற்றம் சுமத்தியவராவார். இவர் ஒடுக்குதலுக்குரிய பார்வோன் என்றும் அழைக்கப்பட்டார். பொதுவாக இவரைப்பற்றி பார்க்கும்போது இவர் எகித்தின் அரசனாவார், இவர் 19 வது ராஜ்ஜியத்துக்குரியவர். இவர் களுடைய இடைத்தங்கல் வாழ்வு 430 வருடங்களாயின், யோசேப்பினுடைய நிர்வாகக் காலம் மேய்ப்பர்களின் காலம் என்று கூறப்படுகின்றது. இவர்களுடைய வெற்றியாளர் களே ஒடுக்குதலின் துவக்க காலத்திற்குரியவர்களாவார். அனேக எகிப்திய ஆய்வா ளர்களின் கருத்துப்படி, ராம்செஸ்11 ,மெனெபாத், ஆரம்ப யாத்திராகமத்தின் பார்வோ ன்களாகவிருந்தார்கள் என நம்புகிறார்கள். அவர்களின் இணைந்த ஆட்சி, சரித்திரத்தின் பிரகாரம், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள துன்புறுத்தல்களுடன் தொடர்புள்ளவையாகக் காணப்பட்டன. பதிவுசெய்யப்பட்ட நிகழ்வுகளின்படி, அவர்களுடைய குணங்கள், இஸ்ரவேலர்களுக்கு கொடுமையான தீங்கிழைத்தவர்கள் என்று கூறுகின்றது.

இஸ்ரவேலர்களின் பெருக்கமே இராஜாவின் பயத்திற்குக் காரணமாயிருந்தது. அப்ப டியிருந்தும், இஸ்ரவேலர்கள் பிரயோசனமானவர்களானபடியால், ராஜா அவர்களை வெளியே போகவிட விருப்பமற்றவராக இருந்தார். அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டு ஆள வேண்டியவர்களாகவிருந்தார்கள், இல்லையேல் அவர்கள் எகிப்தியர்களை மிஞ்சி விடுவார்கள் என்ற பயம் மேலோங்கியிருந்தது. இந்த மக்களைப் பார்க்கும் போது, ராஜாவுக்கு தன்னுடைய அதிகாரவர்கத்திலேயே பயம் உருவாகிற்று. அவர் இஸ்ர வேலர்களை பலவீனப்படுத்த வேண்டும் அல்லது முற்றாக அழித்துவிடல் வேண்டும் என்று தீர்மானித்தான். இஸ்ரவேலர்கள் வேறு இடத்துக்குச் சென்று குடியேற முடியா தவர்களாக அவதிப்பட்டார்கள். இவர்கள் செழிப்பான கோசான் நகரத்தில், மந்தை மேய்ப்பவர்களாக தங்கள் வாழ்வை காத்து வந்தார்கள். இந்த அரக்கனைக் கண்டபோது ஜனங்கள் மிகவும் பயந்தார்கள். இவர்களால் அனேகர் அடிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்,

**C. அடிமைத்தனம் (யாத். 1:11-14)** பயத்தினிமித்தமும், வெறுப்பினிமித்தமும், ராஜா , இஸ்ரவேலர்களை மிகக் கொடுமையான அடிமைத்தனத்தில் துக்கப்படுத்தினான்.

ஆளோட்டிகளும் நியமிக்கப்பட்டு மிகவும் கடினமான வேலைகளுக்குள்ளாக்கப் பட்டார்கள். அவர்கள் வலுக்கட்டாயமாக வயல்களை அபிவிருத்தி செய்யும்படியும், வாய்க்கால்கள் வெட்டும்படியும், கட்டிடங்கள் அமைக்கும்படியும், நகரங்களைக் கட்டும்படியும் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். கொழுத்தும் வெய்யிலிலும் வெறும் மேலுடன், கொடுமையான அடிகாயங்களினூடாக இரத்தம் வழிந்தோட, வேலை வாங்கப்பட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கை துன்புறுத்ப்பட்டு கசந்து போயிருந்தார்கள். அளவுக்கதிகமாக உன் வம்சம் பெருகும் என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு கூறியிருந்தார், ஆனால் இவ்வாறான கொடூரமான ராஜா துக்கப்படுத்துவான் என்று கர்த்தர் கூறவில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு பார்வோனும் அவனுடைய ஊழியக்காரரும் ஒடுக்கினார்களோ, அவ்வளவுக்கவ்வளவாய் அவர்கள் பெருகினார்கள். மனிதனுடைய ஞானத்தைப் பயித்தியமாக்க கர்த்தரால் மட்டுமே முடியும். எல்லா மனிதர்களினதும் தீர்மானங்களையும் தலைகீழாக மாற்றினார், ஞானமான ஆலோசனைகளை வியர்ப்பமாக்கினார், அவர்கள் என்னென்ன தீர்மானங்களை எடுத்தார்களோ அத்தனையும் எதிர் விளைவையே கொடுத்தன. இவை யாவும் கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணமாகவே இடம் பெறுகின்றன. இந்த சகல துன்பங்களும் எகிப்திலே ஜீவிப்பது பொருத்தமில்லை என்றும், எகிப்து இனி மேல் வேண்டாம் என்ற எண்ணத்தை உருவாக்கியது. அவர்களுக்கு எகிப்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுத்தது. கர்த்தரும் அவர்களை ஒரு பயங்கரமான வனாந்தர யாத்திரைக்கு தேவையான சகிப்புத் தன்மைகளை ஏற்படுத்தினார்.

**D ஒருராஜாவின் ஆணை(யாத். 1:15-22)**

இவர்களுடைய கொடிய ஒடுக்குதலினால் இஸ்ரவேலர்களின் பெருக்கத்தைக் கட்டுப்ப டுத்த முடியவில்லை. பார்வோன் சாத்தானிடமிருந்து ஒரு அளவுத்திட்டத்தைப் பெற்றுக் கொண்டான். இஸ்ரவேல் பெண்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு ஆண்குழந் தையையும் கொலை செய்யும்படி மருத்துவிச்சிகளுக்கு கட்டளை கொடுக்கப்பட்டது. மருத்துவிச்சிகள் கட்டளைகளைப் பெற்றுக் கொண்டபோதிலும், ஒரு பிள்ளையைக் கூட அவர்களால் கொலைசெய்ய முடியவில்லை. பார்வோனால் மருத்துவிச்சிகள் பிள்ளைகளைக் கொல்லவில்லை என்று குற்றம் சுமத்தியபோது, இஸ்ரவேல் பெண்கள் தங்கள் உதவி இல்லாமலேயே குழந்தையை பெற்றுக் கொள்கின்றார்கள் என்று சாட்டுச் சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள். இதுதான் உண்மையும் கூட. கர்த்தர் மருத்துவிச்சிகளுக்கு பார்வோனுடைய கட்டளைகளுக்கு எதிர்த்து நின்றபடியால் நன்மைகளைச் செய்தார். பார்வோன் சோர்ந்து போகவில்லை. இன்னுமொரு கட்டளையை பார்வோன் பிறப்பித்தான். இஸ்ரவேலர்களுக்குப்

பிறக்கும் சகல ஆண் பிள்ளைகளும் நைல் நதியில் எறிந்து கொல்லப்படல் வேண்டும் என்று கட்டளையிட் டான். எவ்வளவு காலம் இந்தக் கட்டளை அமுலில் இருந்தது என்று எங்களுக்குத் தெரியாது. இஸ்ரவேலர்களின் நிலமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அவர்கள் உயிருடன் வாழவேண்டுமாயின், அவர்களுக்கு ஒரு மீட்பர் தேவையாக இருந்தது.

**III.மோசேயின் பிறப்பு(யாத் 2:1-10)**

**A. ஒரு தாயின் அன்பு ( யாத்2:1-4)**மோசேயின் பெற்றோர் லேவி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் வெறுக்கப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு ஆண் மகன் கொடுக்கப்பட்டார், அவரே இந்த ஜனங்களின் மீட்பராவார், அந்தக் குடும்பத்திற்கூடாகவே உலக இரட்சகரும் பிறந்தார். மோசே பிறக்கும்போதே மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டவராவார். அவரைக் காப்பா ற்றியது, தாயின் அன்பாகும், பிள்ளையின் அழுகை, இராணியின் இரக்கம், சகோதரியின் கெட்டித்தனம், அதுமட்டுமல்லாமல் பெற்றோரின் விசுவாசம். ஒரு எபிரேய அடிமை, அன்பான தாயார், கொடுங்கோலன் பார்வோனின் கட்டளையை நிறைவேற்றப் பயந்தாள். தொடர்ந்து பிள்ளையை வீட்டில் மறைத்துவைக்க முடியாமையால், அவள் ஒரு கூடையைப் பின்னினாள், தண்ணீர் புகமுடியாதவாறு இறுக்கமாகப் பின்னினாள், அதற்கு கீல்பூசினாள், பிள்ளையை கூடைக்குள் வைத்து நதியில் விட்டாள். அன்பான தாயார், பிள்ளையின் சகோதரியை, பிள்ளையை அவதானித்து பார்க்கும்படி அனுப்பிவைத்தாள். "*மோசேபிறந்த போது அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்.*" (எபிரேயர் 11:23).கர்த்தர் மேல் அவர்களுக்குள்ள விசுவாசம்,கொடூரமான பார்வோனின் கட்டளையை நிறைவேற்றாமல், பிள்ளையைத் தப்புவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவைத்தது. பார்வோனுடைய நினைப்பைவிட கர்த்தரின் திட்டம் எவ்வளவு மேலானது. கர்த்தர் மோசேயைக் காப்பாற்றினார்.

**B. ஒரு பிள்ளை கொடுக்கப்பட்டார் (யாக். 2:5-10);-** இஸ்ரவேலர்களின் வாழ்வு பறஜாதிகளுடன் இணைந்தே வேதாகமம் முழுவதும் காணப்படுகின்றது. இது யோசேப்பின் வாழ்விலும் உண்மையாகவே காணப்படுகின்றது, ஆனால் இப்போது மோசேயோடும் அவ்வாறே காணப்படுகின்றது. இரட்சிப்பானது, வேதம் முழுவதும் புற ஜாதிகளுடன் இணைந்தே காணப்படுகின்றது. பார்வோனுடைய மகள் எபிரேயரை அழிக்கத் திட்டம் தீட்டியிருந்தாள், அவளை கர்த்தர் ஆயுதமாகப் பாவித்தார், தெய்வீகத் தீர்மானத்தின்படி, இப்போது இறைவனின் கரம் உதவிக்கு நீட்டப்படுவதை

அவதானிக்க முடிகின்றது, கர்த்தருடைய இரகசியத் தீர்மானத்தின்படி, பார்வோன் மகள் நைல்நதிக்கு வரவழைக்கப்பட்டாள், அங்கு மரணதண்டனைக்கு நியமிக்கப்பட்ட எபிரேயப் பிள்ளை என்று தெரிந்தும், அவள் மனதில் அந்த பிள்ளையைக் காப்பாற்ற தீர்மானம் மேற் கொள்கின்றாள். கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் தூண்டி இந்த அன்பான இரட்சிப்பின் நிகழ்ச்சியை நிறைவேற்றுகிறார். அவளுக்கு அந்தப் பிள்ளையைப் பராமரிப்பதற்கு ஒரு உதவியாளரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் கஷ்டம் இருக்கவில்லை. மோசேயின் தாயாரின் விசுவாசத்திற்குப் பரிசுகிடைத்தது, பிள்ளை பால்மறக்கும் வரை பார்வோனின் அரண்மனையில் அவனைப்பராமரிப்பதற்கு தேவனுடைய கிருபை அவளுக்குக் கிடைத்தது. சாத்தானுடைய திட்டம் அவனுடைய ஆயுதத்தினாலேயே வீணாக்கப்பட்டது. எந்த ஆயுத்தத்தை பிசாசு பாவித்தானோ, அதே ஆயுத்தத்தை வைத்தே கர்த்தர் அந்தப் பிள்ளையைப் பராமரித்து வளர்க்க ஏற்பாடு செய்தார். கர்த்தர் சாத்தானின் திட்டத்தை அவனைக் கொண்டே தோல்வியடையச் செய்கிறார்.

**IV. மோசேயின் கல்வி;- (எபிரே 11:24-27; அப் 7:20-29)** மோசேயின் அழைப்பை பூர்த்தி செய்வதற்கு மூன்று கால பயிற்சிகள் பெறவேண்டியதாகவிருந்தது. அதாவது, பெற் றோரின் வீட்டிலிருந்து, பிற்பாடு எகிப்பிய ராஜாவின் அரண்மனையிலிருந்தது, பிற் பாடு மீதியான் தேசத்தில். மோசே, இந்தக்காலங்களுக்கான பதிவுகள் எதனையும் மேற் கொள்ளவில்லை. அவருடைய நோக்கம், தன்னுடைய சுயசரிதையை எழுதுவதல்ல, மாறாக கர்த்தர் மக்களுடன் எப்படி தொடர்புகளைக் கொண்டு வருகிறார் என்பதை மட்டும் கூறுவதாக இருந்தது. சந்தேகமில்லாமல், தன்னுடைய பெற்றோர்களோடு இருந்த காலங்கள் மிகவும் முக்கியமானகாலப் பகுதியாகும். பெற்றோர்களிடமிந்து விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டார், தன்னுடைய மக்களின் மரபுகளை அறிந்து கொண்டார், எகிப்தை விட்டு மீட்டுக் கொள்ளுவேன் என்று ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளைக் கற்றுக் கொண்டார். இந்த விதைகள் அவருடைய மனதில் விழுந்தது அவரை சிறப்பான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவராக வனைந்து கொண்டது. சிறுபராயத்திலேயே கர்த்தருடைய காரியங்களை மனதில் விதைத்து வைப்பது பெரிய அறுவடையை ஒருநாள் கொண்டுவரும். வேதாகமம் இவ்வாறு கூறுகின்றது "*பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.*"( (நீதி 22:6). மதக்கல்வியை சிறுவயதில் போதிக்க வேண்டியது பெற்றொர்களின் பொறுப்பாகும், சிறுவயதிலேயே பிள்ளையின் குணாம்சங்கள் உருவாக்கப்படுகின்றன ."*மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்.* "என்று அப்போஸ்தலர் நடபடிக்கைப் புத்தகத்தில் 7ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. மோசேக்கு இஸ்ரவேலர்களையும் தெரியும், அவர்களுடைய எதிராளிகளையும்

அவர்களின்,பெருமையும்,கொடூரமும் நன்கு தெரியும். அவர் எகிப்தியர்களின் சகல ஞானங்களையும் கற்றறிந்துள்ளார், ஆனால் கர்த்தரின் ஞானத்தையும் அவர் கற்க வேண்டியுள்ளது. மூன்றாவது பயிற்சி மீதியான் தேசத்தில் இடம் பெற்றது. இங்கு கர்த்தர் அவரை ஆயத்தப்படுத்தினார், துறவி வாழ்வு, கடும் சிரமமான வேலைகளைச் செய்வதிலும், பயிற்சி அளிக்கப்பட்டது, இவை யாவும் தன்னுடைய மக்களை மீட்கும் பணியில் விடுதலை வீரராகவும், ஆட்சியாளராகவும் வருவதற்கான பயிற்சிகளாகும்.

**V ஒடுக்கப்படுவோர் மீது மோசே கருசனை கொண்டார். (யாத் 2:11-15)**

**A. விடுதலை வீரராக செயற்பட்டார் ( யாத்2:11-12; எபிரே 11:24-27)** மோசேயினுடைய வாழ்வில் பிரதான தீர்மானம் மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. பார்வோனின் அரண்மனையில், பார்வோனின் மகளின் செல்லப்பிள்ளையாக, சகல ஆசீர்வாதங்க ளோடும் வாழ்வது சுலபமானதாக இருக்கும், ஆனால் அவர் இதனைத் தள்ளி, கர்த்த ரில் விசுவாசம் வைத்து, கர்த்தருடைய பிள்ளைகளுடன் உபத்திவப்படுவதை தெரிவு செய்தார். அவர் இஸ்ரவேல்களின் கடவுளாகிய கர்த்தரின் பிள்ளை என்பதை, எகிப் தியர்களின் கல்வியினால் புறம்பே தள்ள முடியவில்லை. நிச்சயமாக, மோசேயின் தாயாரினால், இஸ்ரவேலர்கள் பற்றியும், ஆபிரகாமுடைய வாக்குறுதிகள்பற்றியும், இஸ்ரவேலர்களின் கர்த்தரே உண்மையான ஜீவிக்கின்ற தேவன் என்பதையும் போதித்திருப்பார்கள். தன்னுடைய சகோதரர்களுக்கு இரக்கம் காண்பிக்கும்வண்ணம் அவர் அங்கு வரவில்லை, ஆனால் அவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்க வந்தார். இந்த நடவடிக்கையின்மூலம் கடும் ஒடுக்குதலைச் செய்து கொண்டிருக்கும் எகிப்தியர் மீது கொண்டுள்ள வெறுப்பைக் காண்பித்தார். மோசே தன்னுடைய மக்களுடைய சுமையைக் கவனித்தார், நீதியில்லாத ஒடுக்குதல் காரரைப்பார்த்து, கோபமடைந்து தன் சகோதரருக்கு உதவ முன்வந்தார். கொடுமை செய்து கொண்டிருக்கும் ஆளோட்டிகள் மீது கடும் கோபம் மூண்டவராக காணப்பட்டார், அவர்களுக்கு நீதிவழங்க வேண்டும் என்று நினைத்தார். கடும் கோபம் மூண்டவராய், கர்த்தரால் நியமிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாக விடுதலை செய்ய வேண்டும் என ஆர்வம் கொண்டார், அதனால் எகிப்தியனைக் கொலை செய்தார், இதனால் பிரச்சனைகள் தீரப்போவதில்லை.

**B சமாதனம் செய்பவராக மோசே செயற்பட்டார். (யாத் 2:13-15a)** இரண்டாம் நாள் அவர் வரும்போது தன்னுடைய சகோதரர்கள் ஒடுக்கப்படுவது அதிகம் துக்கத்தைத் தரவில்லை. இரண்டு எபிரேயர்கள் தங்களுக்குள் வாக்குவாதம் செய்வதை அவதானித்தார், சமாதானம் செய்வதற்காக அவர்களை அணுகி சமாதானம் பண்ண முயற்சித்தார். முதல் நாள் அவர் செய்த காரியம் தவறாக இருந்தது. அவர் அன்று செயற்பட்ட விதம் ஒழுங்கற்றதாகக் காணப்பட்டது. ஆனால் இங்கு இவர்கள்

மத்தியில் சமாதானம் ஏற்படுத்துவது தன்னுடைய கடமை என நினைத்துச் செயற்பட்டார். அதனால் அவர்கள் இருவரும், எகிப்தியனை கொன்று அவனை மணலில் மூடியதை நினைவுசெய்து, இவரின் சமாதான முயற்சியை நிராகரித்தார்கள்."***எங்கள் மேல்உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்று போட்டது போல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ என்றார்கள்***. (யாத் 2:14 ) இந்தக்காரியம் தன்னுடைய இனத்தாரிடம் கோபத்தை உருவாக்கியதாலும், தான் எகிப்தியனைக் கொலை செய்தது அரசனுக்குத் தெரிந்து, தன்னைத் தேடுவதாலும், எகிப்தைவிட்டு வேறு தேசம் போவதற்கு முடிவு செய்தார்

VI. **மோசே அகதியானார், (யாத் 2:15-25)** மோசே, எகிப்திய பார்வோனிடமிருந்து தப்புவதற்காக சீனாய் வனாந்தரத்திலுள்ள மீதியான் தேசத்திற்கு அகதியாக ஓடினார். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்றுக் கொள்வதற்கு ஆயத்த மாகவில்லை. இவர்களை எகிப்திலிருந்து விடுதலை பெறுவதற்கான ஆயத்தங்கள் செய்யவேண்டி பொறுப்பு கர்த்தரிடம் காணப்படுகின்றது, இதற்காக ஒருவரைத் தேடவேண்டி தேவையும் கர்த்தரிடமே காணப்படுகின்றது. கர்த்தர் மோசேயை எகிப்தி லிருந்து வெளியேற்றினார், அது ஆள் நடமாற்றமில்லாத வனாந்தரமாயிருந்தது, அங்கு தெய்வீகச் செயல்களைப் பயிற்றுவிக்கக் கர்த்தர் சித்தங் கொண்டார். மீதியானியர்கள் ஆபிரகாம் கேத்தூராள் என்பவர்களின் சந்ததியினராவார்கள்.( ஆதி. 2501-5). இவர்கள் உண்மையான கர்த்தரை ஆராதனை செய்யும் கடவுளாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எத்திரோ, ஆசாரியன் உண்மையான கர்த்தரை வணங்குபவராக இருந்தார். மோசே அவர்களுடன் இணைந்து வாழவேண்டிய சந்தர்ப்பத்தைக் கர்த்தர் ஏற்படுத்தினார். எத்திரோவின் மகளான சிப்பொராளை மோசே திருமணம்முடித்துக் கொண்டார். அவர்களுக்கு கெர்சோம், எலியேசர் என்னும் இரண்டு மகன்மார் ,பிறந்தார்கள். மோசேயை மீதியான் தேசத்திற்குக் கொண்டு வந்ததில் கர்த்தருக்கு ஒரு பெரிதான நோக்கமாயிருந்தது. அவர் தன்னுடைய ஆயுத மாக மோசேயைப் பயன்படுத்தச் சித்தங் கொண்டு அவரைப் பயிற்றுவித்து மீண்டும் அவர் பிறந்த எகிப்திற்கு அனுப்பிவைக்கச் சித்தங் கொண்டார். எகிப்து தேசத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் தன்னுடைய மக்களாகிய இஸ்ரவேலர்களை கர்த்தர் மறந்துவிடவில்லை, அவர்களுடைய கூக்குரலைக் கேட்டார், ஆபிரகாமையும் அவருக்குக் கொடுத்து உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தார். மீதியான் தேசத்திலே ஒரு விடுதலை செய்யும் வீரரைக் கர்த்தர் உருவாக்கினார். மீதியான் தேசத்தில் பெற்றுக் கொண்ட அனுபவமே இஸ்ரவேலர்களை வனாந்தரத்தில் வழிநடத்த உதவியது.

**I. எரியும் முள்செடி (யாத் 3:1-6)**

## A. மோசேயைக் கர்த்தர் அறிந்து கொண்ட சூழ்நிலை (யாத் 3:1-4)

மீதியான் தேசத்தில் 40 வருடங்கள் சென்ற பின்பு, மோசே இன்னமும் தன்னுடைய மாமனாரின் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தார். மோசேயைப்பற்றி அதிகம் எழுதப்படவில்லை, மோசே தனது மாமனாராகிய எத்திரோ, மீதியான் தேசத்து ஆசாரியன், அவருடன் இணைந்து வாழச் சம்மதித்து, அவருடைய மந்தைகளையே மேய்த்துக் கொண்டிருந்தார், அவருக்கென்று மோசே எதையும் தேடவில்லை. தனக்கென்று மந்தைக் கூட்டம் கூட இல்லாமல், திருப்தியான விசுவாச வாழ்வு வாழ்ந்து வந்தார். கர்த்தர், மோசேயை அரச மாளிகையைவிட்டு, விட்டு அகற்றினதே, இஸ்ரவேலர்களை விடுவிக்கும் தன்னுடைய மிகப்பெரிய பணியைச் செய்வதற்காக வாகும். வனாந்தரத்தில் நாடோடி வாழ்க்கையைக் கற்றுக் கொள்ளவும், வனாந்தரப் பாதைகளைக் கற்றுக் கொள்ளவும், தண்ணீர் எங்கே கிடைக்கும், சாப்பாட்டை எப்படி தேடிக் கொள்வது என்ற அனுபவங்களைப்பெற்றுக் கொள்ளவும் மீதியான் தேசத்து வாழ்க்கை மோசேக்கு மிகவும் உதவியாக இருந்தது. அவர்பெற்றுக் கொண்ட கல்வி அறிவோ இலக்கிய அறிவோ பெரிதும் உதவியதாக இல்லை. கர்த்தர் 40 வருடமாக மோசேயை வனாந்தரத்தில் கற்பித்தவைகள், இஸ்ரவேலர்களை 40 வருடம் வனாந்தரத்தில் வழிநடத்தபெரிதும் உதவியது.

நாளாந்தம் நாங்கள் செய்யும் வேலைகள் எங்களுக்கு விருப்பம் இல்லாமல் இருக்கலாம், இதனைவிட்டு வேறு சிறப்பான வேலை செய்வதற்கு நாம் கனவு காணலாம். எங்கள் சோர்வான வேலையை விட்டு மேலான வேலையில் ஈடுபட்டு எங்களைக் காத்துக் கொள்ள நாம் விருப்பமடையலாம். சிலபேர் மிஷனறிகளாகச் சென்று வெளிநாடுகளில் வேலைசெய்து கர்த்தரை அறிவிக்க விரும்பலாம், ஆனால் அயல் வீட்டுக்காரனுக்குச் சத்தியம் சொல்லவிருப்பம் இல்லாமல் இருப்பார்கள். மோசேயின் வாழ்க்கையிலிருந்து பெரிய பாடத்தை நாம் கற்றுக் கொள்ளல் வேண்டும். எங்கே கர்த்தர் எங்களை வைத்திருக்கின்றாரோ, அங்கேயேயும் கர்த்தர் தந்த
வேலையைக் செய்து கொள்ளல் வேண்டும். மோசே வனாந்தரத்தின் பின்பக்கமாக மந்தைகளை மேய்த்துவருவார், அந்த இடம் ஒரேப் பர்வதத்தின் கீழ்ப்பக்கமாகும், அங்கு வைத்தே மோசேயின் 80வது வயதில் கர்த்தர் மோசேயுடன், தான் கொடுக்கும் பெரிய வேலையைக் குறித்துப் பேசினார். மோசேயின் அழைப்பிலிருந்து, ஒவ்வொருவரின் வாழ்விலும் கர்த்தருடைய திட்டம் உண்டு என்பதை நாம் விளங்கிக் கொள்ளே முடி யும். இந்த அறிவு எங்களை உற்சாகப்படுத்தும், ஆகவே நாம் எங்கள் நாளாந்த கடமை களை கர்த்தரை உயர்த்தும் வண்ணம் செய்வோமாக.

சீனாய் மலையின் நிழலில்தான், மோசே நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டார். கர்த்தர் எரியும் முட்செடியிலும் இங்கே தான் தன்னை மோசேக்கு

வெளிப்படுத்தினார். மோசே அந்தக் காட்சியைக் கண்டபோது திகைத்துப்போயிருந்தார், முட்செடி வேகாமல் இருப்பது அவருக்கு மிகவும் ஆச்சரியமாகவும் இருந்தது, அதனைக் கண்டு கொள்வதற்காக செடியின் அருகே போக முயற்சித்தார், என்ன ஆச்சரியம், கர்த்தர் மோசேயின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். மோசேக்கு, இந்த எரியும் முட்செடியின் அதிசயத்திலும் பார்க்க, கர்த்தருடைய அழைப்பு பெரிய அதிசயமாக இருந்தது, கர்த்தர் அதற்கூடாக தன்னை வெளிப்படுத்தினது மகாபெரிய அதிசயமாகவிருக்கின்றது. இதன்மூலம் கர்த்தர் மோசேயின் கவனத்தைத் தன்பக்கமாகத் திருப்பிக் கொண்டார். இவரே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவன்.

இதுதான் மோசேயின் பெற்றோர் அவரது சிறுவயதில் கர்த்தரைப்பற்றிக் கூறிய ஞானமாகும். அவர், ஆபிரகாம் அழைக்கப்பட்டதை, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளையும், உடன்படிக்கைபற்றியும் அறிந்திருக்கின்றார். இவைகளே, மோசே எகிப்தில் தன்னுடைய மக்கள் ஒடுக்கப்படுவதைக்குறித்துச் சிந்திக்கவைத்திருக்கலாம். எரியும் முட்செடி அவிந்துபோகாமல் இருந்தது, இஸ்ரவேல் மக்களும் அழிந்து போவதில்லை என்பதின் வெளிப்பாடேயாகும். 400 வருடங்களுக்கு மேலாக, அவர்கள் எகிப்திலே வாழ்ந்தார்கள், இந்த நேரத்தில் அவர்கள் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள். உண்மையில் அவர்களை ஒரு திடகாத்திரமான ஜனங்கள் என்றுதான் கூறவேண்டும், காரணம், அவர்களை அழிக்கும்படிக்கு எவ்வளவோ ஒடுக்குதலை எகிப்தியர்கள் கொடுத்திருந்தும், அவர்களை அழிக்க முடியவில்லை. உண்மையில் இந்த ஒடுக்குதலில் காப்பாற்றப்பட்டதே இஸ்ரவேலர்களுக்கு கிடைத்த ஒரு அற்புத வெற்றியாகும், உண்மையில் இறைவனின் துணையின்றி இந்த வெற்றியைப் பெற்றிருக்க முடியாது.

**B. ஆராதிக்கும்படியான தனிப்பட்ட அழைப்பு (யாத் 3:5-6)** மோசேயின் அழைப்பு ஏன் எரியும் முட்செடி வெந்து போகவில்லை என்பதைச் சொல்லும்படிக்காகவல்ல. கர்த்தருடைய பிரசன்னம் ஒரு அற்புத்ததைச் செய்கிறது என்பதை மோசே அறிந்தி ருந்தார். எரியும் முட்செடியிலுருந்து வந்த சத்தம் தேவனுடையதாகும் அது கம்பீர மான கட்டளையாக இருந்தது. *“இங்கேகிட்டிச்சேராயாக; உன்கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம்பரிசுத்த பூமி என்று கர்த்தர் மோசேக்கு கூறினார்”.* கர்த்தர் பிரசன்னமாகும் எந்த இடமும் பரிசுத்தமே. பாதரட்சைகள் அகற்றுதல் என்பது ஆராதனை செய்யும் இடத்திற்குள் நுழையும் போது பாத இரட்சைகளை அகற்றுதல் வழக்கமாகும். உலகத்திலுள் அசுத்தகங்களுடன் தொடர்பு கொள்வதும் பின்பு பரிசுத்த இடத்திற்குச் செல்லும் போது சுத்தப்படுத்துவதற்கும் அடையாளமாகும். பரிசுத்த கடவுளைத் தொழுது கொள்ளும்போது நாமும் எங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்ளுதல் வேண்டும். பரிசுத்த பூமிக்கும் மோசேக்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் என்பதற்காகவும் பாதரட்சையை கழட்டு என்று கூறியிருக்கலாம். மோசே தன்னுடைய முகத்தை

மறைத்ததன் மூலம் தன்னுடைய மரியாதையைச் செலுத்தினார்." *அவரை நிமிர்ந்து பார்ப்ப தற்கு மிகவும் பயந்தான்"* இதிலிருந்து ஆராதனைக்கு நாம் எப்படிக் கலந்து கொள்ளல் வேண்டும் என்று விளங்குகிறது அல்லவா? எங்கள் வீட்டிலாகிலும், பரிசுத்த ஸ்தலத்திலாகிலும் சரி நாம் பரிசுத்தமாகவே அவர் சந்நிதிமுன் செல்லல் வேண்டும். கர்த்தர் மாறாதவர், அவர் இன்றும் ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவனாயிருக்கிறார். அவர் பிரசன்னமாகும்போது பரிசுத்தத்தை எதிர்பார்க்கின்றார். நாம் அவரைச் சந்திக்கும் போது உலக ஆசாபாசங்களுடனும் சந்திக்க முடியாது.மோசே சரியான முறையில் தேவ சமூகத்துக்கு பயபக்தியுடன் வரும்படி கட்டளையிடப்பட்டார். பயத்தோடும் பரிசுத்தத்தோடும் தேவ சமூகத்திற்குச் செல்வோமாக.

### II. மோசேயின் அழைப்பு (யாத் 3:7-15)

**A. பெரிய தேவையும், பெரிய வாக்குறுதியும். (யாத் 3:7)**கர்த்தரின் தன்னுடைய பிள்ளைகளை விடுவிக்கும் பிரதிநிதியாக மோசேயை ஏற்படுத்துவதற்கு முன்பு, வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்கினார். மோசேக்கும், ஆரோனுக்கும் விடுதலையின் அவசியம் நன்குதெரியும், ஆனால் அவர்களுக்கு கர்த்தர் இந்த வெற்றியை மேலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பது தெரியாதிருந்தது. மனிதர்களுடைய செயற்பாடுகளைக் கர்த்தர் கவனிக்கும்போது, சகல நிலைகளையும் சரியாக அறிந்தேயிருக்கிறார். உலகத்தில் நிகழும் ஒவ்வொரு சம்பவமும் கர்த்தருக்குத் தெரியும். பரலோகம் அமைதியாக இருக்கிறபடியால், இஸ்ரவேலர்கள் தங்களைக் கர்த்தர் மறந்துவிட்டார் என்று நினைத்திருக்க கூடும். கர்த்தர் இன்னமும் எங்களில் அக்கறை கொள்ளவில்லையே என்ற ஏக்கம் இருக்க கூடும். எல்லா அரசாங்கத்தினதும், ஒவ்வொரு தனிமனிதனதும் இருதயத்தின் நினைவுகளைக் கர்த்தர் அறிந்தவராகவே இருக்கின்றார். கர்த்தர் எங்கள் சுகநலத்தைக்கேட்கவில்லை, எங்கள் துயரங்களைப் பார்க்கவில்லை என்று ஏங்குகிறாயா? நிச்சயமாக கர்த்தருடைய மௌனம் கலைந்து உனக்கு உதவிக்கு அவர் ஓடிவருவார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேலர்களின் கூக்குரல் தேவ சமுகத்தில் வந்தது, கர்த்தருடைய மனம் இரங்கியது. கர்த்தர் ஓரேப்மலையில் இறங்கிவந்தார் மோசேயுடன் பேசினார், **விடுதலை மீட்பராக அவரை நியமித்தார்**.

**B. மிகப்பெரிய வாக்குறுதி. (யாத். 3:8-9)**தன்னுடைய பிள்ளைகளின் நிலையைக்கண்டு கர்த்தர் கவலையை மட்டும் தெரிவிக்கவில்லை.அல்லது எப்படி அந்த துக்கத்திலிரு ந்து மீண்டு கொள்வது என்ற திட்டத்தை மட்டும் கொடுக்கவில்லை. அவர் அந்த பிரச்சனையிலிருந்து விடுபடுவதை மட்டுமல்லாமல், எதிர்கால ஆசிர்வாதமும் அருளச் சித்தம்கொண்டார். பல வருடகாலமாய், மோசேயை ஒரு விடுதலை வீரனாகப் பயிற்றுவித்தார். அதுமட்டுமல்லாமல் இஸ்ரவேலர்களை எண்ணிக்கையில்

அதிக மாக்கினார். விடுதலையைப் பற்றி குறைவாகக் கூறாமல் சுதந்திரத்தினையும் காண்பித்தார். அவர் கானானின் மகிமையையும் அதன் ஆசீர்வாதங்களைப்பற்றியும் வாக்குறுதியளித்தார்.

**C. இப்போது நீ வா;- (யாக் 3:10)** “ *நான் உன்னை அனுப்புவேன்”* வாக்குறிதிகளை மோசேக்கு கர்த்தர் அளித்த பின்பு, அவர் தன்னுடைய தெரிவுசெய்யப்பட்ட தன்னுடைய திட்டத்தை செயற்படுத்தும் ஓர் ஆயுதமாக மோசேயை அழைத்தார், இந்த மோசே தான் எகிப்திலிருந்து அகதியாக ஓடித்தப்பினவர், 40 வருடங்களுக்கு இந்த மக்களுக்கு உதவிசெய்தபோது தோல்வி கண்டவர், இதன் நிமித்தம் எகிப்தை விட்டு வெளியேறியவர், இதே மனிதனையே மீண்டும் பார்வோனோடு பேச்சுவார்த்தை நடத்தி தனது மக்களை விடுவிக்க கர்த்தர் அழைக்கின்றார்.

**D. மோசேயினுடைய தாழ்மை (யாத்3:11-12)** மோசே கர்த்தருடைய அழைப்பைப் பெற்றபின்பு குளறி அழத் தொடங்கினார், *“பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம் என்றான்.* “அரச மாளிகையில் வளர்ந்த இந்த மனிதனில் எவ்வளவு பெரிய மாற்றம், தன்னால் இந்த பெரிய வேலையைச் செய்வதற்கு எப்படி முடியும். வனாந்தரத்தில் வாழ்ந்த காலங்களில் தன்னுடைய பெலத்தையும் பெலவீனங்களை நன்கு அறிந்திருந்தார், அவர் தன்னைத் தாழ்த்தி, இது என்னால் எப்படி முடியும், நான் எப்படிப் போவது என்று ஆதங்கப்படுகின்றார். உண்மையில் கர்த்தர் இவரை இந்த வேலைக்கு ஏற்கனவே பழக்குவித்துள்ளார். மோசே தன்னுடைய சொந்த தராதரத்தையே சிந்திக்கின்றார். வனாந்தரத்திலே மேய்ப்பனாக இருப்பதற்கும், ஒரு ராஜாவுக்கு தூதுவனாக இருப்பதற்கும், ஒரு வழிகாட்டும் தலைவனாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. மோசேயினுடைய கேள்வி இந்த பெரிய வேலையைச் செய்வதற்குத் தான் தகுதியா, தன்னால் முடியுமா, அதற்குரிய தராதரம் தன்னிடம் உள்ளதா என்பது அவருடைய பரிதவிப்பாக இருந்தது. இந்த தாழ்மையான கேள்விகளுக்கு கர்த்தருடைய பதில் ***“நான் உன்னோடே இருப்பேன்”*** இந்த கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு எப்படிப்பட்ட உறுதிமொழி கர்த்தர் கொடுக்கின்றார். இப்படியான உறுதிமொழிகளே இன்றும் எங்களைப் பெலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. *இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று இயேசு சொன்னார்.* (மத்’.28:20). இஸ்ரவேலர்களைக் கூட்டிக் கொண்டுவரும்போது ஏற்படும் சகல தடைகளும் அகற்றுவேன் என்றும், கட்டளை கொடுக்கப்பட்ட அந்த மலையிலேயே இவர்கள் என்னைச் சேவிப்பார்கள் என்றும் கர்த்தர் மோசேக்கு மேலும் உறுதி வழங்கினார். “நான்” என்ற மோசேயின் வார்த்தை “ நான்” என்ற கர்த்தரின் வார்த்தையாக மாறியது. கர்த்தர் எங்களோடு **இருந்தால், எங்களை எதிர்ப்பவன் யார்?**

**E. கர்த்தர் தன்னை வெளிப்படுத்தல்," இருக்கிறவராகவே இருக்கிறேன்". (யாத் 3:13-15)**

கர்த்தர் மட்டும்தான் சொல்லமுடியும் " நான் இருக்கிறவர்" என்று. நாங்கள் கர்த்தரால் உருவாக்கப்பட்டவர்கள், அவர் எங்களை எப்படி உருவாக்குகிறாரோ அப்படியே நாம் இருப்போம். எப்படி கடவுள் இருக்கிறார், கர்த்தர் எப்போதும் இருக்கிறவராக இருக்கிறார் கர்த்தர் எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்கிறார். அவர் பெருகுவதுமில்லை, குறுகுவதும் இல்லை. கர்த்தர் தானாகவே இருக்கிறவரும், மாற்றமில்லாதவர், நித்திய மானவர். அவர் உருவாக்கப்பட்டவர் அல்ல. அவர் விடுவிக்கிறவர், அவர் விடுதலை தரும் கர்த்தர். கர்த்தர் தனது பிள்ளைகளை கவனிக்கிறவர், தனது பிள்ளைகளின் கூக்குரலைக் கேட்கிறவர், அவர் தங்கள் பிள்ளைகளின் இரட்சகராய் இருக்கின்றார். இப்படியான கர்த்தரில் அவரது பிள்ளைகள் நம்பிக்கை வைக்கிறார்கள், மோசேயை கர்த்தரின் தூதுவர் என ஏற்றுக் கொள்கின்றார்கள்.

கர்த்தரின் சேவை விளக்கம். **(யாத் 3:16-22)**

A. **இஸ்ரவேல் மூப்பர்களுக்கான செய்தி (யாத்3:16-17)**
இஸ்ரவேல்கோத்திரங்களின் மூப்பர்களை அழைத்து மோசே கர்த்தருடைய சேவையின் விளக்கங்களைகயும் வாக்குறுதிகளையும் கூறினார்.

B **பார்வோனுக்கான செய்தி (யாத் 3:18-22)** மோசே கர்த்தருடைய செய்தியை பார்வோனுக்குக் கூறச்சென்றபோது சகல கோத்திரத்தின் மூப்பர்களும் இணைந்து கொண்டார்கள் .*"நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம் போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி எங்களைப் போகவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.* இது ஒரு தரமான வேண்டுகோளாகும், இதனால் பார்வோனின் உள்ளத்தை அளவிடமுடியும். இதற்குச் சாதகமாக பார்வோன் பதில் தரமாட்டார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இதனால் கர்த்தரின் நியாயத்தீர்பு இவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

III. **கர்த்தர் மோசேக்கு அற்புத வல்லமை கொடுத்தது (யாத் 4:1-9)** கர்த்தர் மோசேக்குத் தெளிவான விளக்கங்களைக் கொடுத்தார். ஆனாலும் மோசே அதனை ஏற்றுக் கொள்வதற்குத் தயங்கினார். மோசேயை உற்சாகப்படுத்த மூன்று அடையாளங்கள் கொடுக்கப்பட்டன. கர்த்தர் தன்னுடைய தூதுவனாக நியமித்தார். இவைகளே சரித்திரத்தில் பதியப்பட்டுள்ள முதலாவது அற்புதங்களாகும்.

1. அவருடைய மேய்பனின் கோல் சர்ப்பமாகமாறியது.
2. அவருடைய கை குஷ்டமாக மாறியது

3.நைல் நதியின் தண்ணீரை நிலத்தில் ஊற்றியபோது அது இரத்தமாக மாறியது.

இந்த சாதராண கைத்தடி பார்வோனின் செங்கோலை விட அதிக வல்லமையுடையதாக மாறியது. நைல் நதியின் மாற்றம் மரணத்தின் அறிகுறியாக மாறியது.

**ஆரோன் மோசேயின் வாயாக நியமிக்கப்பட்டார்**. **(யாத்4:10-17);-** கர்த்தர் மோசேயைப் பயிற்றுவித்த தெய்வீக சேவைக்கு செல்வதற்கு செல்லாமல் இருப்பதற்கு பலபக்கங்களிலும் வழியைத் தேடினார். அவருடைய வனாந்தரப் பாடசாலை, தாழ்மையை அவருக்கு கற்பித்தது, அவருடைய பெலவீனத்தைக் குறித்து விழிப்படையச் செய்தது. அவருடைய சந்தேகம் கர்த்தருடைய வல்லமையைக் குறித்தல்ல, தன்னுடைய சொந்த பெலத்தைக்குறித்தும், கர்த்தருடைய சேவைக்கு தன்னுடைய தகுதி பற்றியுமேயாகும். கர்த்தர் அமைதியோடு இருந்து மோசேயைப் பேசவிட்டார். சகல பிரச்சனைகளுக்கும் வாக்குறுதிகளைக் கொடுத்துப் பெலப்படுத்தினார். ஒவ்வொரு சந்தேகத்துக்கும் கர்த்தர் பதில் கொடுத்தார், ஒவ்வொரு பயத்துக்கும் வாக்குறுதி கொடுத்தார், எல்லாத் தேவைகளையும் சந்திப்பதாக கூறினார், மனித பெலவீனங்கள் யாவற்றிற்கும் தெய்வீக பெலன்தருவதாக கூறினார். மோசேயின் வாழ்கையைப் படிக்கும் போது நாங்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றோம். கர்த்தருடைய அன்பு, கிருபை, பொறுமை, தயவு என்பன நாம் நினைப்பதற்கும் மேலானது. கர்த்தர் எங்களுக்கும் விசுவாசத்தைக் குறித்தும், நம்பிக்கை குறித்தும் போதிப்பாராக. சின்ன விடயத்திலும், பெரிய விடயத்திலும் அவர் போதுமானவர் என்பதை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். மோசேயும் தன்னுடைய அழைப்பின் விடயத்தில், தன்னுடைய பயத்தைக் கர்த்தருக்கு வெளிப்படுத்தி, அவருடைய வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டார்.கர்த்தர் மோசேக்கு உதவியாக அவருடைய சகோதரரான ஆரோனை அவருடைய பேச்சாளராக நியமித்தார். ஆரோன் உதவியாளனாக மோசேக்குத் தேவையாக இருந்தது. மோசே தன் மாமனாராகிய எத்திரேவிடம் எகிப்திற்குப்போவதாக கூறி சம்மதம் பெற்று எகிப்திற்குச் சென்றார்.

**VI. மூன்று கூட்டங்கள் (யாத்.4:24-31)**

**A. மோசேயின் மகன் விருத்தசேதனம் செய்யப்படல்**. **(யாத். 4:24-26)** மோசே தன்னுடைய இளைய மகனை விருத்தசேதனம் செய்வதை தவிர்த்திருந்தார், இது கர்த்தருக்கும், அவருடைய பிள்ளைகளுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாகும்.மோசே விருத்தசேதனம் செய்யாமல் விட்டது கர்த்தருடைய பார்வையில் தவறாக இருந்தது, அதனால் அவர் அவனை அடிக்கப் பார்த்தார், ஆனால் அவரது மனைவி அந்த தவறைச் சரிப்படுத்துவதற்காக மகனை அவளே விருத்தசேதனம் செய்தாள், அதனால் மோசே தப்பிக் கொண்டார்.

B. **மோசேயும் ஆரோனும் சந்தித்தல். (யாத். 4:27-28).** சீனாய் வனாந்தரத்தின் அடிவாரத்தில் மோசேயும் ஆரோனும் திரும்பவும் சந்தித்தார்கள். இங்கு எகிப்திலிருந்து எப்படி தன்னுடைய ஜனங்களை ஒடுக்கப்படுவோரிடமிருந்து எப்படி மீட்டுக் கொள்வது என்று கலந்தாலோசித்தார்கள்.இது கர்த்தரால் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய சேவையாகும்.

**இஸ்ரவேல் மூப்பர்களோடு சந்தித்தல். ( யாத். 4:29-31)** இஸ்ரவேல் ஜனங்களும் மூப்பர்களும் மோசேயையும், ஆரோனையும் தேவனால் அனுமதிக்கப்பட்ட தலைவர்கள் என ஏற்றுக்கொண்டார்கள். கர்த்தர் இஸ்ரவேலர்களைச் சந்திப்பார் என்றும், அவர் கர்த்தரை ஆராதிப்பார்கள் என்றும் விசுவாசித்தார்கள்.

## அறிமுகம்.

**மோசேயின் ஊழியம். யாத். 5-11** மோசேக்கும் ஆரோனுக்கும் கர்த்தர் கீழ்க்கண்டவாறு கட்டளையிட்டிருந்தார் "நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக்கூட்டி, அவர்களிடத்தில்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனமாகி, உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, எகிப்தில் உங்களுக்குச் செய்யப்பட்டதைக் கண்டேன் என்றும், நான் உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து நீக்கி, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய கானானியர் ஏத்தியர் எமோரியர் பெர்சியர் ஏவியர் எபூசியருடைய தேசத்துக்குக் கொண்டு போவேன் என்றும் சொன்னேன் என்றார் என்று சொல்லு."( யாத்.3:16அவர்கள் இந்த விடயங்களைப் அறிவித்தார்கள், கர்த்தர் சொன்ன அடையாளங்கள் பற்றியும் கூறினார்கள். கர்த்தர் சொன்ன வாக்குறுதிகள் நிமித்தம், ஜனங்கள் அவர்களை நம்பினார்கள். அவர்களின் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் கர்த்தர் கண்டார். இந்த நேரம் தொடக்கம், மோசேயும், ஆரோனும் தேசத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்களானார்கள். பார்வோனுக்கு முன்பாக மோசே போவதற்கு முன்பாக ஜனங்கள் விசுவாசத்திலும் ஒரே நோக்கத்துடனும், ஒரே நம்பிக்கையுடனும் இருந்தார்கள்.

## பார்வோனுக்கு முன்பாக மோசே செல்லுதலும் அதன் பயன்களும். (யாத். 5:1-23)

A. **எகிப்திய பேரரசனுடன் நேர்முகம் (யாத். 5:1-4)** எகிப்திய ராஜா திறந்த முற்றத்தில் தோன்றுவார், அவரை நிதி சம்பந்தமான விடங்களையோ அல்லது விருப்பமான முறைப்பாடுகளையோ அங்கு கூறலாம். இவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக, மிகுந்த நம்பிக்கையுடனும், தைரியத்துடனும், மோசேயும் ஆரோனும் நிற்கிறார்கள், அவர்கள் தங்கள் மக்களை தங்கள் ஆண்டவருக்குப் பலிசெலுத்துவதற்கும், அவரை ஆராதனை செய்வதற்கும் போக

அனுமதிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். இந்த அரசனின் பார்வையில் இந்தவேண்டுதல்கள் நியாயமற்றதாகவே காணப்பட்டது. எகிப்திய ராஜா ஒரு கொடூரமானவன், எகிப்தின் தேவனும் தானும் சமமானவர் என்றே தன்னைக் கருதுகிறவர், "இஸ்ரவேலின் கர்த்தர்" என்ற வார்த்தையும், "என்னுடைய மக்கள் " என்ற வார்த்தையும், அரசனை மிகவும் எரிச்சல் படுத்தியது. அவன் தன்னுடைய பெருமைளைக் காட்டுமுகமாக "யார் இந்த கடவுள், இவருக்கு நான் கீழ்ப்படிவதற்கு" அந்தக் கடவுளை நான் அறியேன் என்றும், இஸரவேலர்களை நான் போக அனுமதிப்பதில்லை என்று கூறினான் இஸ்ரவேலர்கள் ஆராதிக்க விரும்பிய கடவுளை பார்வோன் இழிவாக கருதினான். அரசனின் விருப்பத்தின்படி, அவர்களுடைய தெய்வம் வணக்கத்திற்குரியவரல்ல என்றும் இந்த ஜனங்கள் மனிதர்களாக மதிக்கப்பிடக் கூடியவர்களுமல்லவென்றும் கூறினான்.

பார்வோன் மிகப்பெரிய வல்லமையுள்ள நாட்டின் பிரதிநிதியாக இருக்கின்றார். ஏன் அவர் தன்னுடைய அடிமைகளினால் உத்தரவிடப்படவேண்டும். அந்த ஆண்டவரை நான் அறியேன் என்று பார்வோன் தன்னுடைய நம்பிக்கை இன்மையை வெளிப்படுத் தினார். இந்த கர்த்தர்மேல் நம்பிக்கை இல்லாத தன்மையே எல்லாப் பாவத்திற்கும் வேராக அமைகின்றது. உண்மையான சர்வ வல்லவரான இந்தக் கர்த்தருடன் தான் எவ்வளவு தூரம் முரண்படப் போகின்றார் என்பதை பார்வோன் கொஞ்சம் கூட அறியாமலும், உணராமலும் இருந்தான். இந்த மிகவும் வல்லமையான அரசன், உலகத்தின் பார்வையில், சர்வ வல்லவருடைய கைக்கு முன்பாக வணங்கியேயாக வேண்டும் என்பதை விரைவிலோ, அல்லது தாமதித்தோ அறிந்து கொள்ள முடியும். இஸ்ரவேல் மக்களின் விடுதலையானது, மீட்பானது குழப்பத்திலேயே உள்ளது.., பார்வோனின் இருதயத்தில் இஸ்ரவேலர்களைப் போகவிடுவதற்கான சம்மதம், அத்துடன் இஸ்ரவேல் மக்களின் இருதயத்தில் புறப்பட்டுச் செல்வதற்கான விருப்பம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கான தொடர்ச்சியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது கர்த்தருக்கு அவசியமாக இருக்கின்றது. அதனாலேயே, கர்த்தர் தொடர்ச்சியான சில சோதனைகளை இஸ்ரவேல் மக்களுக்கு ஏற்படுத்தினார், பார்வோனுக்கும் சிட்சையை ஏற்படுத்தினார்.

**B. முடிவு- அரச உத்தரவு** ; **" வைக்கோல் இன்றி செங்கல்" (யாத் 5:5-14)** மோசேயும் ஆரோனும், பார்வோனினால் குழப்பக்கார்ராகவே நடத்தப்பட்ட பின்பு,எபிரேயர் மீது இன்னும் கடுமையான ஒடுக்குதல் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதுமேலும் அதிக வேதனைகளைச் சேர்க்கும் படியான கட்டளையாகும், பார்வோன் இஸ்ரவேலர்கள் மேலும் அவர்களுடைய கர்த்தர் மேலும் தன்னுடைய வெறுப்பைக் காண்பித்தான். மிகக் கொடூரமான கட்டளை உடனடியாக அமுல்படுத்தப்பட்டது, செங்கல் செய்வதற்கான மூலப் பொருள்கள் கொடுக்கப்படவில்லை, வைக்கோல்

இன்றி குறிப்பிட்ட அளவு செங்கற்கள் தரவேண்டும் என்று ஆளோட்டிகள் கொடுமைப் படுத்தினார்கள்.

**C. இஸ்ரவேலர்களின் முறைப்பாடு (யாத் 5:15-21)** நான்காம் அதிகாரத்தில் இஸ்ரவேலர்கள் சந்தோஷத்துடன் கர்த்தரை ஆராதித்தார்கள். ஆனால் ஐந்தாம் அதிகாரத்தில் அதே ஜனங்கள் கசப்போடும் நம்பிக்கை இல்லாமலும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்ற செய்தி ஒரு புறமிருக்க, அவர்களை அடிமைப்படுத்தும் வல்லமைக்கு எதிர்த்து நிற்பது மிகவும் பாரதூரமான வேலையாக இருக்கின்றது. இயல்பாகவே பாவத்தின் ஆளுகை துன்பமானது, அவர்களுடைய கசப்பான அனுபவங்கள் மூலம் நானும் நீங்களும் விசுவாசத்தில் உறுதியாக இருந்து எம்மைப் பெலப்படுத்த வேண்டும். இஸ்ரவேலர்களை விடுவிக்கும் முதலாவது முயற்சியே கடும் துக்கத்தில் முடிந்தது, இதிலிருந்து அவர்கள் அடிமைத்தனத்தில் மிகவும் வாதிக்கப்படுவதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அவர்களுடைய மனக்கிலேசத்தில், இஸ்ரவேலர்களின் அதிகாரிகள், மோசேயையும், ஆரோனையும் அலட்சியம் செய்தார்கள், நேரடியாகப் பார்வோனிடம் சென்று தங்கள் முறைப்பாட்டைத் தெரிவித்தார்கள், ஆனால் பார்வோன் அவர்களுக்கு இரங்காமலும் மனம் இழகாமலும் இருந்தான். இந்த நிலமைக்கு ஆரோனும், மோசேயுமே காரணம் என அவர்கள் இருவரையும் குற்றப்படுத்தினார்கள். இதனாலேயே மோசேயின் முதலாவது முயற்சி பலனின்றி தோல்வியில் முடிந்தது. பார்வோனின் எதிர்ப்பும், இஸ்ரவேலர்களின் எதிர்ப்பும், இரண்டு மடங்காக ஆரோனையும், மோசேயையும் பாதித்தது. அவரால் திரும்பவும் ஒன்றுபட்டு கர்த்தரின் வேலையைச் செய்ய முடியாமல் இருந்தது. பார்வேன் தனது மக்களை வேலைக்கு அமர்த்தி கடும் துன்பத்தை ஏற்படுத்தமாட்டார் என மோசே நம்பினார்.

**D. மோசேயின் ஜெபம். (யாத் 5:22-23)** ***"சிலர் கர்த்தர் தாமதிக்கிறார் என்று எண்ணுகிறார்கள், கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதிப்பதில்லை"*** **(2 பேது 3:9).** எங்களுடைய எண்ணங்கள் யாவும் தோல்வியில் முடியும்போது, எல்லாம் முடிந்தது என்றே எங்களுக்குத் தோன்றும், நாம் போவதற்கு ஒரு இடம் உண்டு, ஒரேயொருவர் எங்களுக்கு ஒத்தாசை செய்ய ஆவலாய் உள்ளார், அவரே கர்த்தர். மோசேயினால் செய்யப்பட்டவை எல்லாம் எங்களுக்கு உதாரணங்களாகும். வேதனையோடும், நம்பிக்கையோடும், அவர் கர்த்தரிடத்திற்குச் சென்றார். அங்கே நேரடியாக கர்த்தரை அணுகும் முறையைக் கவனிக்கின்றோம், அவர் தன்னுடைய வாயைத்திறந்து இருதயத்திலுள்ள பிரச்சனைகள், சந்தேகங்கள் யாவற்றையும் கூறினார், அதுமட்டுமல்ல கர்த்தருடைய வாக்குறுதிகளையும் ஞாபகப்படுத்தினார். மோசேயின் வார்த்தைகள் சினத்துடன் கூறப்பட்டவைகள் அல்ல, ஆனால் அது ஒரு ஜெப விண்ணப்பமாக இருந்தன. அதனால் கர்த்தர் குற்றப்படுத்தப்படவில்லை, அவர்

நிதானமாக கிருபையான வாக்குறிதிகளையும், அதன் நிச்சயத்தன்மையையும், கூறி மோசேயை அமைதிப்படுத்தினார். அதனால் மோசேயின் இருதயம் ஆறுதல் அடைந்தது.

**II. விசுவாசக்குலைச்சலான கர்த்தருடைய பதில் (யாத் 6:1-7:13)**

A. **"இப்போது நிங்கள் காண்பீர்கள்" (யாத். 6:1)** ஜனங்கள் ஒடுக்கப்பட்டது தான் மோசே எகிப்திற்கு வருவதற்கு காரணமாக அமைந்தது, முதலாவது நேர்முகச் சந்திப்பில், ராஜா மறுத்துவிட்டான், இஸ்ரவேல் மக்களின் கடுமையான அடிமைத்தனம், இவை எல்லாம் சேர்ந்து மோசே கர்த்தருக்கு முன்பாக குளறி அழவைத்தது. கர்த்தர் மெதுவாக இதில் பதில் கொடுத்தார், அதாவது கர்த்தர் சொன்ன வாக்குறிகளும், நடக்கும் என்று முன் உரைக்கப்பட்டவைகளும் நிறைவேறும் என்று கூறினார். கர்த்தர் சொன்ன யாவற்றையும் நிறைவேற்றுவாரா என்று கேட்பது எங்களுடைய வேலை அல்ல. எங்களுடைய வேலை, அவர் கொடுத்த பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்து முடிப்பது மட்டும் தான், முதற்பகுதியில் ஏற்பட்ட சந்திப்பினால் பார்வோனின் எதிர்ப்பையும், இஸ்ரவேலர்களின் நம்பிக்கையீனத்தையும், மோசேயின் பெலவீனத்தையுமே சம்பாதிக்க முடிந்தது. " நான் பார்வோனுக்குச் செய்வதைப் பார்" என்று இப்போது கர்த்தர் மோசேக்குச் சொல்லுகின்றார், அங்கே தான் இஸ்ரவேலர்களின் விடுதலை ஆரம்பமாகின்றது. முன்பு கொடுத்த வாக்குறுதிகளையும், பிரகடனங்களையும் கர்த்தர் புதுப்பிக்கின்றார். கர்த்தருடைய பலத்த கரம் பார்வோன்மீது அமர்ந்தது, நாட்டை விட்டு தனது மக்களை வெளியேற்றும் காலம்வரும்.

B. **கர்த்தருடைய நாமமும், இஸரவேலர்களுக்கு அதன் முக்கியத்துவமும். (யாத்6:2-5)**

இஸ்ரவேலர்களுக்கு தன்னைத் தன்னுடைய நாமத்தினால் வெளிப்படுத்துவேன் என்று கர்த்தர் மோசேக்கு வாக்குக்கொடுத்தார். கர்த்தர் முற்பிதாக்களுக்கு தன்னை சர்வவல்லதேவன் என்று வெளிப்படுத்தினார், ஆனால் யோகோவா என்ற நாமத்தினால் நான் அவர்களை விடுவிப்பேன் என்றார். நாமங்களை அவர் வெளிப்படுத்தியிருந்த போதும், இஸ்ரவேலர்களுக்கு அதன் முழ அர்த்தமும் தெரியாதவர்களாகவே இருந்தார்கள். "El Shaddai எல்சடாய்"என்ற நாமம், எல்லாம் என்னால் ஆகும் என்று பொருள்படும், இந்த நாமமே முற்பிதாக்களுக்கு நம்பிக்கையையும், ஆறுதலையும் தெய்வீகப் பாதுகாப்பையும் வல்லமையையும் கொடுத்தது. **"Jehovah யெகோவா "**என்ற நாமம், கர்த்தருடைய வெளிப்படுத்தலும், கிருபையும், உடன்படிக்கையயம் வெளிப்படுத்திய உடன்படிக்கையின் தேவன் என்றும், அவர் தன்மக்களோடு வாசம் செய்பவர் என்றும், வழிநடத்தி

விடுவிப்பவர் என்றும், அவர்களின் ஆராதனையையும், துதியையும் ஏற்றுக் கொள்கிறவர் என்றும் பொருள்படும். இஸ்ரவேலர்கள் கர்த்தரே உண்மையான மீட்பர் என்று இப்போது அறிந்து கொள்வாராக.

**c. இஸ்ரவேல் பிள்ளைகளுக்கான ஏழு மடங்கு வாக்குறுதிகள். (யாத். 6:6-8)** முற்பிதாக்களுக்கு கொடுத்த உடன்படிக்கையின் நிமித்தமும், அந்த சந்ததியினரின் துயரத்தின் நிமித்தமும், கர்த்தருடைய அன்பும், இரக்கத்தின் நிமித்தமும், மோசேக்கு ஒரு நம்பிக்கையின் ஆறுதலின் செய்தியைக் கர்த்தர் கொடுக்கிறார்.

1. உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவிப்பேன்,
2. உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்குவேன்.
3. ஓங்கியகையினால் உங்களைமீட்டுக் கொள்ளுவேன்,
4. உங்களை எனக்குஜனங்களாகச் சேர்த்துக் கொள்ளுவேன்,
5. நான் உங்களுக்குதேவனாயிருப்பேன்;
6. ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்டதேசத்தில் உங்களைக் கொண்டுபோவேன்,
7. அதைஉங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்.

இவைகள் எல்லாவற்றையும் இருக்கிறவராக இருக்கும் கர்த்தர் செய்து முடிப்பார். அவருடைய அன்பு நித்தியமாக இருக்கிறது அவருடைய வாக்குறுதிகள் யாவும் நிச்சயமாக இருக்கிறது. நாங்கள் இருக்கும் இடத்தில் கர்த்தர் இன்று எங்களைச் சந்திப்பார். உலகத்திலே பாவத்தின் பாரத்தோடும் பிசாசின் ஒடுக்குதலோடும், இருக்கும் எங்களுக்கு, கிறிஸ்து மூலமாக கர்த்தர் இரட்சிப்பைக் கட்டளையிட்டுள்ளார். கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொள்பவர்களுக்கு மீட்பு நிச்சயிக்கப்பட்டுள்ளது, அவர் எங்களைத் தமது பிள்ளையாகத் தத்தெடுப்பதன்மூலம் நாம் பரலோகத்துக்கு உரியவர்களாகின்றோம். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவர்மேல் நம்பிக்கைவைக்கும் நாம் எவ்வளவு சுதந்திரத்திற்குரியவர்கள்.

**d. நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட ஜனங்களின் பலகீனமான விசுவாசம். (யாத்.6:9-13).** நீண்ட கால அடிமைத்தனமும் சகிப்புத்தன்மையும் இஸ்ரவேல் மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தங்கள் சுய கௌரவத்தையும், உற்சாகத்தையும் இழுந்துவிட்டார்கள். எனினும், கர்த்தர் அவர்களுக்கு சுதந்திரம் கொடுப்பதற்கு முன்பாக, அவர்களைச் சுதந்திரத்திற்குத் தகுதியுடையவர்களாக மாற்றல் வேண்டும். அவர்களது நம்பிக்கை, உற்சாகம், சுயகௌரவம், வைராக்கியம் என்பன மீண்டும் மிளிரவேண்டும். அவர்கள் நம்பிக்கையில்லாமல் தொடர்ந்தும் முறைப்பாடு செய்து கொண்டு இருப்பார்களாயின், கர்த்தரால் முன்னேசெல்ல முடியாது போய்விடும். இந்த வாக்குறுதிகள், காதுகோளாதவர்களுக்கோ அல்லது அந்நியருக்கோ கொடுக்கப்படவில்லை. அவர்கள் இந்த பொன்னான வாக்குறுதிகளை

ஏற்கனவே கேட்டுவிட்டார்கள், அது அவர்களுக்கு துக்கத்தையும் துயரத்தையுமே கொடுத்துள்ளது. அவர்கள் மோசேயின் சொல்லுக்குச் செவி கொடுக்கவில்லை, காரணம் அவர்களது ஒடுக்கு முறையும், மனக்கிலேசமுமாகும். இந்த முறை பார்வோனுக்கு முன்பாக தன்னுடைய மக்களை விடுதலை செய்யும்படியான வேண்டுதலுடன் செல்லாமல், கட்டளையுடனேயே சென்றார். திரும்பவும் துக்கம், கர்த்தருக்கு முன்பாக நின்று மோசே பேசினார். ஜனங்கள் என்னுடைய சொல்லைக் கேட்கவில்லை, எப்படி பார்வோன் கேட்பான்? மோசே, கர்த்தரைப் பார்ப்பதற்குப் பதிலாக, தன்னையே பார்க்கிறார், பார்வோனைப் பின் தொடர்பதற்குச் சந்தேகப்படுகின்றார்.

**E. ஆரோனினதும்,மோசேயினதும் வம்சாவழி (யாத். 6:14-27)** இறுதியான பொறுப்பு மோசேக்கும் ஆரோனுக்கும் கொடுக்கப்பட்டது.லேவி யாக்கோபின் மூன்றாவது மகனாவார். ரூபன், சிமியோன் என்பவர்கள் முதல் இரண்டு பிள்ளைகளாவார்கள். **அம்ராம்** தன் அத்தையாகிய **யோகெபேத்தை** விவாகம்பண்ணினான்; அவள்அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்.

**F. புதிப்பிக்கப்பட்ட சேவை. (யாத். 6:28-7:2)**மோசே முயற்சி செய்வதில் அதிக அக்கறையுடன் காணப்படும் நிலைமையில் இருந்தார். அவர் முன்பு தோல்விகண்ட வேலையைத் திரும்பவும் செய்யும்படி கர்த்தரால் அனுப்பப்படுகின்றார். மக்களுக்குப் பொதுவாக உதவி செய்ய முயற்சி செய்தார், ஆனால் இன்னும் கீழ்நிலைக்கே சென்று விட்டார். திரும்ப பார்வோனைச் சந்திப்பது என்பது கடுமையாக வீசிக் கொண்டிருக்கும், காற்றையும் அலையையும் எதிர்த்துப் போவதற்கு ஒப்பானது, கடற்கரையை அடைவதற்கான சிறு நம்பிக்கையே இவரிடம் காணப்பட்டது. இவ்வாறான தாழ்வு நிலையானது சிறிய கஷ்டங்களையும் பெரிதாக காட்டத் தொடங்கியது, திரும்பவுமாய் தான் திக்கு வாயன் என்ற குறைபாட்டை, பேசமுடியாதவன் என்ற நிலையைப் பெரிதுபடுத்திக் காண்பித்தார். தன்னாலே செய்தியைக் கொடுக்க முடியாது என்று பயந்தார். இதற்கூடாக, கர்த்தர் நீண்ட துக்கத்தை அனுபவிப்பது போல் தோன்றுகின்றது. கர்த்தர் எங்கள் பெலவீனத்தில் எங்களுக்குப் பெலன்தருகிறவராக இருக்கின்றார். பார்வோன் மோசேக்கு மரியாதைதரும் அளவுக்கு, மோசேக்கு வல்லமையும்,அதிகாரம் கொடுக்கப்படும் என்று கர்த்தர் கூறுகிறார். அவருடைய வார்த்தைகள் செயற்பாடுகளுடன் புறப்படுகின்றன. இன்றும் இது உண்மையாகவே இருக்கின்றது. அவருடைய ஊழியர்களாக நாம் போகும் போது, எங்கள் பெலத்தோடு போககூடாது, ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் செல்லல் வேண்டும். அவருடைய நாமத்தினாலும், அதிகாரத்தினாலும் பேசவேண்டும், அப்போஸ்தல நட படிகள் 24;25 இல் *“பேலிக்ஸ்பயமடைந்தார்” பரிசுத்த பவுலுக்கு முன்பாக என்றும், எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த*

*ஆவியோடும், முழுநிச்சயத்தோடும்வந்தது என்று 1.தெச 1 5இல் கூறப்பட்டுள்ளது, இதைப் போலவே* மோசேக்கூடாக தேவனுடைய வேளை வந்தது, அவர் வாக்குறுதி அளித்ததுபோலவே அவைகள் செயற்படும்,கர்த்தருக்கு ஒரு நேரமிருக்கின்றது தன்னுடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்கு.

**III. வாதைகளும் இருதயத்தைக் கடினப்படுத்தலும்(யாத் 7:3-11:10)**

**A. இருதயத்தைக் கடினப்படுத்தும் யோசனை.(யாத் 7:3)** பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தல் என்ற சொல் இருபது முறை இந்த சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

ஆரோனுடைய கோல் முதலில் சர்பமாக மாறியது, *" பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது"*- இங்கு பார்வோனாலேயே அவரது இருதயம் கடினப்பட்டது. இதற்குப் பிற்பாடு இடம்பெற்ற மேலும் ஐந்து வாதைகளிலும் பார்வோனுடைய இருதயம் அவராலேயே கடினப்படுத்தியது. ஆறாவது வாதைக்குப்பிற்பாடு, பார்வோன் எதிர்த்து நின்றான், ஆனால் பார்வோனின் இருதயத்தைக் கர்த்தர் கடினப்படுத்தினார் என்று யாத். 9;12இல் நாம் வாசிக்கலாம். மோசே செய்த அற்பு அடையாளங்கள் எல்லாவற்றையும் பார்வோன் எதிர்த்து நின்றார், ஆனால் படிப்படியாக தேவனுடைய கரம் அவனைப் பாரப்படுத்தியது என்பது சிறப்பாக விளங்குகின்றது. கர்த்தருடைய வல்லமை அவனது இருதயத்தைக் கடினப்படுத்தியது. மூன்றாம் வாதைக்குப்பிற்பாடு, பார்வோனின் மந்திரவாதிகள் *"பார்வோனைநோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள்."* ( யாத்.9;19). அவனுடைய இருதயத்தில் ஏதாவது சந்தேகம் எழுந்திருந்தால், ஐந்தாம் வாதைக்குப்பிற்பாடு, எகிப்தியரின் மந்தைகள் எல்லாம் மடிந்தன, ஆனால் இஸ்ரவேலர்களின் மந்தைகளில் ஒன்றும் மடியவில்லை, இந்த நேரத்திலாவது அவனது சந்தேகம் நீக்கப்பட்டிருக்கும். எழாவது வாதைக்குப்பிற்பாடு, பார்வோன் தன்னுடைய பாவத்தையும் தவறையும் ஏற்றுக் கொண்டான். (யாத். 9:27) அதுமட்டு மல்லாமல் இஸ்ரவேலர்களைப் போக விடுவதாகவும் கூறினான். (யாத். 9:28)ஆனால் 35ம் வசனத்தில் அவன் திரும்பவும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான். பார்வோன் கர்த்தருக்கு கீழ்படிய விரும்பாமல், இன்னும் அதிகம் பிடிவாதக்காரனாக சந்தேகக்காரனாகவும் மாறினான். ஒவ்வொரு கீழ்ப்படியாமையும், கீழ்படிதலுக்கு இடைஞ்சலாக மாறுகின்றது. இதை நாம் எங்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவே எடுத்துக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு கீழ்படியாமைக்கும் இருதயத்துடன் சம்பந்தம் உண்டு.

1.**இது இருதயத்தைத் தானாகவே கடினப்படுத்துகின்றது** அவையாவன;- கொடூரம், இச்சை,வெறுப்பு, கர்த்தருக்கு விரோதமான இரகசிய பாவம். இவை படிப்படியாக நிலையான ஆதாரங்களாக மாறிவிடும்.

2. **இவைகளுக்கு எதிராக இருதயம் தானாகவே கடினப்படும்;-** சத்தியத்திற்கும், அன்பிற்கும், நீதிக்கும் செல்வாக்குத் தேடுதல், மனச்சாட்சியையும், உணர்சிகளையும்

தூண்டுதல், பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் எதிராக கிழம்புதல், கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராதல், பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்றல்.

3. **இருதயத்தின் ஒருபகுதி கடினப்படுதல்.**;- சத்தியத்திற்கு இசைவடையும் தன்மை, நன்நடத்தைக்கு உணர்வடைதல், மத நம்பிக்கைக்கு ஒத்துப்போதலாகும். கடினப்படு வதன் முடிவு கண்மூடித்தனமாகும்–**சரியான உணர்வை இழந்துவிடுதலாகும்.** கடினப்படுத்தும் இருதயம் உள்ளவர்கள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை வருவித்துக் கொள்கிறார்கள், பார்வோனுக்கு நடந்தது போல, இது ஒரு ஏமாற்றும், சூட்சுமம் நிறைந்த வேலையாகும்.

**B. வாதைகள் அறிவிக்கப்பட்டது, நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது (யாத். 7:14-11:10)**

இந்த அதிகாரங்களில், எல்லா மனித குலத்திற்கும் தேவையான இரண்டு விடயங்கள், அபிவிருத்தி செய்யப்பட்டன.

1. நான் எகிப்தின் மேல் என் கையை நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து புறப்படப் பண்ணும் போது, நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள் என்றார். (யாத்.7:5).நான் எகிப்திலே நடப்பித்ததையும் நான் அவர்களுக்குள் செய்த என் அடையாளங்களையும், நீ உன்பிள்ளைகளின் செவிகள் கேட்கவும், உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகள் கேட்கவும் விவரித்துச் சொல்லும் படிக்கும், நானே கர்த்தர் என்பதை நீங்கள் அறியும்படிக்கும், நான் அவன் இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின் இருதயத்தையும் கடினப்படுத்தினேன் என்றார். (யாத். 10:2). இஸ்ரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டதே நான் யேகோவா தேவன் என்பதற்கான அடையாளமாகும். நானே ஜீவிக்கிற தேவனும், உண்மையான தேவனும், எல்லா மனிதர்களுடைய வல்லமைக்கும், தெய்வங்களுக்கும் மேலான கர்த்தர் நானே. இதுவே எகிப்தியர் மேல் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கான காரணமாகும்.
2. அடுத்த அபிவிருத்தியான விடயம், உடன்படிக்கையின் கர்த்தர் விசுவாசமான வர், அவர் தன்னுடைய வாக்குறுதிகளை நினைத்திருக்கிறார். அவர் தன்னு டைய மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொள்ளுவார், *"ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களைமீட்டுக் கொள்ளுவார்," "உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனா யிருப்பேன்";* (யாத். 6:1-8).இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து மீட்டுக் கொண்ட செயற்பாட்டிக்குள் நித்திய சத்தியம் இருக்கிறது.

**அறிமுகம்.;-** பத்தாவது வாதையைப்பற்றி அறிவதற்கு முன்பாக, மற்றய ஒன்பது வாதைகளையும் அங்கு ஏற்படும் சுவையான சம்பவங்களையும் கவனித்தல் வேண்டும். அந்த ஒன்பது வாதைகளையும் மூன்று பிரிவுகளுக்குள் வகுக்கலாம்.

**1** முதல் முன்று சோடிகளிலும் வாதைகளிலும் 1ம்வாதை, 4ம் வாதை, 7ம் வாதை.**காலையில் பார்வோனுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது (யாத்.7:15; 8:20; 9:13).**

**2.**இந்த மூன்று வகையான வாதைகளில் முதலாவதும், இரண்டாவதும், அவர்களுடையகைகளுக்கு முன்பாகவே வாதை அறிவிக்கப்படுகின்றது. (யாத் 7:15 , 8:1; 8:20 , 9:1; 9:13 ,10:1).

**3. மூன்றாவது சோடிகளிலுள்ள மூன்று வாதைகளிலும்** அவர்களுக்கு முன்பாக எந்த அறிவிப்பும் **கொடுக்கப்படவில்லை**. (யாத். 8:16; 9:8; 10:21

4. 3ம் வாதையில், பார்வோனின் மந்திரவாதிகள் இது கர்த்தரின் கரம் என்பதை ஏற்றுக் கொண்டார்கள்.

5. 6ம் வாதையில் 33 மந்திரவாதிகள் மோசேக்கு முன்பாக நிற்க முடியவில்லை

6. 9வது வாதையில், பார்வோன் மோசேயின் முகத்தைப் பார்க்க மறுத்துவிட்டான்.

7. முதல் மூன்று வாதைகளிலும் ஆரோனின் கோல் பாவிக்கப்பட்டது,

8. 2ம்பகுதியில் கோல் பாவிக்கப்பட்டது கூறவில்லை

9.மோசேயின் கோல் அல்லது அவரின் கை பாவிக்கப்பட்டது

10.முதல் மூன்றும் குடியிருப்பாளர்கள் சகலருக்கும்-வித்தியாசம் இல்லை

11. 7 வாதைகள் இஸ்ரவேலர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் வித்தியாசம் காண்பிக்கப்பட்டது

12. 7 வாதைகள் எகிப்தியருக்கு மட்டும்.

13. 3 வாதைகள் மிருகப் படைப்புக்களுக்கு மட்டும்.

14. 3 வாதைகள் தாவர உலகத்திற்கு மட்டும்.மிருகவர்க்கத்திற்கு உதவி.

15. 3 வாதைகள் மனித சுகாதாரத்தைப்பாதித்தது

16. 3 வாதைகள் அதிகாரிகளின் உயிரை எடுத்தது.

17. முழு வாதைகளும் முடிவடைய 10 மாதங்கள் சென்றன.

வாதைளும் அதன் பாதிப்பு வகைகளும்.

| சம்பவம் | 1ம்வகை | 2ம் வகை | 3ம் வகை |
|---|---|---|---|
| எச்சரிக்கை | காலையில் பார்வோன் எச்சரிக்கப்படல் | நேரடியான எச்சரிப்பும் வாதையும் | எச்சரிப்பு இன்றி வாதை |
| ஏற்றுக் கொள்ளல் | இது கர்த்தரின் கரம் என்று மந்திரவாதிகள் ஏற்றுக் கொள்ளல். | மோசேக்குமுன்பாக மந்திரவாதிகளால் நிற்கமுடியாது போதல் | பார்வோனால் மோசேயின் முகத்தை பார்க்க விரும்பாது போதல் |
| உபயோகிக்கப்பட்ட வர். | முதல் 3 வாதைக ளும் ஆரோனின் கோல் பாவிக்கப்படல் | 3 வாதைகளுக்கம் குறிப்பிடப்படவில் லை | 3 வாதைகள் மோசேயின் கோல்/ கரம் பாவிக் கப்ப டல். |
| பாதிப்புக்களின் வகை. | முதல் 3 வாதை களும், தேசத்தின் குடியிருப்பாளர்க ள் வித்தியாசமின்றி பாதிக்கப்பட்டனர். | 7 வாதைகள் இஸ்ர வேலர்களுக்கும், எகிப்தி யர்களைம் வித்தியா சப்படுத்திய பாதிப்பு | 7 வாதைகள் எகிப்தியர்களுக்கு மட்டும். |
| மிருகமா/தாவரமா | 3 வாதைகள் மிருகப்படைப்புக்க ள் பாதிக்கப்படல் | 3 வாதைகள் தாவரவகைகள் மட்டும் பாதிப்பு | மிருகப்படைப்புக்களு க்கு உதவியாக இருத்தல் |
| சுகாதாரப்பாதிப்பு | 3 வாதைகள் மனித உடலநலம் பாதிப்பு | மனித உயிர் பாதிப்பு | மரணம் |
| மரணம் | 10வது வாதை எகிப்தியர்களின் தலைப்பிள்ளைக ள். | எகிப்தியர்களின் மிருகங்களின் தலை ஈற்றுக்கள் | இஸரவேலர்களுக்குப் பாதிப்பு எதுவும் இல்லை |

| எகிப்பின் *10* வாதைகள் | |
|---|---|
| வாதை | குறிப்புகள் |

| | |
|---|---|
| **தண்ணீர் இரத்தமாகுதல்.** – நைல்நதி இரத்தமாக மாறியது **யாத்.7:21**நதியில் மீன்கள் செத்து, நதி நாறிப் போயிற்று; நதியின் தண்ணீரைக்குடிக்க எகிப்தியருக்குக் கூடாமற்போயிற்று; எகிப்துதேசம் எங்கும் இரத்தமாயிருந்தது.<br>சகலரும் பாதிப்பு, மோசேயின் கோலும் ஆரோனின் கோலும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டது | யாத்.. 7:14-25 |
| 3. **தவளைகள்**- எகிப்து தேசம் முழுவதும் தவளைகள் வந்தன **யாத். 8:6அப்படி**யே ஆரோன் தன் கையை எகிப்திலுள்ள தண்ணீர்கள் மேல் நீட்டினான்; அப்பொழுது தவளைகள் வந்து, எகிப்து தேசத்தை மூடிக்கொண்டது.சகலரும் பாதிப்பு ஆரோனின் கோல் எச்சரிப்பு கொடுக்கப்பட்டது | யாத்.. 8:1-15 |
| 4. **பேன்கள் (Mosquitoes)** - சிறிய பேன்கள்தேசம் முழுவதையும் தொற்றிக் கொண்டது **யாத் 8:17** அப்படியே செய்தார்கள்; ஆரோன்தன் கையில் இருந்த தன் கோலைநீட்டி, பூமியின் புழுதியின் மேல்அடித்தான்; அப்பொழுது அது மனிதர் மேலும் மிருகஜீவன்கள் மேலும் பேன்களாய் எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் பேன்களாயிற்று. எகிப்தியர்களுக்கு மட்டும் ஆரோனின் கோல் பாவிக்கப்பட்டதுஎச்சரிப்பு இல்லை | யாத்.. 8:16-19 |
| 5. **வண்டுகள்** - இவை கடிக்க கூடியவை தேசம் முழுவதும் பரவியது. **யாத்.8:24** அப்படியே கர்த்தர் செய்தார்; மகாதிரளான வண்டு ஜாதிகள் பார்வோன் வீட்டிலும், அவன் ஊழியக்காரர் வீடுகளிலும், எகிப்துதேசம் முழுவதிலும்வந்தது; வண்டுகளினாலே தேசம் கெட்டுப்போயிற்று.<br>• எகிப்தியர்களுக்கு மட்டும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டது எகிப்தியர்களுக்கு மட்டும் | யாத்.. 8:20-32 |
| 6. **கால்நடைகளுக்கான நோய்**.- இது ஒரு கொடிய நோய் **யாத். 9:6** மறுநாளில் கர்த்தர் அந்தக் காரியத்தைச் செய்தார்; எகிப்தியருடைய மிருகஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று; இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை.<br>• எகிப்தியர்களுடையவைகளுக்கு மட்டும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டது | யாத்.. 9:1-7 |
| **6. கொப்புளங்கள்**-இது ஒரு தோல்வியாதி **யாத். 9:10 அப்படியே** அவர்கள் சூளையின் சாம்பலை அள்ளிக்கொண்டு,பார்வோனுக்கு முன்பாகவந்து நின்றார்கள். மோசே அதைவானத்துக்கு நேராக இறைத்தான்; அப்பொழுது மனிதர் மேலும் மிருகஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று. அந்தக்கொப்புளங்கள் மந்திரவாதிகள் மேலும் எகிப்தியர் எல்லார் மேலும் உண்டானதினால், அந்தக் கொப்புளங்களின் நிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்கக் கூடாதிருந்தது. எகிப்தியர்களுக்கு மட்டும் | யாத்.. 9:8-12 |

| | |
|---|---|
| மோசேயின்கரம் | |
| **கல் மழை**- கல்மழையினால் தேசத்திலுள்ள பயிர்வகைகள் எல்லாம் அழிந்தன, ஆனால் எபிரேயர் வாழ்ந்த பகுதியான கோசான் பிரதேசத்தில் மட்டும் கல் பொழியவில்லை **யாத் 9:25** எகிப்து தேசம் எங்கும் மனிதரையும் மிருகஜீவன் களையும், வெளியிலே இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்தக்கல்மழை அழித்துப் போட்டது; அது வெளியின் பயிர்வகைகளை யெல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப்போட்டது. **யாத். 9:26** இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலே மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.<br>எகிப்தியர்கள்க்கு மட்டும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டது மோசேயின் கரம் பாவிக்கப் பட்டது | யாத். 9:13-35 |
| 7. **வெட்டுக்கிழிகள்.** -வெட்டுக்கிழிகள் எகிப்தின் தாவரங்கள் எல்லாவற்றையும் நாசம் செய்தது. **யாத். 10:15** அவைகள் பூமியின் முகம்முழுதையும் மூடிற்று; தேசம் அவைகளால் அந்தகாரப்பட்டது; கல்மழைக்குத் தப்பியிருந்த நிலத்தின் பயிர்வகைகள் யாவையும் மரங்களின் கனிகள் யாவையும் அவைகள் பட்சி த்துப்போட்டது; எகிப்து தேசம் எங்குமுள்ளமரங்களிலும் வயல் வெளி யின் பயிர்வகைகளிலும் ஒருபச்சிலையும் மீதியாயிருக்கவில்லை. தேசம் முழு வதும் பயிர்கள் பாதிப்பு எச்சரிப்பு கொடுக்கப்பட்டது இஸ்ரவேலர்களின் வீடுதப்பிற்று | யாத். 10:1-20 |
| 8. **மூடிய இருள்** - மூன்று நாட்கள் கடும் இருள் எகிப்து தேசம் எங்கும் மூடியது. **யாத்.10:23** மூன்று நாள்மட்டும் ஒருவரை ஒருவர் காணவும் இல்லை, ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்திருக்கவும் இல்லை; இஸ்ரவேல் புத்திரர்யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது.<br>• எகிப்தியர்களுக்கு மட்டும் மோசேயின் கரம் பாவிக்கப்பட்டது | யாத். 10:21-29 |
| 9. **முதற்பிறப்புக்கள் சாவடைதல்.**-ஒவ்வொரு குடும்பத்திலும் முதற் பிள்ளை கள் சாவடைந்தார்கள் எகிப்தியர்களுக்கு மட்டும் | யாத்.. 11:1-12:30 |

**10 வாதைகள்**

| **இயற்கை** | **தோல்வியடைந்த எகிப்திய தெய்வங்கள்** | வேதாகம குறிப்பு |
|---|---|---|
| 1. தண்ணீர் இரத்தமாக மாறுதல் | OSIRIS-ஒசிறிஸ் | யாத். 7:20 |

| | | |
|---|---|---|
| 2.தவளைகள்வந்து,எகிப்துதேசத்தைமூடிக்கொண்டது. | HEKT-ஹக்ற் | 8:6 |
| 3.கிப்துதேசம்எங்கும்பேன்கள் | SEB-ஷெப் | 8:17 |
| 4. வண்டுகளினாலேதேசம்கெட்டுப்போயிற்று. | HATKOK-ஹற்கோக் | 8:24 |
| 5. மிருகஜீவன்கள் வியாதிப்பட்டன | APIS-அப்பிஸ் | 9:6 |
| 6. எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று. | TYPHON-தைபோன் | 9:10 |
| 7. கல்மழையும்அக்கினியும் | SHU-ஷூ | 9:24 |
| 8. வெட்டுக்கிள் | SERAPIA-ஷெறாபியா | 10:13 |
| 9. மூன்றுநாள்மட்டும் காரிருள்உண்டாயிற்று. | RA-றா | 10:22 |
| 10.முதற்பேறனைத்தையும்,கர்த்தர்அழித்தார். | ALLgods- அனைத்து தெய்வமும் | 12:29 |
| | | |

**I. கடந்து செல்லுதல் (பஷ்கா) ஆரம்பித்து வைக்கப்பட்டது.** **(யாத். 12:1-20)** நாம் வேதாகமத்தின் அழுத்தத்தை சிலவேளைகளில் பெலவீனப்படுத்துகின்றோம், இங்கு இஸ்ரவேலர்களின் ஒருவித நடத்தையை விபரிக்கிறோம், அல்லது கர்த்தர் தோசத்தை நடு இரவில் கடந்து சென்றபோது, எகிப்து முழுவதும் உள்ள எகிப்தியரின் முதற்பிள்ளைகள் சங்காரம் செய்யப்பட்டார்கள். இது இஸ்ரவேலர்களுக்கு விடுதலையும், புதிய வாழ்க்கையின் ஆரம்பமுமாயிருந்தது, எகிப்தியருக்கோ மரணமும், துக்கமுமாக இருந்தது.

**A. வருடத்தின் ஒழுங்கு மாற்றப்பட்டது ( யாத்.12:1-2)**இது இஸ்ரவேல் தேசம் உருவா வதற்கான அதிகாரமாக இருக்கிறபடியால், முதலாவதாக வருஷத்தின் ஒழுங்கு மாற்றம் செய்யும்படி அறிவிக்கப்படுகின்றது. இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்ட (**பஷ்கா)கடந்து செல்லுதல்** இடம்பெற்ற மாதம் வருஷத்தின் முதலாம் மாதமாக, வரும்படியாக வருஷத்தின் அமைப்பு மாற்றப் பட்டது. யூதர்கள், பிற்பாடு இந்த மாதத்தை இரண்டு விடயங்களுக்கு முக்கியமானதாக கணிக்கிறார்கள்- மதசார்பானதும், குடிமுறைக்குரிய வருஷமாகவும் மாற்றினார்கள் **ஆபிப், அல்து நிசான்** மாதத்தை கர்த்தரைக் கனம்பண்ணும்

திருவிழாக்கள் அனுசரிக்கிற மாதமாக ஒழுங்கு படுத்தியுள்ளார்கள். யூத சரித்திரவியலாளர் யோசபாத்தின் கணக்குப்படி, குடிசார் வருஷத்தை, ஆரம்பத்திலிருந்த வருஷத்தின் ஒழுங்கு முறைப்படி வாங்குதல், விற்றல், மற்றும் சாதாரண நடவடிக்கைகளுக்காப் பயன்படுத்துகிறார்.

**B. பஷ்காவுக்கான அறிவித்தல் மோசேக்கு கொடுக்கப்படல். (யாத் 12:3-14).** மோசேக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் பஷ்கா சம்பந்தமாவை மிக முக்கியமனை வையாகும். தேவனுக்கு வேண்டியவை பற்றி எந்த கேள்விக்கும் இடமில்லை, கர்த்தர் என்னத்தை எதிர்பார்க்கின்றார் என்பதைக்குறித்தும் எந்தக் கேள்விக்கும் இடமில்லை. தேவனால் கொடுக்கப்பட்ட இந்த வழிகாட்டுதலுக்கு கீழ்ப்படிந்திருக்கும் போது, இஸ்ரவேல் புத்திரர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கும். எப்படியோ, இஸ்ரவேலர்கள், தேவனால் கிடைக்கப் பெற்ற வழிகாட்டுதலை மீறும்போது, எகிப்தியரின் குடும் பங்களில் நடந்ததுபோல் மரணம் இவர்கள் குடும்பங்களில் இடம்பெறும். இதுவும் கர்த்தரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில், கீழ்படிதலும் ஒரு பகுதியாகவே உள்ளது. ஆட்டுக்குட்டியை கொலை செய்த பிற்பாடு, அதன் இரத்தத்தை தாங்கள் அதைப்புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்ட த்திலும் தெளிக்காவிட்டாலும் பரவாயில்லை, கர்த்தர் எல்லாம் அறிந்திருக்கின்றார் என்று கூறுவது, கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இரட்சிப்பைக்குறித்து நாம் கர்த்தருடைய வார்த்தையை நாம் நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும் என்பதை இந்த வார்த்தைகள் எங்களுக்கு நன்கு விளக்குகின்றது.இஸ்ரவேலர்களின் விடுதலை க்கு இரத்தம் சிந்துதலே குற்றநிவாரணமாகும்.

**C. பஷ்கா ஆட்டுக்குட்டி–கிறஸ்த்துவும் இரட்சிப்பும்; -** 1.கொரி. 5;7 இல், பரிசுத்த பவுல், *"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்று கூறுகின்றார்.*, நமக்காக கிறிஸ்த்து, சிலுவையில் பாவப் பலியாகினார் என்பதை விசுவாசிக்குபோது பாவத்திலிருந்து நாம் விடுதலை பெறுகிறோம் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுவது, எவ்வளவு முக்கியமாக இருக்கின்றது. இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொண்டதால் மட்டும் போதாது, கிறிஸ்தவ சத்தியத்தை அறிவு பூர்வமாக நம்பினால் மட்டும் போதாது, இரட்சிப்பின் திட்டத்திற்குப் பயப்படுதல் மட்டும் போதாது. இதை எங்கள் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றிவிடல் வேண்டும். நாங்கள் விசுவாசித்துச் சொல்ல வேண்டும்" கிறிஸ்து எனக்காக மரித்தார்" இதுவே இரட்சிப்பு. *"அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக்கடந்து போவேன்" (யாத்.* 12:13). பாவம் இல்லாத ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களில் பதிக்கப்பட்டு என்பது சுவிஷேசத்தின் மத்திய சத்தியமாக இருக்கின்றது. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் கூறுகின்றது, "*எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன்பேரை என்புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன்"*(யாத். 32:33) இந்த நியாயத்தீர்ப்பின் மரணத்திலிருந்து, கிறிஸ்து

சிலுவையில் செய்த பாவநிவாரணப் பலியின்மூலம் பிழைத்துக் கொண்டோம்.சிந்தப்பட்ட ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலே, நாங்கள் கர்த்தருக்கு என்று ஜீவிக்கின்றோம். கர்த்தருடை வார்த் தையை விசுவாசித்து அதன்படி நாம் வாழுதல் வேண்டும்.இதுவே கர்த்தரின் வெளிப்ப டுத்தலில் முக்கியமான பகுதியாகும். இதிலே கர்த்தரின் நம்பிக்கையையும், தெய்வீக இரக்கத்தையும் காண்கின்றோம், பாவத்தை வெறுத்து வெற்றி கொள்வதற்குப் பெலன் தருகிறது, பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு வல்லமை தருகின்றது." *[குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே,பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது*." (கொலோ 1:14). நாங்கள் பாவத்திலிருந்து கிரயம் கொடுத்து மீட்கப்பட்டிருக்கிறோம், இது அழிந்து போகின்ற பொன்னோ,வெள்ளியோ கிரயமாகக் கொடுத்து மீட்கேப்படவில்லை, விலையேறப் பெற்ற பாவமில்லாத பழுதற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்த்துவின் திரு இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கின்றோம். (1 பேது 1:18-19). இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (ரோமர. 5:9).*குமாரனாகியஇயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.* (1 யோவான் 1:7). *முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.* (எபேசி 2:13).இயேசுக்கிறிஸ்த்து பிரதான ஆசாரியராக இருப்பதனால், ஜெபத்தின் மூலம் பிதாவினிடத்தில் செல்வதற்கு வழி உண்டாயிருக்கின்றது. *இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டி யானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.* (வெளி7:14).பாவிகள் நித்திய மரணத்திற்குள் தள்ளப்படுவார்கள், "தேவனுடைய குமாரனைக்காலின் கீழ்மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதையோசித்துப்பாருங்கள்." (எபிரே10:29). இரக்கம், மனதுருக்கம், மற்றும் கிருபை எல்லாம் கர்த்தர் தன்னுடைய இரத்தத்தில் அத்திவாரமாக அமைத்துள்ளார். *நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; "அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.* "(யாத். 12:13).

**D. விடுதலையின் ஞாபகமாக இருக்கட்டும் (யாத்12:14-20)** எகிப்பித்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதை வருடந்தோறும் ஞாபகப்படுத்தும் வண்ணம், பஷ்கா கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டுள்ளது, கிறிஸ்த்தவர்களாகிய நாம், கர்த்தருடைய இராப்போசனத்தை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட தன் ஞாபகமாக அனுசரிக்கின்றோம். இது பாவமன்னிப்புண்டாகும்

படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புதுஉடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. (மத்.26:28).

**II. கட்டளை ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது, அவர்கள் கீழ்ப்படிந்தார்கள்.(யாத். 12:21-30)**

**A. ஜனங்களின் மூப்பர்களுக்கு விதிமுறைகள் கொடுக்கப்பட்டன.(யாத். 12:21-25)**பஷ்கா கொண்டாடுவதற்கான விதிமுறைகள் யாவற்றையும், மோசே கர்த்தரிட மிருந்து பெற்றுக் கொண்டார். இஸ்ரவேலின் மூப்பர்கள் யாவரையும் அழைத்து தெய்வீக வழிநடத்தல்களைப் பகிர்ந்து கொண்டார். பார்வோனின் வெறுப்பு, எரிச்சல் என்பதன் காரணமாக ,பொதுவான ஒன்றுகூடல் வைபவத்தைக் கூட்டமுடியாமல் போய்விட்டது. மூப்பர்கள் இவையாவற்றையும் குடும்பத் தலைவர்களிடம் கூறுவார்கள், இதனால் முழு சபையாரும், இந்தவிடுதலை யினால் கர்த்தருடைய எதிர்பார்ப்புக்கள் யாவை என அறிந்து கொண்டார்கள்.

**B. பிள்ளைகளுக்குப் பெற்றோரே பொறுப்பாயிருப்பார்கள்.(யாத். 12:26-27)** மதவிதிமுறைகள் பிள்ளைகளின் வாழ்க்கையில் மிக முக்கியமானது. பஷ்காவை ப்பற்றி, பிள்ளைகளுக்கு, இதன் கருத்தையும், முக்கியத்துவத்தையும் போதிக்க வேண்டியவர்கள் பெற்றோராவார்கள். கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு என்ன காரணம் என்பதை பிள்ளைகளுக்கு சரியாகப் போதிக்க வேண்டும்.

**C. பத்தாவது வாதையும் முதல் பஷ்காவும் (யாத். 12:27-30)**“*அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள். இஸ்ரவேல்புத்திரர் போய் அப்படியே செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்தா ர்கள்.* “ அதன்பிற்பாடு, இறுதித் தாக்கம், பத்தாவது வாதை பார்வோன்மீதும், எகிப்பியர்கள்மீதும் விழுந்தது. இது மோசேயின் கரத்தினாலோ அல்லது கைக் கோலினாலோ செய்யப்படவில்லை. இது தண்ணீரிலிருந்து வரவில்லை, அல்லது நிலம், அல்லது காற்று; யோகோவா தன்னுடைய கரத்தை நீட்டி தான் கூறியது போல் செய்து முடித்தார்.இஸ்ரவேலர்கள் பஷ்கா கொண்டாட்டத்தை கொண்டாடி முடித்தபின்பு, அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று யோசித்துக் கொண்டிரு க்கும் போது, எகிப்து தேசம் எங்கிலும் நடு இராத்திரியில் கூக்குரல் எழும்பியது.

**IV. இஸ்ரவேல் மக்களின் புறப்படுதல். (யாத். 12:31-51)**

**A.எகிப்திய பார்வோனினால் இஸ்ரவேலர்கள் அனுப்பிவிடப்படல்.(யாத். 12:31-36)**கடைசியில் பார்வோனின் இருதயம் உடைக்கப்பட்டது, அவர் பயங்கர மான குழப்பங்களாலும், தொடப்பட்டார், இஸ்வேலர்களின் எல்லா வேண்டு தல்களுக்கும் செவி கொடுப்பது மட்டுமல்ல, அவர்கள் விரும்பிய ஆசீர்வாதங்

களைக் கொடுக்கவும் இசைந்தார். அவர் ஒத்துவந்தார், ஏனெனில் இதற்கு மேல் அவரால் எதிர்த்து நிற்க முடியாமல் போய்விட்டது. எகிப்தியர்கள் தங்கள் ராஜாவின் திகைப்பைக் கண்டார்கள். இஸ்ரவேலர்கள் கேட்ட பொன், வெள்ளி, வஸ்திரங்கள் எல்லாவற்றையும் கொடுத்தார்கள். என்னத்தைக் கொடுத்தாகி லும், இவர்களை அனுப்பிவிடுவோம் என்று முயன்றார்கள். இஸ்ரவேலர்கள் நீண்ட காலமாக எகிப்தியர்களால் ஒடுக்கப்பட்டு வந்தவர்கள். அவர்கள் தாங் கள் இவ்வளவு காலம் கஷ்டப்பட்டு வேலை செய்ததற்கும், துக்கப்பட்டதற்கும் தங்கள் அயலார்களாகிய எகிப்தியர்களிடமிருந்து வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டார்கள். இஸ்ரவேலர்களின் சரித்திரத்தையும், அவர்களின் சூழ்நி லைகளையும் அறிவது மிகவும் அவசியமாகும், இங்கு அவர்கள் பெற்றுக் கொண்ட பொன்னும் வெளளியும் பின்பு அவர்களுக்கு மத வழிபாட்டுக்கான ஆசாரிப்புக் கூடாரத்திற்காகத் தேவைப்பட்டன.

**B. யாத்திரை (யாத். 12:37-51)** இஸ்ரவேல் மக்களின் யாத்திரையை சுருக்கமாகப் பார்ப்போம். பெரும் தொகை எண்ணிக்கையான மக்கள் பங்குபற்றியதே ஒரு பெரிய அற்புதமாக இருக்கிறது, இது கர்த்தரின் கரங்களால் மட்டும் ஆயிற்று. சிலவேளை இரண்டு மில்லியன் மக்களும் அரசர்களுடைய ஆடு மாடுகளும். ஒரேநாளில் இந்த யாத்திரையில் ஈடுபட்டிருந்திருக்கலாம். இஸ்ரவேலர்களில் ஆறு இலட்சம் ஆண்கள் மட்டும் இவர்களுடன் மனைவி பிள்ளைகளையும் சேர்க்கும் போது அதிக ஜனங்கள் இதில் ஈடுபட்டார்கள் என்பது புரியும். உண்மையில் அந்த பெரிய இரவில் பெரிய விடுதலை. இது கிறிஸ்துவால் எங்களுக்கு கிடைக்கும் இரட்சிப்புக்கு அடையா ளமாகும்.

## செங்கடலைக்கடத்தல்

**I. முதற்பிள்ளையை பிரதிஸ்டை செய்தல். (யாத். 13:1-6)**“*முதற்பேறனைத்தையும் எனக்குப்பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார்.* “இஸ்ரவேல்களின் முதற் பிள்ளைகளை கர்த்தர் விடுவித்தபடியால்,அவர்கள் யாவரும் கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணப்படவேண்டயவர்கள். இது பஷ்காவுடன் நெருக்கமான தொடர்புடையது, 7 நாள் கொண்டாட்டத்திலும் இது குறித்துக் கூறப்பட்டுள்ளது.ஏனெனில், இஸ்ரவேலர்கள் ஒரு தேசமாக கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டபடியால், முதற்பேறான பிள்ளைகளும், மிருகங்களின் தலை ஈற்றுக்களும், எகிப்தியர் அழிக்கப்படும் போது, தப்புவிக்கப்பட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய வேலைக்கென்று வேறு பிரிக்கப்பட வேண்டயவர்கள். பரிசுத்த பவுல் 1கொரி. 6; 19-20 இவ்வாறு கூறுகிறார் “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும்

இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." இந்த வார்த்தையைக்குறித்து மூன்று செய்திகள் யாத்திர காமத்தில் உள்ளன.

1. **பஷ்காவின் இரவு:** பஷ்காவும், முதற்பேறுகளின் பிரதிஸ்டைசெய்தலும் இஸ்ரவேலர்களுக்காக ஆட்டுக்குட்டி பலியிடப்படுவதை ஞாபகப்படுதும் வண்ணம் செய்யப்படுவபையாகும். கிறிஸ்தவர்கள் இதனை கிறிஸ்துவின் திரு இரத்தம் என விசுவாசிக்கின்றார்கள், பழுதற்ற குற்றமற்ற ஆட்டுக்குட்டியாக, எங்களை மீட்கும் பொருட்டாக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக கிறிஸ்துவே மரித்தார் என நம்புகின் றார்கள். மீட்கப்பட்டவர்கள் அதன் நன்றிக்கடனாக, தங்களைக் கிறிஸ்துவுக்குரிய வர்களாக்கிக் கொள்ளல் வேண்டும். நாங்கள் இரட்சிக்கபட்டது சேவிப்பதற்காகவே யாகும். இதுவேதான், இஸரவேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் பட்டவுடன் கொடுக்கப்பட்ட விதிமுறைகளில் கூறப்பட்டுள்ளது. மனிதர்களின் முதற் பேறனைத்தும், பரிசுத்த சேவைக்கென்று வேறுபிரிக்கப்படல் வேண்டும். அத்துடன் மிருகங்களின் முதற்பேறனைத்தும் பலிக்காக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

2. **சேவைக்கான கட்டுப்பாடுகள்.**;-இது பரிசுத்த வாழ்வுக்கான வேறுபிரித்தல் அல்ல. முதற் பேறானவைகளின் பிரதிஷ்டையின் போது, மோசே, புளிப்பில்லாத அப்பப்பண்டி கைக்கான தேவைகள்பற்றி திரும்பவும் கூறியிருந்தார். புளிப்பு என்பது, வேதாகமத்தில் சீர்கேடுகளுக்கான அடையாளமாகும்,புளிப்பு என்பது பரவிச் செல்லும் செயற்பாடாகும். எப்படியோ, மத்தேயு 13; 33இல், புளிப்பானது, கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் விரிவ டைதல் என்பதற்கு அடையாளமாகவும் கூறப்பட்டுள்ளது. இது நன்மையாக விரிவாக்க வளர்ச்சியாகும். பஷ்காவின் பங்குபற்றுதலில், இஸ்ரவேலர்கள் புளிப்புக்கள் யாவற் றையும் வீடுகளில் இருந்து அகற்றிவிடல் வேண்டும். நாங்கள் கிறிஸ்துவின் இரத்தித் தினால் மீட்கப்பட்டிருந்தால், நாங்கள் அவருக்கே உரியவர்கள். எங்களுடைய சேவை யானது பரிசுத்த வாழ்வாக இருக்கவேண்டும். நாங்கள் கிறிஸ்துவை சேவிப்பது அவர் எங்களை இரட்சிக்க வேண்டும் எனபதற்காகவல்ல, மாறாக, அவர் எங்களை இரட்சி த்தபடியால் நாம் அவரைச் சேவிக்கின்றோம். இயேசுவைப் பின்பற்றுவதற்கு நாம் துய்மையும் பரிசுத்தவாழ்வும் வாழவேண்டும் என்னும் பிரதிஸ்டையுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.(ரோமர் 12)

3. **மதசார்பான வழிநடத்தல்கள்.:** இது கற்றலிலும், கற்பித்தலிலும் உள்ள செயற்பா டாகும். புளிப்பில்லா அப்பப் பண்டிகைக் கொண்டாட்ம்பற்றியும், எகிப்திலிருந்து மீட்கப் பட்ட பெரும் விடுதலைபற்றியும், ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்குப்

போதிக்க வேண்டும். இர்சிப்பின் கருத்து என்னவென்று இக்காலப் பிள்ளைகளுக்கு அறிவிப்பது முக்கியம் இல்லையா, எங்கள் கிறிஸ்துவுக்காக நாம் மேற்கொள்ளும் தீர்மானங்களும் அர்பணமும் என்ன? இந்ப்பிரச்சனைகளுக்கு கர்த்தரிடம் பதில் உண்டு. இதை அறிவதற்கு ஜெபத்தோடு கூடிய வேதப்படிப்பு மிக அவசியமாகும், அப்படிச்செய்வதனால் மட்டுமே எங்கள் பிள்ளைகளைச் சரியான பாதையில் வழி நடத்தமுடியும், இதுவே பெற்றோருக்கு கர்த்தர் கொடுக்கும் அறிவுரையாகும்.

**II. எகிப்திற்கு வெளியே தன்னுடைய பிள்ளைகளை கர்த்தர் வழிநடத்தினார். (யாத். 13:17-22)**

**A கோசானிலிருந்து செங்கடல்வரை (யாத். 13:17-18)** எகிப்து தேசத்திலே இஸ்ரவேலர் கள் இந்தபோது, "கோசான்" நகரத்திற்கு என ஒரு எல்லைக்கோடும் இருந்ததில்லை, ஜனங்கள் பெருகியபோது எல்லை பெரிதாகிற்று. "ராமேசஸ்' என்ற தேசம் ஒரு பெரிய பரப்பளவைக் கொண்டது. இந்தக்காலத்தில் ராமேசஸ், என்பதும் சுக்பொத் என்பதும், அந்த மாவட்டத்தின் நகரங்களாகும். இந்த நகரங்களுக்கான தூரம் ஒருநாள் பிரயாணமாகும். பஸ்கா இரவிலிருந்து முன்று வார பிரயாணமாகும், கோசானுக்கும், ராமேச்சுக்கும் நடந்து நடு இரவில் செங்கடல் பகுதியை அடைந்தார்கள்.,ஒவ்வொரு இஸரவேல் குடும்பத்தாரும், எகிப்திய அயலாரிடம் வெகுமதிகளைப் பெற்றபின்பு, எல்லையை நோக்கிப் புறப்படத் தொடங்கினார்கள். அவர்கள் எகிப்தியர்களுக்கு கொஞ் சமும் பயப்படாமல் இருந்தார்கள், ஏனெனில் எகிப்தியர்கள் யாவரும் தங்கள் பிள்ளை களை அடக்கம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். அவசரமாகப் புறப்பட்ட இஸ்ரவேல்கள் சுக்கோத்தை அடைவதற்குப் பலநாட்கள் சென்றன. சண்டைக்காராகிய பெலித்தர்களிடம் இருந்து விலத்தி நடப்பதற்காக, கர்த்தர் மோசேக்கு கூறிய வழிமிகவும் சிரமமுள்ளதாக இருந்தது. சிவந்த சமுத்திர வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களுடைய இருதயம் அடிமைத்தனத்தினாலும், பெலிஸதர்கள் எந்தநேரமும் மூர்க்கங் கொண்டு தாக்குதலைத் தொடங்கலாம் என்ற நினைவுகளாலும் உடைந்து காணப்பட்டது, இந் வனாந்தரப் பிரயாணத்தினூடாக, இஸ்ரவேலர்களை கானான் தேசத்தில் சந்திக்கப் போகும் யுத்த்திற்கும், பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் வண்ணம் தயார்படுத்த வேண்டி தேவையும் கர்த்தருக்கு இருந்தது. பிரயாணத்தின் ஒவ்வொரு கட்டமும், ஏதோ ஒரு வகையில் வழிகாட்டுதலாகவே அமைந்தது.நெகெமியா 9;13இல் இஸ்ரவேர் களுக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட வழிமுறைகள் காணப்படுகின்றன. "*அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர்*. நெகேமியா 9:13, " *அவர்களுக்கு அறிவை உணர்த்தஉம்முடைய நல்ஆவியைக்கட்டளையிட்டீர்;"* நெகேமியா 9:20, இஸ்ரவேலர்கள் சீனாய்வனாந்தரத்தை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் வேளைகளில், கர்த்தருடைய சீர்ப்படுத்தல்களுக்கு இணங்காத படியால் அவர்கள் கானான் தேசத்திற்குள் நுழைவதற்குத் தகுதியற்றவர்களானார்கள்.

**B.யோசேப்பினுடைய வேண்டுதல் கனப்படுத்தப்பட்டது.**(*யத்திராகம்* **13:19)** யோசேப்பின் வாழ் நாட்களில் அவர் செய்த வழிகாட்டல் முக்கியத்துவம்பெறாமல் இருந்தது. அவர் தன்னுடைய ஜனத்தாரை அவ்வளவாய் நேசித்தார், அத்துடன் கர்த்தர் பேரிலும் வழுவாத விசுவாசம் கொண்டிருந்தார். அவர் தான் மரித்த பின்பும் கூட, சரீரம் கர்த்தருக்குச் சேவை செய்ய வேண்டும் என்று விரும்பினார், தன்னுடைய மக்களை த் தேவன் வந்து சந்தித்து, எகித்திற்கு வெளியே வழிநடத்திச் செல்வார் என்று நம்பினார். அவர்களுடைய காத்திருப்புக்காலம் அதிகமானபடியால் விசுவாசம் தோல்வி கண்டது. அவருடைய வாழ்க்கையில் எதையும் செய்யவோ முடியவில்லை, ஆபிரகாமுக்கு கர்த்தர் கூறிய யாத்திரை எகிப்திலிருந்து தொடங்கும் வரை தன்னுடைய எலும்புகளை அங்கே புதைக்காமல் வைத்திருக்கும்படி கூறியிருந்தார். இது யோசேப்புடன் வைத்திருந்த அற்புத தொடர்புகளுக்கு ஒரு ஞாபகமாகவுள்ளது. அவர்கள் சவப்பெட்டியை வனாந்தரத்தில் சுமந்தபோது, தங்களுடைய இருப்பிடம் எது என்பதைக்குறித்து மேலும் விசுவாசம் அடைந்தார்கள், ஆனால் அமைதியாய் இருந்தார்கள். சவப்பெட்டியானது அமைதியான உறுதிமொழியாய் இருந்தது, தங்கள் வனாந்தர அலைச்சல் பிரயாணம் தங்கள் முற்பிதாக்களுக்கு வாகுப்பண்ணப்பட்ட பாலும் தேனும் ஓடும் தேசத்தில் முடிவடைந்து இளைப்பாறுவோம் என்று உண்மையில் நம்பினார்கள்.

**C. அக்கினிஸ்தம்பமும்,மேகஸ்தம்பமும்.(யாத். 13:20-22)** தன்னுடைய மக்களுக்கு கர்த்தருடைய தெய்வீகப் பிரசன்னம் பகலில் மேக ஸ்தம்பமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் அடையாளமாகக் காணப்படும். இதுதான் கர்த்தருடைய "காணப்படும் மகிமை" அல்லது ஷகீனா என்று அழைக்கப்படும். கர்த்தருடைய வல்லமை அவர்கள் பிரயாணப்படும் போது அவர்களுடன் இருந்தது. இதனால் கர்த்தர் தன்னுடைய மக்க ளைப் பாதுகாத்தும், வழிநடத்தியும் வந்தார். இஸ்ரவேல் மக்கள் கூடாரம் அமைத்து இருக்கும் போதோ அல்லது பிரயாணப்படும் போதோ, அவருடைய பிரசன்னம் ஒருக் காலும் விலகாது என்பதற்கான அடையாளமாகும். இன்று கர்த்தருடைய வார்த்தை எங்களை வழி நடத்த இருக்கின்றது, அது எங்களுடைய கால்களுக்குத் தீபமாகவும், தூரத்திற்கு வெளிச்சமாகவும் உள்ளது. ( சங்.119; 105) எங்கள் பிரயாணத்தில் பரிசுத்த ஆவியானவர், அவருடைய சத்தியத்தை வெளிப்படுத்தவும், எங்களுடைய பிரயாண த்தில் எங்களை வழி நடத்திக் கொண்டும் இருக்கின்றார். இஸ்ரவேலர்கள் பிரயாணம் பண்ணும்போது தங்கள் வழிகள் மிருதுவாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கி ன்றதா என்று பார்ப்பதில்லை, அவர்கள் முகில்களைப்பார்து (**மேகஸ்தம்பம்**) அது எங்கே போகிறதோ அங்கே போனார்கள். அப்படியே, நாமும், வாழ்க்கைப்பிரயாணத்தில் கர்த்தருடைய வார்த்தையின் வழிநடத்தல்படி நடக்கவேண்டும். நாங்கள் பிரயாணம் பண்ணும்போது கர்த்தருடைய பாதைக்கான வரைபடப் புத்தகத்தையும், வழிகாட்டிப் புத்தகத்தையும் வாசித்து வாசித்து

பிரயாணத்தை மேற் கொள்ளல் வேண்டும். நாங்கள் கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தை வைத்திருக்கின்றோம், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இன்றும் எங்களோடு கூட இருக்கின்றார்.

**III. செங்கடலைக் கடத்தல் (யாத்.14:1-29)**

**A. பார்வோன் வந்து கெண்டிருக்கிறார் (யாத்.14:1-4)** இஸ்ரவேலர்களின் பிரயாணம் சுக்கோத்திலிருந்து, ஏதோம் வரையாகவிருந்தது, பிற்பாடு தென்பகுதியிலிருந்து பாகால்- செபோன் அதன் பிற்பாடு செங்கடலைக் கடக்கும் இடம். இது கடலுக்கும் மலைக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்தது, இங்கோதான் இஸ்ரவேலர்கள் செங்க டலைக் கடப்பதற்கான வழிநடத்தலுக்காக காத்திருக்கின்றார்கள். பார்வோன் இஸ்ர வேலர்கள் பற்றி கேள்விப்படுகின்றார், அவர்கள் தப்பான வழியைத் தேர்ந்தெடுத்த படியால் இப்போது பிடிபட்டார்கள், அதாவது இறுகி என்ன செய்வது என்று தெரியா மல் இருக்கின்றார்கள். இப்போது அவர் இஸ்ரவேலர்களின் முடிவு தன்னுடைய கையிலேயே இருக்கின்றது முடிவு செய்து, அவர்களைப் பின் தொடர முடிவெடுத்தான். பார்வோன் இப்போதும் கர்த்தருடன் யுத்தம் செய்கின்றான். அவன் இப்போது 600 யுத்த இரதங்களையும், மற்றும் யுத்த மனிதர்களையும் ஒன்றாக அழைத்து, செங்கடலை நோக்கிப் புறப்பட்டார்கள்

**இஸ்ரவேலர்களின் பிரச்சனையான யாத்திரை (யாத். 14:5-18)** இஸ்ரவேல்கள் இப்போது பொறியில் அகப்பட்ட எலியைப்போல் இருப்பதாக அறிஞர்கள் கூறுகின் றார்கள். தூரத்தில் பார்வோனுடைய இரதங்களும் போர்வீரர்களும் விரைந்து வந்து கொண்டிருப்பதை இஸ்ரவேலர்கள் கவனித்துக் கொண்டுருக்கிறார்கள். அவர்கள் யாவரும் இருதயத்தில் மிகவும் குழப்பம் அடைந்தவர்களாய் தவித்துக் கொண்டிருக்கி றார்கள். மோசே ஒருவரே தலையை நிமித்தி விசுவாசத்தில் உறுதியாய் நிற்கிறார். இஸ்ரவேலர்களுக்குத் தப்பிப் போவதற்கான வழி ஒன்றுதானும் இல்லை. மோசேயி னால் தப்புவதற்கான எந்த வழியையும் காணமுடியவில்லை, யேகோவா தேவனால் மட்டுமே விடுதலை வரும் என்ற விசுவாசத்தில் காத்திருக்கின்றார். மோசே ஜனங்க ளை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்க ளுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தருடைய கையில் போராட்டத்தைக் கொடுத்து விடுவோம். கடும் பயத்தோடு இருக்கும் போது எடுக்கும் தீர்மானங்கள் வீணாகப் போய்விடும். சபைகளின் வெற்றிகள் யாவும் பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6).நாங்கள் எங்கள் வெற்றிக்காக, எங்கள் வெளியில் இருந்து வரும் சக்திகளை நம்பாமல், உயித்தெழுந்த இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்த்துவின் மீது எங்கள் கண்களை வைக்க வேண்டும். எல்லா பிரச்சனைகளிலிருமிருந்து எங்களை விடுவிப்பதற்கு பரிசுத்த ஆவியானவருடைய உதவியைத் தவிர வேறெதுவும் உதவாது. பரிசுத்த

ஆவியானவர் எங்களுக்குள் வாசம் செய்வது மட்டுமல்லாமல், எங்களுக்காக , பிதாவுடன் பரிந்து பேசிக் கொண்டேயிருக்கின்றார். மோசேக்கு கர்த்தர் கூறியது போல செயற்படுவதற்கு கர்த்தர் மேல் நம்பிக்கை கொண்டு, உற்சாகமனதுடன், ஜெபத்தோடு முன்னேறுவோம். பயத்தையும், நடுக்கத்தையும் உதறித் தள்ளி விட்டு முன்னேறிச் செல்வோம், அதுவே எங்களுக்கு கிடைத்த கட்டளையாகும். நம்பிக்கையற்று இருக்கிறாயா?, நம்பிக்யைற்று வெட்கப்படுகிறாயா?, நம்பிக்கையோடு செயற்படு, அப்போது இரடசிப்பைக் கண்டு கொள்வாய்., குறுகிய மனப்பாண்மையும், கபடமும், நம்பிக்கையின்மையும், தோல்வியைக் கொண்டுவரும்.

**செங்கடலுக்கூடாக வழிதிறத்தல் ( யாத்.14:19-22)** ஜெபிப்பதற்கும், செயற்படுவதற்கும் ஒரு காலமுண்டு, கர்த்தர் தன்னுடைய விருப்பத்தைக் காண்பித்துவிட்டார், விசுவா சத்தில் மோசேயும், ஜனங்களும் முன்னேறிச் செல்லுதல் வேண்டும். இருள் சூழ்ந்த வேளையில் பூரண விசுவாசத்துடன் செயற்படுதலே வெற்றியைக் கொண்டு வரும். பிரச்சனைகள் இல்லையேல், வெற்றியும் இல்லை. கர்த்தர் பயங்கரத்திற்கூடாக நம்மை வழிநடத்துகிறாராயின், அவர் பாதுகாப்பாக எங்களைக் கூட்டிச் சேர்ப்பார். நாங்கள் கர்த்தருடையவர்களாக இருந்தால், இதனை நாம் எப்போதும் மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும். நீங்கள் கர்த்தருடைய வேலையாக பிரச்சனைகளில் இருக்கும் போது ஒரு வித்தியாசமான உணர்வைத் தரும். அவருடைய சித்தமில்லாத இடத்தில் இருப்போமாகில் அவருடைய பாதுகாப்பு கிடைக்கும் எனபதில் உத்தரவாதம் இருக்காது, ஆனால் அவருடைய சித்தத்தில் இருந்தால் நிச்சயம் உதவிவரும். பார்வோன் செங்கடலைக் கடக்க முற்பட்டபோது மாண்டுபோனான். கர்த்தருடைய வழியில் நடந்த எபிரோயரோ, தரைவழியாக நடந்து சென்றார்கள். விசுவாசமானது ஒரு விஷேசித்த காரியமாகும், ஊகம் என்பது வேறு. ஊகத்திலே பிரச்சனைகளைக் கடப்பது ஆபத்தானது, அவருடைய காரியமாக பிரச்சனைகளை கடந்து செல்வது உற்சாகமளிக்கும். கர்த்தர் செங்கடலைப் பிளந்து கொடுத்தார் என்பதை வேதாகமம் மிகத் தெளிவாக கூறுகின்றது. இஸ்ரவேலர்களின் பயம் எல்லாவற்றையும் அழித்து அவர்களைக் கர்த்தர் பாதுகாத்தார். கர்த்தருடைய வல்லமை அங்கு அற்புதத்தை நிகழச் செய்தது. இது வரலாற்றிலேயே இடம்பெற்ற பெரிய அற்புதமாகும். இச் சம்பவமானது முழுக்கு ஞானஸ்தானத்துக்கும் ஒப்பிடப்படுகிறது.

**D. எகிப்தியர் கவிழ்த்துப் போடப்பட்டார்கள் (யாத். 14:23-29)**தங்கள் இரதங்கள் மேல் நம்பிக்கை வைத்த எகிப்தியர்கள் தோல்வியைச் சந்தித்தார்கள். கர்த்தர் நியாயம் தீர்க்கப் புறப்படும் போது அவரை எதிர்த்து நிற்பதற்கு யாரால் முடியும்.( வெளி 6:15-17)

**IV.மகத்தான கிரியையை செய்து முடிக்கப்பட்டது (யாத்.14:30-31)**எகிப்தியர்கள், அடிமைத்தனத் தேசத்திலிருந்து பயிற்சி பெறும் தேசத்திற்குள் வந்து சேர்ந்து

விட்டார்கள். கர்த்தருடைய அளவிடமுடியாத கிருபையையும், வல்லமையையும், யேகோவா தேவன் குறுக்கிட்டுக் காத்துக் கொண்டதையும் விசுவாசித்தார்கள். தங்களுக்கு தேவன் கட்டளையிட்ட சகலவற்றையும் செய்து முடித்தார் என விசுவா சித்தார்கள். கர்த்தருக்கு கீழாக, மோசேயின் ஊழியத்திற்கூடாக, கர்த்தர் மிகப்பெரிய செயற்திட்டத்தைச் செய்து முடித்தார், தன்னுடைய வழிநடத்தல்களைப் பின்பற்று மாறும் உணர்த்தினார்.

**V. இரட்சிப்பின்பாடல் (யாத்.15:1-21)** இந்தப்பாடல்கள் இரண்டு வரிகளைக் கொண்டுள்ள பகுதி.

1. பின்னோக்கிப்பார்த்தலும், எதிரியை அழித்தலும்( 1-12).

2. எதிர்காலத்தில் கிடைக்ககூடிய வெற்றியின் நிச்சயத்தை எதிர்பார்த்தல். (13-18). ஜனங்கள் யாவரும் கர்த்தர் செய்த செயல்களை நினைத்து, கர்த்தரின் நினைவாகவே இருத்தல். இந்தப்பாடலில் சுயத்தை மகிமைப்படுத்தல் இல்லை. தொடக்கம் முதல் முடிவு வரை இஸ்ரவேலை விடுவித்த யெகோவா தேவனைத் துதித்தலே உள்ளது. இந்த இரட்சிப்பின்பால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றது இதுவே சரித்திரத்தில் காணப்படும் பழைய பாடலாகும். இன்றும்கூட மக்கள் தங்கள் நன்றியறிதலைத் தெரிவிப்பதற்கு இவ்வாறான பாடல்களைப்பாடுகின்றார்கள்.

**I.சூர் வனாந்தரத்தில் (யாத். 15:22-27)**

**A. மாரா(யாத். 15:22-26)** சூர் வனாந்தரம் எகிப்தின் கிழக்குப்பக்கமாக செங்கடலுக்கும் மத்தியதரைக்கடல் சார்ந்த பிரதேசத்திற்குமிடையில் உள்ளது. எண்ணாகமம் 33; 8இல் ஏத்தாம் வனாந்தரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரவேலர்கள் இப்போது பெரும் தூரம் கால்நடையாக வனாந்தரத்திற்கூடாக நடக்கின்றார்கள், இதனூடாகவே அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை அடைய வேண்டும். அடிமைத்தனத்தின் தேசத்திற்கு எதிராக தெற்குப்பக்கமாக அவர்கள் முகத்தைத் திருப்பி, மகா பெரிய விடுதலையை மகாபெரிய இரட்சிப்பை நினைவு கூர்ந்தார்கள். இதுவே இஸ்ரவேலர்களின் புதிய ஆரம்பமாகும். மாரா அவர்களின் பிரயாணத்தில் முதலாவது தரிப்பிடமாக இருந்தது. சூடான வனாந்தரத்தின்மீது பிரயாணம் செய்வது, அவர்களுக்குப் பெரும் தண்ணீத்தா கமாக இருந்தது. தண்ணீரைக் கண்டவுடன் அவர்களால் அதனைக் குடிக்க முடியாமல் போய்விட்டது, காரணம் அது மிகவும் கசப்பாக இருந்தது, அதனால் அவர்கள் மோசே யினிடத்தில் முறுமுறுத்தார்கள். கர்த்தர் அற்புதம் செய்து செங்கடலைப் பிளந்து கூட்டிவந்தார், அதேபோலவே தொடர்ந்து வெற்றியான வாழ்வுதான் கிடைக்கும் என எதிர்பார்த்தார்கள், ஆனால் தண்ணீர் விடாயும், கசப்பான நீரும்தான் அவர்களுக்கு முதலில் கிடைத்தது. இதுதான் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கான பிரயாண

அனுபவம். இவர்கள் தங்களைப்பற்றி அறிந்து கொண்டதும் கொஞ்சம், கர்த்தரைப்பற்றி அறிந்து கொண்டது அதைவிடக் கொஞ்சமாக இருக்கின்றது. அவர்களுக்கு கர்த்தர் எப்படியான வழிகளில் தங்களைக் கட்டுப்பாடான வாழ்க்கைக்கு வழிநடத்துகிறார் என்று தெரியாமல் இருந்தார்கள், அவர்கள் கட்டுப்பாடாக ஒழுக்கமான வாழ்க்கையின் அவசியத்தை உணராது இருந்தார்கள். அவர்கள் எகிப்தைவிட்டு சுகமாக வெளியேறி யதும்,செங்கடலை அற்புதமாக கடந்து வந்ததையும், பின்பு வெற்றிப்பாடல் பாடிக் கர்த்தரை மகிமைப்படுத்தி மிகவும் களிப்புடன் இருந்தார்கள். அவர்கள் இனி ஒரு தோல்வியான வாழ்வு வரும் என்று எண்ணாதிருந்தார்கள். இப்போது கர்த்தரைத் துதித்துப் பாடவேண்டியதற்குப் பதிலாக மோசேயுடன் முறுமுறுக்கத் தொடங்கி னார்கள். மோசே இவர்களின் தலைவராக மட்டுமல்லாமல், இணைப்பாளராகவும் செயற்பட்டவர், மோசே தேவனிடத்திற்குச் சென்றார், ஏனெனில் அவரே இதற்கு உதவி செய்யக் கூடியவர் என்றும் மோசே அறிந்திருந்தார். கர்த்தரால் மட்டுமே இந்தத் தண்ணீரைத் தித்திப்பாக மாற்ற முடியும் என்று மோசேக்குத் தெரியும். விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவதற்காக மட்டுமே கர்த்தர் சோதனைகளை அனுப்புகின்றார். சந்தோஷமும், கவலைகளும் கர்த்தரை எங்களுக்கு அருகில் கொண்டு வருகின்றது. மகா பெரிதான இரட்சிப் சந்தோஷத்திற்குப் பிற்பாடு, கசப்பான தண்ணீர் அருகே நாம் ஏமாற்றத்துடன் நிற்பதை எம்மால் உணர முடிகின்றது. கிறிஸ்தவர்களுக்கு இப்படியான சோதனைகள் வரும் போது தாங்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். வெற்றிக்குப்பிற்பாடு விசுவாசிப்பதும், வெற்றிக் கீதங்கள் பாடுவதும் மிகவும் இலகுவானது. ஆனால் உண்மையான சோதனை துக்கம் வரும்போது தான் ஏற்படும், நீங்கள் தாகமாகவிருந்து தண்ணீரை மொண்டு கொள்ளும் போதுதான் அது கசப்பு என்று அறிகின்றீர்கள்.

அப்போது நீ அவரைத்துதித்துப்பாடி, அவரின் அன்பையும் வல்லமையையும் நம்பி னால், நீ உண்மையான கிறிஸ்தவன் என்று உன்னை நிருபிக்கலாம். கர்த்தர், அவர்களுக்குத் தக்க பாடங்களைக் கற்பித்த பின்பு, அவர்களைத் தேற்றி தான் யார் என்பதைக் காண்பித்தார், அதுமட்டுமல்லாமல் தானே யெகோவா தேவன் என்பதையும், தானே சுகம்அளிப்பவர் என்பதனையும், தானே பரமவைத்தியர் என்பத னையும் காண்பித்தார். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டு தானே இரட்சகர் என்பதையும், யெகோவா தேவன் என்பதையும் காண்பித்தார், அதனைத் தொடர்ந்து அவரே சுகமளிப்பவர் என்பதையும் காண்பிப்பார்.

**கட்டளையும் சட்டமும்** –யாத். 15:26 தன்னுடைய மக்களுடன் ஏற்படுத்திய முதலா வது சட்டம் யாத். 15 ; 26இல் கூறப்பட்டுள்ளது.“*நீ உன்தேவனாகிய கர்த்தரின் சத்தத் தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர்*

*கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக் கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன்பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."* அவர்கள் பொறுத்திருந்து கர்த்தரின் இரட்சிப்பைக் காணவேண்டும். அவர் தன்னுடைய பார்வையில் எது சரியென்று கூறவில்லை, தன்னுடைய சட்டங்கள் இன்றுமுதல் கையாளும்படி கூறினார். புதிய ஏற்பாட்டின் சட்டங்கள் யாவும் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களேயாகும். இங்கு கீழ்ப்படிந்து இரட்சிக்கப்படுங்கள் என்றல்ல இரட்சிக்கப்பட்டுக் கீழ்ப்படியுங்கள் என்று கூறுகின்றது. அதாவது கீழ்ப்படிந்தால் தான், எகிப்தைவிட்டு வெளியெ கொண்டுவருவேன் என்று, எகிப்திலே வைத்து தனது சட்டங்களை அவர் கூறவில்லை. அவர் வெளியே கொண்டுவந்த பிற்பாடு, இப்போ என்னுடைய சட்டங்களுக்கு கீழ்ப்படியுங்கள் என்றார்.

**B.ஏலிம்.(யாத்.15:27)** எகிப்திலிருந்து பிரயாணமாகப் புறப்பட்ட இஸ்ரவேலர்களுக்கு, இந்த உற்சாகமளிக்கும் பள்ளத்தாக்கு முதல் இளைப்பாறும் ஸ்தலமாக இருந்தது. இங்கு அவர்கள் மூன்று வாரகாலம் இளைப்பாறினார்கள். எவ்வளவு வித்தியாசம்–பிரச்சனைகளின் இடத்திலிருந்து வந்த இவர்களுக்கு, கர்த்தரின் கிருபையினாலும் வழிநடத்தலினாலும் சந்தோஷத்தை அனுபவித்தார்கள். ஏலீம், ஒரு இளைப்பாறு வதற்கான முகாம் இட்டுக் கொள்வதற்கான அழகான இடமாகும்., ஆனால் இதுதான் அவர்கள் சென்றடைய வேண்டிய இடமல்ல. அவர்கள் தொடர்ந்தும் பிரயாணம் செய்ய வேண்டும்.

**II. சீன் வனாந்தரம். (யாத். 16:1-36)**

**A. முறுமுறுப்பு புதுப்பிக்கப்படல் (யாத். 16:1-3**

**கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவை வாக்களித்தார். (யாத். 16:4-10)** இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பைக் கர்த்தர் கேட்டு அவர்களுக்கு உதவுவதாக வாக்களித்தார். கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவைப் பொழிவார், அதனை இஸ்ரவேலர்கள் தங்களுக்கான நாளாந்த தேவைகளைப் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இந்த மன்னாவை ஒவ்வொரு நாளும் சேர்க்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறையையும் கொடுத்தார். ஒவ்வொருநாள் காலையிலும் மன்னாவைச் சேர்க்க வேண்டும், ஆறாம் நாளில் அவர்கள் இரட்டிப்பான அளவு சேர்க்க வேண்டும். 7ம் நாளாகிய ஓய்வு நாளில் மன்னா கிடைக்காது. கர்த்தரே இவர்களுக்கு இவை யாவற்றையும் கொடுத்தார். இதனால் அவர் எகிப்திலிருந்து அவர்களை மீட்ட யெகோவா தேவன் என்பதையும் ஞாபகப்படுத்தினார்.இது கர்த்தருடைய தொடர்ச்சியான அவர் செய்த அற்புதத்தையும், அவருடைய பிரசன்னத்தையும் நினைவுபடுத்தும் செயலாக இருக்கின்றது." *கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்; விடியற் காலத்தில்*

*கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர்கேட்டார்;*" (யாத்.16;1-7) என்று மோசே அவர்களுக்கு கூறினார்.

**C. மன்னாவும், இறைச்சியும் தருவேன் என்ற வாக்கு நிறைவேறியது. (யாத் 16:11-14)** சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்குக் கர்த்தர் உங்களுக்கு இறைச்சியையும், விடியற் காலத்தில் நீங்கள் திருப்தியடைகிறதற்கு அப்பத்தையும் கொடுக்கப்படும் என்ற வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டு மாலையில் இறைச்சி கூடாரத்தை சுற்றியும், காலையில் வனாந்தரத்தில் பனி அகன்ற பின்பு அதன்மேல் மன்னா இறங்கி இருப்பதைக் கண்டார்கள் என்று எழுதப்பட்டதை வாசிக்கின்றோம். இந்தச் சந்ததியாரைப் போல் வேறு எவரும் தொடர்ச்சியாக கர்த்தரால் போஷிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் இயேசு தன்னுடைய வேதாகமக் குறிப்பில் தங்கள் மூதாதையர் நாற்பது வருஷகாலமாக மன்னாவினால் போஷிக்கப்பட்டார்கள், மோசயினால் அல்ல, கர்த்தரால் போஷிக்கப்பட்டார்கள் என்று சொல்லக் கேட்டோம். இது மனிதனுடைய சரீரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இது சம்பந்தமான போதனையில், *இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.* என்று கூறியுள்ளார்.(யோவான் 6:35).எங்களுடைய ஆவிக்குரிய தாகமும், பசியும் இயேசுக் கிறிஸ்துவால் மட்டுமே தீர்க்கமுடியும். நாங்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து விசுவாசத்தைக் காத்து கொள்வதைச் செயற்படுத்தல் வேண்டும், கர்த்தரை நம்ப வேண்டும், இயேசு தன்னுடைய ஜெபத்தில் " அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்குத் தாரும்" என்று சீஷர்களுக்குக் கற்பித்தார், இதன் அர்த்தத்தை இஸ்ரவேலர்கள் இந்த விண்ணப்பத்தின் அர்த்தத்தை அறிந்திருப்பார்கள்.

**"இது மன்னா" (யாத். 16:15-21)**இது என்னவென்று அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. வேதாகமம் இதன் விளக்கத்தை இவ்வாறு கூறுகின்றது.

- யெகோவா வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணினார். (யாத்16:4).
- இரவிலே பாளயத்தின்மேல் பனிபெய்யும் போது, மன்னாவும் அதின் மேல்விழும்(எண் 11:9).
- பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒருசிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல்கிடந்தது. (யாத் 16:14).
- அது கொத்துமல்லி அளவாயும் வெண்மை நிறமாயும் இருந்தது, அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது. (யாத். 16:31).
- வெயில் ஏறஏற அதுஉருகிப்போம். (யாத்.16:21).
- அந்த மன்னா கொத்துமல்லி விதையம் மாத்திரமும், அதின்நிறம் முத்துப் போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக் கொண்டுவந்து,

ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமை ப்பார்கள்; அதின்ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது. ( எண்11:7, 8).

- சிலர் அதில் விடியற்காலம் மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சிபிடித்து நாற்றமெடுத்தது (யாத். 16:20).

இது வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களை நாற்பது வருஷ காலமாகப் போஷித்தது. விசுவாசத்திற்கான ஒரு அருமையான பாடமாகும். இது பாவிக்கப்படாமல் அடுத்தநாள் வைக்கப்படுமாயின் பழுதடைந்துவிடும், அதனால் இஸ்ரவேலர்கள் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய மன்னாவுக்காக காத்திருத்தல் வேண்டும், இதுபோல கர்த்தருடைய நாளாந்த கிருபைக்காக இயேசுவிடம் காத்திருத்தல் வேண்டும். நேற்றய பலத்தில் நாம் வாழமுடியாது, இன்றய கிருபை நமக்கு அனுதினமும் வேண்டும். கர்த்தர் மன்னாவை ஏற்பாடு செய்தார், ஆனால் இஸ்ரவேலர்கள் அதனைச் சேர்க்கவேண்டும், சாப்பிடவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் யாவும் கிறிஸ்துவுக்குள் கொடுக்கப் பட்டிருக்கின்றது, அவர் எங்களுக்கு எதனை வைத்துள்ளார் என்று தேடிப்பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**E.மன்னாவும் ஓய்வு நாளும் (யாத்.16:22-36).** இந்தப்பகுதியில் 7ம் நாள் மற்றநாட் களைவிட பிரிக்கப்பட்ட நாளாக முன்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. எகிப்தின் இருளி லிருந்தும், அடக்கு முறையிலிருந்தும், மக்கள் கவனயீனத்தில் வாழ்ந்தார்கள், அல்லது ஓய்வு நாளை அனுசரிக்காமல் விட்டுவிட்டார்கள். தேவன் ஏழாம் நாளை ஆசீர்வ தித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். ஜனங்கள் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.( ஆதி2:3).நாற்பது வருடங்கள், அதாவது இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக, இந்த வாரங்கள் முழவதும் ஆறாம் நாளில் இரட்டிப்பான பங்கு மன்னாவைக் கொடுத்தார், அவைகள் இரண்டு நாட்கள் பழுதடையாமல் புதிதாக இருந்தன. இரண்டாயிரம் ஓய்வு நாட்கள் வந்தன, அந்த நாள்களில் மன்னா கிடைக்கவில்லை. இங்கு நாம் கவனிக்க வேண்டியது ஆறு நாளும் நாம் வேலை செய்யலாம், ஓய்வுநாளில் நாம் ஓய்ந்திருக்க வேண்டும், அந்த நாளுக்குரிய மன்னாவை , முதல் நாளோ கர்த்தர் கொடுத்து, அதனைப் பழுது படாமலும் காத்துவந்தார், காரணம் ஓய்வு நாளைப் பரிசுத்தமாக கர்த்தருடன் நாம் செலவு செய்தல் வேண்டும் என்பதற்காவேயாகும். இன்று நாம் எங்கள் சுய வழிகளிலேயே போகிறோம், ஒரு நாள் கர்த்தரை ஆராதிப்பதற்குச் செலவு செய்வதற்குத் தயங்குகிறோம். இதனாலேயே நாம் இன்று ஆவிக்குரியதுமானதும், சரீரப்பிரகாரமானதுமான நோயாளிகளாக இருக்கின்றோம். நாம் கர்த்தரோடு அந்த நாளைச் செலவு செய்து, அவர்தரும் மன்னாவைப் பெற்றுக் கொள்ள மனதில்லாது இருக்கின்றோம். கர்த்தரோடு செலவு செய்யும் அந்த ஒருநாள், மிகுதி ஆறு நாளுக்குமான மன்னாவைத்தரும் என்பதை நாம் இன்று மறந்தவர்களாக, எங்கள் கெட்டித்தனத்தினால் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கர்வத்தில் ஓய்வு நாளைக் கடைப்பிடக்காமல் இருக்கின்றோம். இப்படியான வாழ்வு

கர்த்தருடைய ஆசீர்வாதத்தை எங்களுக்குத் தருமா என்று யோசிக்கத் தவறுகின்றோம்.

### III. ரெவிதீமிலேஇஸ்ரவேலர்கள் (யாத் 17:1-18:27)

**A. அடிக்கப்பட்ட கன்மலையை( யாத்.17:1-7)** இங்கு, மீண்டும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, ஜனங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக வனாந்தரத்தில் மடிந்து போவற்காகவா எகிப்திலிருந்து எங்களைக் கூட்டிவந்திர்கள் என்று முறுமுறுத்தார்கள். இந்த முறுமுறுத்தலுக்கு “ **கர்த்தரை பரீட்சித்தல்**” என்று மோசே பெயரிட்டார், உதவி தேவையான நேரங்களிலெல்லாம் உதவிசெய்த இரக்கமுள்ள தேவனை நம்பாமல் ,கர்த்தரின் பிரசன்னத்தை உணராமலும் முறுமுறுத்தார்கள். இது கர்த்தரை நன்றி செலுத்தாமல் இருப்பது மட்டுமல்லாமல், கர்த்தருடைய வழிநடத்தலுக்கும், மோசேயினுடைய தெய்வீக ஊழியத்திற்குமான அவநம்பிக்கையை காண்பிக்கிறதா கவும் இருந்தது.இந்த முறுமுறுப்பானது, மோசேயின் பார்வையில் கடுமையான எதிர்ப்பாக இருந்தது. அவர் கர்த்தருக்கு முன்பாக முறையிட்டார் .“*அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடேகூட்டிக் கொண்டு, நீ நதியை அடித்த உன்கோலை உன்கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின் மேல்நிற்பேன்;* ***நீ அந்தக் கன்மலையைஅடி;*** *அப்பொழுது ஜனங்கள் குடிக்க* ***அதிலிருந்து தண்ணீர்புறப்படும் என்றார்;***”(யாத். 17; 5-6)

**B. அமலேக்கியருடனான யுத்தம் (யாத்.17:8-16)** ரெவிதீமிலே அமலேக்கியருடன் யுத்தம் ஏற்பட்டது இங்கு இடம்பெற்ற இரண்டாவது முக்கிய சம்பவமாகும். இஸ்ரவேலர்கள் தனிமையிலே வனாந்தரத்தில் இருந்தார்கள், இந்த வேளையில் அவனுக்கு ஒரு விரோதி எதிரியாக வந்தான், ஏசாவின் பரம்பரையிரான நாடோடிக் கோத்திரம், அவர்கள் சவக்கடலின் தென்கிழக்குப்பகுதியில் வாசம் பன்னினார்கள். இப்படிப்பட்ட எதிரகளை வெற்றி கொள்வது எபிரேயர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும், இந்த கோத்திரத்தின் பெரும் ஜாதியினர்தான் அமலேக்கியராவர். இவர்கள் ஏன் தாக்குதலைத் தொடுத்தார்கள் எனபதற்கான காரணம் கூறப்படவில்லை. அவர்கள் இந்தத் தாக்குதலை பின்புறமிருந்தே தொடுத்தார்கள். அமலேக்கியர்கள், கர்த்தரையும், அவருடைய மக்களாகிய இஸ்ரவேலரையும் அவமதித்த காரணத்தால், அமலேக்கை வானத்தின் கீழேங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்று கர்த்தர் மோசேயிடம் கூறினார்.( வசனம். 14) இந்த வார்த்தைகள் சவுல் ராஜாவினாலும் கூறப்பட்டது.(1 சாமு.15)அது தாவீது ராஜாவினால் நிறைவேற்றப்பட்டது(1 சாமு30; 2 சாமு 1:1-8, 12). இங்கு இஸ்வேலர்களின் எதிர்காலத் தலைவனாகிய யோசுவாவைப் பற்றி முதன்முதலில் குறிப்பிடப்படுகின்றது, இவரையே அமலேக்கியருடனான யுத்தம் செய்யும்படி மோசே தெரிவு செய்தார். இந்த யுத்தம் பள்ளத்தாக்கிலே இடம்பெற்றது, மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள், அங்கிருந்து பள்ளத்தாக்கை அவர்களால்

பார்வையிட முடிந்தது, அங்கே மோசே கோலைத் தன்கையில் பிடித்தபடி இருந்தார், யுத்தம் நாள்முழுவதும் நடந்தது. மோசேயின் கை தாழாமல் ஆரோனும் ஊரும் தாங்கி பிடித்தார்கள். அவர்கள் இறுதியில் வெற்றியைப் பெற்றுக் கொண்டார்கள். இந்த வெற்றியை நினைவு கூரும் வண்ணமாக மோசே ஒரு பலிபீடத்தைக்கட்டி, அதற்கு **யெகோவாநிசி** என்றுபேரிட்டான்.

**C.** எத்திரோவின் வருகை **(யாத் 18:1-27)** ரெவிதீமிலே இடம் பெறும் மூன்றாவது முக்கிய சம்பவமாக மோசேக்கு உதவியாக ஜனங்களின் ஆளுனர்களை நியமிக்கப்படுகின் றார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் மாமனாராகிய எத்திரோவின் வீட்டுக்கு அண்மையில் வந்துவிட்டார்கள். பல மாதங்களாக மோசேயின் மனைவியும் பிள்ளை களும், சந்தேசமின்றி எத்திரோவுடன் இருந்தார்கள், தற்போது அவர்கள் எத்திரோ வினால் மோசேயிடம் கூட்டிவரப்படுகிறார்கள், மோசேயின் வேலைபழு மிகவும் அதிகமாக இருந்தபடியால், மோசேயின் வேலையை இலகுபடுத்தும்வண்ணம், மற்ற வர்களுக்கும் அதிகாரத்தைப் பங்கிட்டு வழங்கும்படி எத்திரோவினால் மோசேக்கு ஆலோசனை வழங்கப்பட்டது, இதனை மோசே ஏற்றுக் கொண்டார்.

**IV. இஸ்ரவேலர்கள் சீனாய்வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். (யாத். 19:1)** மூன்றாம் மாதத்திலே குறைந்தது ஆறுவாரகால பிரயாணத்திற்குப் பிற்பாடு, சீனாய் வனாந் தரத்தை இஸ்ரவேலர்கள் வந்தடைந்தார்கள். அவர்கள் ஏறக்குறைய 200மைல் தூரம் பிரயாணம்பண்ணி, இந்த இடத்தில் ஏறக்குறைய ஒருவருஷம் மட்டும் தங்கியிருந் தார்கள். இந்த இடத்தில் வைத்து கர்த்தர் இவர்களுக்குப் புதிய உடன்படிக்கையையும் அழைப்பையும் கொடுத்தார். இங்கு இவர்கள் ஒருதேசமாக அழைக்கப்பட்டார்கள்.

**I. இஸ்ரவேலர்கள்சீனாய்வனாந்தரத்தில் (யாத். 19:1-2)**

**சினாய் மலையின் முன்பாக இஸ்ரவேலர்கள். (யாத். 19:1-2).**மோசே அழைக்கப்பட்ட நேரத்தில் கர்த்தர் சொன்னதாவது,“*நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்*” யாத். 3:12, இப்போது இஸ்ரவேல் ஜனங்கள் இந்த மலைக்கு முன்பாகவே கூடாரமிட்டுள்ளார்கள். இந்த ஒரேப் பர்வதத்தை வந்துசேரும் போது இரண்டு பெரிதான விடயங்கள் மோசேயின் மனதில் கலந்து இருந்திருக்கும், ஒன்று எரியும் முள்செடியின் அனுபவம், மற்றது கர்த்தரைச் சந்தித்தல் என்பனவாகும்.அழைப்பும் கட்டளையும், மோசே கர்த்தருக்கு கீழ்ப்படிந்தான். சகலதும் கர்த்தருடைய அழைப்பிலேயே தங்கியிருந்தது. பார்வோனு க்கு முன்பாக நிற்பதற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார். மரணத்தை விட மோசமான

அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர்களை மீட்பதற்கு ஒரு கருவியாக மோசேயைக் கர்த்தர் பயன்படுத்தினார். அவருடைய கைத்தடியினால் செங்கடல் பிரிந்தது, அதாவது இஸ்ரவேலர்களுக்கு விடுதலையும், அவர்களைக் கலக்கியவர்களுக்கு மரணமும் ஏற்பட்டது. அவருடைய தலைமைத்துவம் இந்த இடத்திற்கு வரும்வரை ஒரு போரா ட்டமாகவே இருந்தது, கர்த்தர் அவர்களுக்கு ஒரு சிறப்பான வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தார். அடக்கினவர்களை அழிப்பது மிகவும் இலகுவானது என்றும், ஒடுக்கப்பட்ட இவர்களை கற்பித்து ஒழுங்குபடுத்துவது மிகவும் கஸ்டமானது என்ற பாடத்தை மோசேகற்றுக்கொண்டார்.

**சினாய், ஓரேப் என்ற பெயர்களின் பாவனை**

1. ***சீனாய்;-*** சீனாய் ஒரு மலையாகும் ( நியாயப்பிரமாணம்வழங்கப்பட்ட இடம்) இதன் அடிவாரம் சினாய்வனாந்தரம் எனப்படும். சீனாய் மலையானது குறிப்பிடத்தக்க சிகரமாகும்.
2. **ஓரேப்;**-ஓரேப் என்பது அந்த நிலப்பகுதியில் காணப்படும் மலைத் தொகுதிகளின் பொதுவான சிறப்புப் பெயராகும். இதற்குச் சில வித்தியாசமான கருத்துக்களும் காணப்படுகின்றன, வருஷங்களின் காரணமாக இந்தப்பள்ளத்தாகினதும், மலையி னதும் பெயர்கள் மாற்றமடைந்துள்ளன. ஆனாலும் சீனாய் மலையிலே பத்துக் கட்டளைகள் கொடுக்கப்பட்டது என்ற கருத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. சில விளக்கவியலாளர்கள் சீனாய், ஓரேப் என்பன இரண்டுமே ஒன்றுதான் எனக் கூறுகின்றார்கள்.

**II. மோசே பேச்சு வார்த்தையின் இணைப்பாளராக இருந்தார்.( யாத். 19:3-25)**

**A. வாக்குறுதிகள். (யாத். 19:3-6)**மோசேயின் தலமையின் கீழ் இஸ்ரவேலர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையானது, முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களுக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் வளர்சியாகும். எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் மீட்கப்பட்டு கொண்டு வந்ததும், ஆபிரகாமின் சந்ததியினருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரமாகும். இவர்கள் இழக்கப்படவில்லை, ஆனால் நம்பிக்கையற்றவர்களாக காணப்படுகின்றார்கள். சீனாய் மலைக்கு வருவதற்கு முன்பாக, கர்த்தர், தன்னுடைய ஊழியக்காரனாகிய மோசேக்கூடாக, அவர்களை விடுதலையாக்கியதன் நோக்கம் அவர்களை ஆசீர்வதிப்பதற்காகவே என்பதை ஞாபகப்படுத்தினார். கழுகுகளின் செட்டைகளினால் தாங்கி நடத்தினேன் என்ற வார்த்தை மிகவும் உள்ளத்தைத் தொடக்கூடியதாகும், எகிப்திலிருந்து புறப்பட்டுப் பிரயாணம் செய்யும் தன்னுடைய மக்களை பொறுமையுடனும் இரக்கத்துடனும் கர்த்தர் பாதுகாத்து வந்தார். *சகலஜனங்களிலும்*

*நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தா யிருப்பீர்கள்; நீங்கள் எனக்கு ஆசாரியராஜ்யமும் பரிசுத்தஜாதியுமாய் இருப்பீர்கள் என்று இவர்களைப்பார்த்து கர்த்தர் குறினார். ( 19;-5-6)* உலகத்தைக் கர்த்தர் உருவாக் கினபடியால், சகலரும் கர்த்தருடையவர்களாகும், எப்படியோ, இஸ்ரவேலர்கள் கர்த் தருடையவர்களே, அவர் இவர்களை உருவாக்கினார் என்பதினால் அல்ல, மாறாக இவர்களுக்கூடாக கர்த்தர் பேசி உலகம் முழுவதற்கும் இரட்சிப்பைக் கொடுப்பதற்காக. இவர்களை அவர் தெரிந்து கொண்டதனால் இந்தச் சந்த்தியினருக் கூடாகவே இரட்சகரும் பூமியில் அவதரித்தார்.

**B. உடன்படிக்கையின் அவசியம். (**இந்த கிருபையைப் பெற்றுக் கொள்கிறபடியால், இன்று ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு **யாத். 19:5)**சீனாய் மலையில் மோசேக்குக் கொடுக்கப்பட்ட சட்டவாக்கத்தின் திறவு கோல் வசனமாக ""**என்வாக்கை உள்ளபடிகேட்டு, என்உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால்**" என்பதே கூறப்பட்டுள்ளது. இது எல்லாச்சட்டங்களுக்கும், மரபுகளுக்கும் முதன்மையானது. இதுவே பழைய ஏற்பாட்டுப்புத்தகம் முழுவதற்குள்ளும் செய்யபட்டுக் கொண்டிருக்கும் திறவு கோல் வாசகமாகும். இதில் மிகவும் சுவாருஷ்யமான விடயம் என்னவென்றால், எபிரேய மொழியில் "கேட்டல்" என்பதற்கு " கீழ்படிதல் " என்று அர்த்தமாகும். விருப் பம் இல்லாமல் இந்தக் உடன்படிக்கையை கர்த்தர் கொடுக்கவில்லை, இது நியாயப் பிரமாணத்திற்குள் வந்தாலும், இது கிருபையின் உடன்படிக்கைக்குள் கிரிகை செய்கி ன்றது. அவர் இரட்சிப்பைத் தருகின்றார், அதை நாம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இஸ்ரவேலர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் உறவுடன் ஜீவிக்கும், பரிசுத்த ஜனமாகும். எல்லா ஜாதிகளிலும் இருந்து இஸ்ரவேலர்கள் தெரிவு செய்யப்பட்ட படியால், அவர்கள் பரிசுத்த ஜனம் அல்ல, அவர்கள் கர்த்தருடன் உறவு கொள்ப வர்களாயிருப்பதனால் பரிசுத்த ஜனமாயிருக்கின்றார்கள். வெளிப்படுத்தல் 5;9இல் இவ்வாறு கூறப்படுகின்றது "*ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர்*". இதைப் போலவே புதிய ஏற்பாட் டிலும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்கள், கர்த்தரின் கிருபையின் உடன் படிக்கையினால், மீட்கப்பட்ட சபையாக உருவாகுகிறார்கள். கிறிஸ்தவர்கள் உரியவர் களாகின்றார்கள். நாம் எல்லோருக்கும் கிறிஸ்த்துவை அறிமுகப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் "*நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் ; நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்*" என்று இயேசு கூறியுள்ளார்.( மத்5:13-14).

**C. *ஜனங்களின் பதில்*** *;-*" கர்த்தர் சொன்ன எல்லாவற்றையும் நாம் செய்வோம்" இதுதான் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டவர்களின்வாக்காக இருந்தது. இந்த விடயத்தில் அவர்களுக்கிடையில் மோசே மத்தியஸ்தராக இருந்தார். இந்த கால கட்டத்தில், தேசிய உடன்படிக்கையை மேற்கொள்ளுமாறு கர்த்தரிடமிருந்து கட்டளை

வந்தது. கடந்த அறுநூறு வருடங்களுக்கு ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கும் இதற்கும் வித்தியாசம் ஏதும் இருக்கவில்லை. கர்த்தர் ஆபிரகாமுக்கு மட்டும் தேவனாக இருக்கவில்லை, மாறாக அவருடைய சந்ததியினருக்கும் தேவனாயிருக்க விரும்பினார். இது அந்த உடன்படிக்கையின் புதிய வடிவமாக இருந்தது. சீனாய் மலை யின் அடிவாரத்தில் நடந்த இந்த நிகழ்சிக்குப் பிற்பாடு, கர்த்தர் சொன்ன இந்த விட யங்களை ஆழ்ந்த கவனத்துடன் நோக்கினார்கள், கர்த்தர் சொன்னார், *" நான் உங்கள் தேவனாயிருப்பேன்"* மக்கள் இதற்குப்பதிலாக *" கர்த்தர் சொன்ன எல்லாவற்றையும் நாம் செய்வோம்"* என்று கூறினார்கள். கர்த்தரிடமிருந்து நியாயப்பிரமாணத்தையும், பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ளும் தேசம் எவ்வளவு பாக்கியமுள்ளது. கர்த்தர், அவர்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறார், அவர்களுக்காக யுத்தம் பண்ணுகிறார், அவர்க ளுடைய போக்கிலும் வரத்திலும் கூடவருகின்றார். உண்மையில் இப்படி கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படும் ஜனம் மிகவும் பாக்கியமுள்ளது.

**D. சீனாயில் கர்த்தரின் மகிமை (யாத். 19:16-25)** கர்த்தருடைய ஜனங்கள் அவரின் விருப்பத்தை அறிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். இந்த ஜனங்கள் கர்த்தர் மிகவும் பெரியவர் என்பதையும், அவர் பரிசுத்தமுள்ளவர் என்பதையும் அறிந்து கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் எரிச்சலுள்ள தேவன் என்றும், நீடிய பொறுமையுள்ளவர் என்பதையும் அறிந்து கொள்வார்கள். பரிசுத்தம் செய்வதற்காக இரண்டு நாட்கள் கொடுக்கப்பட்டன, மலைக்கு அருகே மனிதர்களோ, மிருகங்களோ வரக்கூடாது என எல்லை குறிக்கப்பட்டது, தவறும் பட்சத்தில் கொலை செய்யப்படுவார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டார்கள். மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின் னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகாபலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். கர்த்தர் இறங்கினார். கர்த்தர் பேசுவதை ஜனங்கள் கேட்டார்கள். மோசேயை கர்த்தர், தம்முடைய ஜனத்திற்கு நியாயப் பிரமாணத்தையும், சட்டவாக்கத்தையும் கொடுப்பதற்கு இணைப்பாளராகப் பயன்படுத்தினார். தேவனுடைய மகிமையும், அவருடைய பிரசன்னமும் எல்லா ஜனத்தாரின் மத்தியிலும் தோண்றியது.

**I. உடன்படிக்கைப் புத்தகம்.(யாத். 21:1-23:33)**

**A. இஸ்ரவேலர்களே "எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பார்கள்"(யாத். 19:5)** இஸ்ரவேலர்கள் மற்ற ஜனங்களைப் போன்றவர்களல்ல, இவர்கள் பரிசுத்த ஜனங்கள், தெரிவு செய்யப்பட்ட கோத்திரத்தார், இரட்சிப்பிலுள்ளவர்களும் மற்ற தேசத்தாரின் இரட்சிப்பின் செய்தியாளருமாவார்கள். மோசே, கர்த்தரின் வல்லமையால் ஜனங்களை விடுவித்தவர், ஜனங்களை சீனாய் மலைக்கு அழைத்துச் சென்று, அங்கு அவர்களைக் கர்த்தருக்காக பரிசுத்த ஜாதியாக வேறுபிரத்தவர். சீனாய்

வனாந்தரத்தில், இஸ்ர வேலர்கள் உடன்படிக்கையின் தேசத்தாராகும் சிலாக்கியம் பெற்றவர்கள், இவர்கள் உடன்படிக்கையின் நம்பிக்கையும், வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டவர்களுமா வார்கள், அவர்கள் உடன்படிக்கையின் தேசத்தாரின் கடமைகளைப் பொறுப்பேற்ற வர்கள். இதனாலேயே கட்டுப்பாடுகளும், பலியிடுதலுமான கட்டளைகள் கொடுக்கப் பட்டன. இந்த நியாயப்பிரமாணமானது, உடன்படிக்கையின் மக்களுக்கு கடமைக ளையும் சிலாக்கியத்தையும் வகையறுத்தது. பஞ்சாகமத்தின் அதிக பகுதிகள் நியாயப் பிரமாணங்களைக் கொண்டுள்ளது, மோசேயே இதன் கருவியாகவும் இணைப்பாளரா கவும் இருக்கின்றார்.

B. **மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து**;- இஸ்ரவேல் மக்களின் சரித்திரம் பஞ்சாகமப்புத்தகத்தின் நியாயப்பிரமாணங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளன. சரித்திரத்தோடு இணைந்த சட்டங்கள் உள்ளன. கர்த்தரினால், ஜனங்களுக்காக இந்த நியாயப்பிரமாணங்கள் திரும்ப திரும்ப மோசேக்கு கொடுக்கப்பட்டன. பஞ்சாகமத்தின் முழுச்சிறப்பியல்புகளும், பாலைவனப் பிரயாணங்களின்போது மோசேயினால் எழுதப்பட்டவையாகும்.

A. **நியாயப்பிரமாணத்தின் மூன்றுபிரிவுகள்**;-

1. இஸ்ரவேலர்கள், விவேகமுள்ளவர்கள், கர்த்தரில் நம்பிக்கையுள்ளவர்கள், கர்த்தரின் விருப்பத்தின்படி ஆளுகை செய்யப்படுபவர்களாகிய இவர்களுக்கு பத்துக்கட்டளைகள், அல்லது ஒழுக்க கோவை கொடுக்கப்பட்டன.

2.ஜனங்கள் மேசியாவை எதிர்பார்க்கிறபடியால், பல மதச்சடங்குகளையும், பாரம் பரியங்களையும், உட்ளடக்கிய ஆராதனை முறமையைச் செய்யும் வண்ணம் சட்டம் வழங்கப்பட்டது, இவைகள் யாவும் கிறிஸ்த்துவைக் குறிப்பவையாகவே இருக்கின்றன, மத ஆராதனைச் சடங்குகளுக்கான சட்டமும், வழங்கப்பட்டன.

3. இஸ்வேலர்கள், ஒரு புதுவிதமான ஜாதியினராவர், இவர்களுக்கு குடிசார் கொள்கைகளும்,மற்ற ஜனங்களை விட்டுப் பிரிந்து வாழவேண்டும் எனற யாப்பும் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய அரசு கடவுள் இறைமையாட்சியைக் கொண்டது, அவர்களின் ஆளுனராக கர்த்தரே இருக்கின்றார். அவர்களுக்கு குடியியல் சட்டக் கோவையும் உண்டு.

1. **ஒழுக்கக் கோவை**;-பத்துக் கற்பனையைச் செயற்படுத்துவதற்கு கர்த்தர்மீது மாறாத அன்புள்ளவராக இருக்க வேண்டும். அயலாரை நேசிக்க வேண்டும், வயோதிபரைக் கனம் பண்ண வேண்டும், குற்றங்களை மன்னிக்க வேண்டும், தீமைக்குப்பதிலாக நன்மை செய்ய வேண்டும், அன்பும், மனதுருக்கமும், உபசரிப்பு போன்ற குணங்கள் செயற்பட வேண்டும். இந்த ஒழுக்க கோவைக்கூடாக, வெளியரங்கமான ஆராதனை

யைவிட இவற்றையும் தேவன் எதிர்பார்க்கின்றார் என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். இது கர்த்தரின் அன்பை செயல்வடிவமாக பிரதிபலிக்கின்றது. இந்த ஒழுக்க கோவையைத் தந்தவர், நித்தியமான கர்த்தராகும்.

2. **சடங்காச்சார சட்டம்**;- சடங்காச்சார சட்டமானது ஆசாரியர்கள், ஆசாரிப்புக் கூடாரம் பலிசெலுத்தல், மதச்சடங்குகள், ஆராதனை என்பவற்றிற்கு உரியவையாகும். இந்த வேலைகளுக்காக லேவி கோத்திரம் செயற்படத் தொடங்கிய நாளிலிருந்து, இந்தச் சட்டம் லேவியச் சட்டம் என்றும் சில சமயங்களில் பெயர்பெறும். ஆசாரிய ஊழியம், ஆரோனுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் உரியவையாக நிர்ணயிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் நோக்கமானது, யூதர்களை விக்கிரக ஆராதனையிலிருந்து காப்பாற்றுவதற்கும், பாவ நிவாரண பலிசெலுத்தி பாவத்தை நிவர்த்தி செய்வதற்கு மானதாகும். தெய்விக பரிசுத்தத்துடன் மனிதர்கள் செயற்படல் வேண்டும் என்பதையும் அறிவிக்கின்றது. கர்த்தராகிய கிறஸ்த்து உலகத்தில் பிரதான ஆசாரியராக வந்து, பாவ நிவாரண பலியாக சிலுவையில் மரித்த போது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

3. **குடிஉரிமைச்சட்டம்**;-குடிஉரிமைச்சட்டமானது, இஸ்வேலர்களின் அரசியல், மற்றும் நீதித்துறை சார்ந்தனவாக உள்ளது. நில உரிமை, அதன் விற்பனை, அதனை மீளுதல், அதனைச் சுதந்தரித்தல், போன்றவையும்,வேலைக்காரன் அல்லது அடிமை, அவர்க ளுக்குரிய பராமரிப்பு, போன்றவையும், பணம் கடன் கொடுத்தல், அதனை மீட்டுக் கொள்ளுதல், ஏழைகளுக்கான உரிமைகள், அந்நியன், நோயாளர், வயதானவர்கள் போன்றவற்றிற்கான சட்டங்கள் போன்றவையாகும்.இவை ஒழுக்கக் கோவைச் சட்டத் துடன் மிக நெருக்கமானவையாகும். இவைகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலுக்கும், விசுவாசத்திற்கும், உரியவையாகும். இன்றய நாட்டுச் சட்டங்கள் யாவும் இவற்றை ஒத்ததாகவே உள்ளன என்பது கவனிக் வேண்டியவையாகும். யா22;29 ல் முதற்பலனானவை எனக்கானது என்று சொல்லப்பட்டுள்ளது.

**இன்றய சட்டங்களின் பொருத்தம்**;-இரண்டு நோக்கங்களுக்காக சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கின்றார். யாத் 20:2 உன்னை அடிமை த்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. இந்த வார்த்தைகள் பத்துக் கற்பனைகளின் முகவுரையல்ல. அவைகள் உடன் படிக்கையின் வாக்குத்தத்தங்கள், இந்த வாக்குத்தத்தங்கள் இன்றய கிறித்தவர்களுக் கும் உரியவைகளாக இருக்கின்றன.அவர் எங்கள் தேவனாகிய கர்த்தர்.அவர் எங்க ளைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டது போல மீட்டுள்ளார். மலைப்பிரசங்கத்தில், இயேசுக்கிறிஸ்து, தன்னுடைய விசுவாசிகளுக்கு இதனைக் கூறியுள்ளார். அவர், தான் நியாயப் பிரமா ணத்தை அழிப்தற்கல்ல அதனை நிறைவேற்றவே வந்தேன் என்றார். எங்களுக்கு

சட்டம் இருக்கிறது என்று தெரியும், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் தெரியும், அத்துடன் அதனை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்றும் தெரியும்.

நீதியானது கண்டிக்கின்றது.பாவத்தின் விளைவுகளிலிருந்து தப்புவதற்கு அவருடைய இரக்கமும், வாக்குத்தத்தமும் வழிசெய்கின்றது. ஆதியாகமத்தில் கர்த்தருடைய வாக் குறிதிகளைப்பார்க்கின்றோம்

**நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனமும்.**;-நியாயப் பிரமாணத்தில் உள்ள யாவ ற்றையும் மனுதனுடைய கெட்டித்தனத்தால் செய்ய முடியாது என்று நியாயப் பிரமாணமே ஏற்றுக் கொள்கின்றது. நியாயப்பிர மாணத்தின் நோக்கமே நான் என்ற உணர்விலிருந்து அவனை பிரித்தெடுப்பதேயாகும், அதுமட்டுமல்லாமல் இரட்சிக்க ப்படல் வேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டுள்ளது. நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் ( **ஆசிரியராய்** ) இருக்கிறது. (கலாத்தி3:24) பாவம் கர்த்தருக்கும் மனிதனுக்கும் உறவை உடைத்துவிடும். ஆனால் ஒப்புரவு செய்தலுக்கும், மறுசீரமைப் படைவதற்கும் ஒரு வழி உண்டு.பாவம்பற்றிய சரியான எண்ணம் இல்லாமல், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நியாயப்பிரமாணம் தேவையற்றது, ஆனால் இது இயேசுவில் நிறைவேற்றப்படுகின்றது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும், கர்த்தரின் கொடையாகிய அன்பையும் இரக்கத்தையும் காண்பிக் கின்றது. பாவத்தில் வாழ்பவர்களை கர்த்தருடைய, ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத் தில் ஸ்திரியின் வித்திற்கூடாக இரடசிப்பு கிடைக்கும் என்று கூறப்பட்டுள்து. உருவா க்கியவருக்கு கீழ்ப்படியாமல், வாழ்க்கையை வனாந்தரமாக்கிய மக்களுக்கு, மீண்டும் ஆசீர்வாத வழியைக் கொடுப்பதற்கு, கர்த்தர் என்றும் விருப்பமுள்ளவராக இருக்கின் றார். கிறிஸ்துவிற்கு முன்பாக வாழ்ந்தவர்களுக்கு, பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை வழிகாட்டியுள்ளது, ஆனால் அந்த வாழ்க்கையானது, தேவ ஆட்டுக்குட்டியானவர், சிலுவையில் பாவப்பலியைச் செலுத்தும் நாளையும், காலத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கர்த்தர் உனக்காக ஏற்படுத்திய அந்த கொடையை ஏற்றுக் கொண்டு, உன்னைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் செய்கின்றாயா? இதுவே கர்த்தருடைய வழி, வேறு ஒரு வழி இல்லை. கிறிஸ்துவே அந்த வழியாகும். **அவராலேயன்றி வேறொ ருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொ ருநாமம் கட்டளையிடப்படவும் இல்லை.(அப். 4;12)**

**II. உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளல்**, மிகுதி அரைவாசி இரத்தம் ஜனங்கள் மீதும் மோசேயினால் தெளிக்கப்பட்டது. இந்தச் செயற்பாடானது, கர்த்தரும், ஜனங்களும் இந்த உடன்படிக்கையினால் ஒருவருக் கொருவர் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். கர்த்தர் அவர்களைப் பாதுகாக்கவும், இரட்சிக்கவும், உதவிசெய்யவும் கட்டுப்படுத்தப்படுகின்றர் **(யாத். 24:1-11)** இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படிவோம் என்று உறுதியளித்த பிற்பாடு, உடன்படிக்கைப்பந்தத்திற்குள் நுழைந்தார்கள். அவர்கள் இருதயத்திலே இந்தச்

செயற்பாட்டைப் பதிய வைப்பதற்கு, மோசே சில குறுப்பிட்ட சடங்குகள் நிறைவேற்றுவதனால் உறுதி செய்தார்.

(1).மோசே, இந்த உடன்படிக்கையின் எல்லா வரையறைகளையும் எழுதி, ஜனங்களில் செயற்படும் நடவடிக்கைகளையும் புத்தகத்தில் எழுதினார்.

( 2)மோசே, இணைப்பாளராக இருந்து, ஜனங்களின் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டார். இஸ்ரவேலர்களின் தேவனாகவும், பாதுகாவலராகவும், அரசனாகவும் யெகோவா தேவனே இருப்பார் அதுமட்டுமல்லாமல், முற்பிதாக்களுக்கு வாக்களித்த வாக்குறிதிகளையும் நிறைவேற்றுவார்.

(3 ) இந்த உடன்படிக்கையானது, இரத்தம் சிந்தப்படாமலும், தெளிக்கப்படாமலும், நிறைவேற்றப்பட முடியாது. மோசே ஒரு பலிபீடத்தைக்கட்டி, இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினான். பலிபீடம் கர்த்தருடைய சிங்காசனத்தைக்குறிக்கும். இந்த இரண்டு பகுதியினர் தான் உடன்படிக்கையின் பங்காளர்களாவார்கள். பலியிடுதல் நிறை வேற்றப்படும் வரை எந்த ஒரு உடன்படிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படல் மாட்டாது. அரைவாசி, இரத்தம் பலிபீடத்தின் மீது தெளித்து உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படவும், அன்பு செலுத்தவும், கர்த்தர் சொல்லும் எதனையும் செய்யவும் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். இஸ்ரவேலர்களின் சரித்திரத்தில், இந்தச் செயற்பாடானது மிகமிக முக்கியமானதாகும்.

**III. ஆசாரிப்புக் கூடாரத்தின் மாதிரி.( யாத்24:12-30:38)** சீனாய் மலையில் மோசே நாற்பது நாள்கள் தங்கியிருந்தார், கர்த்தர் ஆசாரிப்புக் கூடாரத்தின் உருவ அமைப்பை கர்த்தர் கொடுத்தார். இஸ்ரவேலர்கள் சீனாய் மலை அருகில் இருப்பதைக் கர்த்தர் விரும்பவில்லை. அவர்கள் கானான் நோக்கிப் பிரயாணம் பண்ணத் தொடங்கினார்கள், கர்த்தரும் அவர்களுடன் போனார். கர்த்தர் ஜனங்கள் மத்தியில் வாசம் செய்ய விரும் பினார். மோசேக்கு நியாயப் பிரமாணம் கொடுத்த நாள்முதல், முதலாவதாகக் கொடு க்கப்பட்ட ஆசாரிப்புக்கூடார அமைப்புச்சட்டமாகும். மோசே, மலையிலிருந்து இறங் கும் போதே ஆசாரிப்புக் கூடாரம் கட்டுவதற்கான கொடுப்பனவுகளை விருப்பமான இருதயத்துடன் பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம் பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும், விளக்கெண் ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், காணிக்கை கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான். மிகவும் ஆர்வத்துடன் அன்பாக காணிக்கையை ஜனங்கள் கொடுப்பதற்குக் காட்டிய சம்மதம், கர்த்தர் தங்களுடன் இருக்க வேண்டும் என்ற நினைவுகளும் சிறப்பானதாக இருந்தது. ஜனங்கள் கொடுத்த தொகை மனத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை, ஆனால் அவர்கள் கொடுத்த நோக்கம் மன அழுத்த

த்தைக் கொடுக்கின்றது. யாத்25:2ல் *மனப்பூர்வமாயும் உற்சாகமாயும் காணிக்கை தருபவனிடம் வாங்கும்படி சொல்லியிருக்கிறார்.*

IV. **தகுதியான வேலைகாரர் தெரிவு செய்யப்பட்டார்கள் .(யாத்31:1-18)** ஆசாரிப்புக் கூடாரத்தின் உருவ அமைப்பு கர்த்தரால் மோசேக்கு கொடுக்கப்பட்ட பின்பு, அந்த அமைப்பின் படியே விருப்பத்துடன் வேலைசெய்வதற்கு தொழிலாளர்கள் தேவைப் பட்டார்கள். இந்த வேலை செய்வதற்கு மனிதர்களை கர்த்தர் தெரிவு செய்து, சகல விதவேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும்புத்தியும் அறிவும் அவர்களுக்கு உண்டாக, அவர்களை தேவ ஆவியினால் நிரப்பினேன் என்று கர்த்தர் மோசேக்கு கூறினார். இது எங்களுக்கும் பொருத்தமாவே இருக்கும், ஏனெனில், கர்த்தர் எங்களை அழைக்கும் போது, அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கான சகல ஞானத்தையும் தருவார். வேலையில் தகுதியற்றவர்களை கர்த்தர் சேர்த்துக் கொள்ளமாட்டார்.

**I. பொன் கன்றுக்குட்டியைச் செய்து ஆராதித்தார்கள் (யாத். 32:1-6)**

B. **புத்தியில்லாத உடன்பாடு (யாத். 32:2-6)**மோசே இனிமேல் திரும்பி வரமாட்டார் என கூடாரத்திலுருந்த ஜனங்கள் ஊகித்துக் கொண்டார்கள், அதனால் புறஜாதியினரின் ஆராதனையை செய்வதற்கு உற்சாக மடைந்தார்கள். வேறுயாரும் அவர்களை வழி நடத்துவதை அவர்கள் விரும்பாமல், தங்களை வழிநடத்த தெய்வங்களைச் செய்து தரும்படி ஆரோனைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் எகிப்தில் செயற்படுத்திய பழைய பழக்கங்களைச் செய்வதற்குத் திரும்பினார்கள். இஸ்ரவேலர்கள் சுரூப வழிபாடுகள் நீண்ட காலமாக செய்து வந்தவர்கள். மெசமத்தேமியாவில், முற்பிதாக்கள் **சுருப வணங்கம்** செய்தவர்கள். தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பாகால் பேய்களுக்குத் தங்கள் பலிகளை இனிச்செலுத்தாதிருப்பார்களாக; இது அவர்கள் தலைமுறை தோறும் அவர்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது .(லேவி 17:7; ) ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்.\ (யோசுவா 24:14;) ஆரோன் , அவர்களிடம் பொன் நகைகளைக் கழட்டித்தரும்படி கேட்கும் போது, அவர்கள் மனம்மாறுவார்கள் என எதிர்பார்த்தார், அனால் அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் கன்றுக்குட்டியை செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள். அவர்களுடைய முடிவான விருப்பத்தை ஆரோன் தவறாக நிதானித்து விட்டார். ஒரு வாரமாக தலைவனாக இருந்தவர், அவர் தவறான தீமைக்கு அவர்களை வழிநடத்தினார். உடன்படிக்கையை நினைவுபடுத்தி அவர்களைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, அவர்கள் வேண்டுதலை நிறைவேற்றி, முதல் மூன்று கற்பனைகளையும்

மீறச்செய்தார். அழிவில்லாத தேவனுடைய மகிமை யை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாகமாற்றினார்கள். (ரோமர் 1:23).எருது அடையாளமானது எகிப்திய தெய்வங்களின் ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங் களைப் பிரதிபலிக்கின்றது. இஸ்ரவேலர்களின் பாவமானது சுருபவணக்கமும், பலதெய்வ வணக்கங்களைக் கொண்டதாகும். இந்தக் கன்றுக்குட்டிதான் இவர்களை எகிப்திலிருந்து மீட்டுவந்த தெய்வம் என கூறுகின்றார்கள். இந்தத் தெய்வத்திற்கு எதிராகவே கர்த்தர் நியாயத்தீர்ப்புச் செய்தார். இந்தநேரத்தில், ஆரோன் ஒரு சமரசத்தை அறிவிக்கின்றார், ஒருபலிபீடத்தைக்கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். நாங்கள் இரண்டையும் சேவிப்போம் எவ்வளவு நாசூக்கான வேலை. கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்று இவ்வாறான பாசாங்கான சுரூப வணக்கம் ஊடுருவி உள்ளது. உயிருள்ள, பரிசுத்த, நீதியுள்ள தேவனுக்கு முன்பாக , மாய்மாலமான சுருபவணக்கம் பரவியது. பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக்காத்துக் கொள்வீர்களாக என்று 1யோவான் 5;21 கூறுகின்றது. கர்த்தரோட ஒப்புவாகுதலுக்கான நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்பு, ஜனங்கள் சுரூப வழிபாட்டில் கலந்து கொண்டு தங்களைப் பரிசுத்தக் குலைச்சலாகினார்கள், பரிசுத்தரை மறந்தார்கள். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியபாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது 1 சாமு 15:23,

**II. மலை உச்சியில் கர்த்தர் மோசேயுடன் கூட இருந்தார். (யாத். 32:7-14)**

**A. பாவத்திற்கு எதிராக பயங்கரமான கோபம். (யாத்.32:7-10)** சீனாய் மலை நெருப்பினாலும், புகையினாலும் சூழப்பட்டிருந்தது. கர்த்தர் ஆராதனை செய்தற்கான ஆசாரிப்பு கூடாரம் கட்டுவதற்கான விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, கர்த்தர் அதை இடைநிறுத்தி, மோசேயை நோக்கி: நீ இறங்கிப் போ; எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டு வந்த உன்ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டுவிலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒருகன்றுக் குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப்பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் ஆகையால்என்கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னைவிட்டு விடு; உன்னை ஒரு பெரியஜாதியாக்குவேன் என்றார். அவர்,மோசேயை உடன்படிக்கையின் மையப் பொருளாக்கினார். என்னைத் தனியே விட்டுவிடு, என்னுடைய கோபம் பற்றி எரிகின்றது, அவர்களை நான் அழித்துப் போடுவேன் என்று கர்த்தர் மோசேக்கு கூறினார். கர்த்தர் தன்னுடைய சாயலாக முதல் மனிதனை உருவாக்கியபோது, அவனைத் தன்னுடைய கூட்டாளியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

அவருடைய விருப்பம் தெய்வீக அன்புடனும் தோழமையுமாய் இவர்களுடன் இருத்தலாகும். மனிதனுக்கு தெரிவு செய்வதற்கு கர்த்தர் சுதந்திரம் கொடுத்தார். இதிலுள்ள குறைபாடுதான் இவர்கள் கர்த்தரை தள்ளிவிடவும் முடியும். இதில் எடுக்கப்பட்ட துணிவு, ஏதேன் தோட்டத்தில் ஆபிரகாமின் வீழ்ச்சியாகும். (ஆதி 3). வீழ்ச்சி ஆரம்பித்த நாளிலிருந்து, கர்த்தர், மனிதனுடன் மேற்கொண்ட சகல தொடர்புகளும், ஒரு உடன்படிக்கைகை ஏற்பாடு செயவதற்காகவே இருந்தது, தெரிவு செய்யப்பட்ட ஜனங்கள், கர்த்தருடைய விருப்பத்திற்கு கீழ்படிந்தார்கள். இந்த நிலை வரும்வரை கர்த்தர் முன்று உடன்படிக்கைளை எற்கனவே செய்து முடித்திருந்தார். ஆதியாகமத்தில், மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பிற்பாடு, சாபமும், ஆசீர்வாதமும் உள்ளது. இந்தப் பெரிய பாவத்தின் நிமித்தம், கர்த்தர் நோவாவோடு உடன்படிக்கை செய்தார். பிற்பாடு மனிதர்களின் துணிகரமான பாவத்தின் நிமித்தம், கர்த்தர் நியாயத்தீர்ப்பைக் கட்டளையிட்டார். இங்கு பாபேல் கோபுரம், மனித சரித்திரத்தில் ஒரு திருப்பு முனையாகவிருந்தது. இந்த நாள் வரை மனிதர்கள் ஒற்றுமையாகவே இருக்கின்றார்கள். இங்கு யூதர்கள் என்றும், புறஜாதியார் என்றும் வேற்றுமை இல்லை. இப்போது மனிதர்கள் விக்கிரக ஆராதனைக்காரராக மாறிவிட்டார்கள். இந்த காலத்தில்தான் ஆபிரகாமை கர்த்தர் அழைத்தார், கர்த்தர்ஆபிராமைநோக்கி: நீ உன்தேசத்தையும், உன்இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு,

**நான்உனக்குக்காண்பிக்கும்தேசத்துக்குப்போ.**

| |
|---|
| (1) நான்உன்னைப்பெரியஜாதியாக்குவேன் |
| (2) உன்னைஆசீர்வதிப்பேன் |
| (3) உன்பேரைப்பெருமைப்படுத்துவேன் |
| (4) நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். |
| (5) உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் |
| (6) உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; |
| (7) பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் |

மீண்டும், கர்த்தருக்கு கீழ்ப்படியாமையும், பாவமும் இஸ்ரவேலர்கள் மத்தியில் ஏற்பட்டது, இவர்கள் விக்கிரக ஆராதனையில் அதிக நாட்டம் காட்டத் தொடங் கினார்கள். 430 வருடங்கள் எகிப்தின் அருவருப்புக்களில் ஈடுபட்டார்கள், அதனால் கர்த்தருக்குத் தூரமானார்கள் .எகிப்தின் அடிமைதனத்திலிருந்து கர்த்தர் இவர்களை மீட்டுக் கொண்டார். இஸ்ரவேலர்கள் சரித்திரத்தில் ஒருவேளை வந்தது, இவர்கள் ஒரு தேசமாக உருவாக்கப்பட்டு, கர்த்தருடைய நிபந்தைனைளுடன் கூடிய உடன்படிக் கையை ஏற்றுக் கொண்டார்கள். இப்பவும் இஸ்ரவேலர்களுக்கு தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் உண்டு, கர்த்தர் இந்தச் சந்தர்ப்பத்தை மீறாமல் இருந்தார். இஸ்ரவேல் மக்களைக்கருத்தில் கொண்டு, கர்த்தர் மலையிலே மோசேக்கு உடன்படிக்கையின் நிபந்தனைகளை விளக்கிக் கொண்டிருக்கும் போது ஜனங்கள் உடன்படிக்கயை மீறியதைக் கர்த்தர் கண்டார். இந்த மீறுதலைக் கர்த்தரால் சகிக்க முடியவில் லை.

மோசே, கர்த்தரிடம் பரிந்து பேசியதைக்க கர்த்தர் கருத்திற் கொண்டு தமது ஜனங்களுக்குச் செய்யநினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங் கொண்டார்

**மோசே பரிந்து பேசுகிறவராகச் செயற்பட்டார் (யாத் 32:11-14)**

இஸ்ரவேலர்களுக்காக மோசே பரிந்து பேசும் காட்சி, மிகவும் குறிப்பிடத்தக்க சரித்திர நிகழ்வாகும், இந்த பரிந்து பேசுதல் கர்த்தருடைய இருதயத்தில் பெரிய மாற்றத்தை உருவாக்கியது, கோபத்தை மறந்து இரக்கத்தைக் காண்பித்தார். பரிந்து பேசும் ஜெபத்தினால் கர்த்தரின் கோபம் தணியும், இயேசுவும் எங்களுக்காக தேவ சமூகத்தில் பரிந்து பேசிக் கொண்டே இருக்கின்றார். கர்த்தர் தன்னுடைய வாக்குறுதிகள் மூலம், மனிதர்களின் விசுவாசத்திற்குக் கட்டுப்படுகின்றார். ஜெபமும் விசுவாசமும் கர்த்தருடைய கரத்தை அசைக்கும். இதுதான் நடந்தது. கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக, இஸ்ரவேலர்களுக்காகவும், பரிசுத்தரின் நியாயத்தீர்பிற்காகவும் மோசே பரிந்து பேசிக் கொண்டே இருந்தார். அதிக விசுவாசத்தினால், மோசே தைரியத்துடன் மன்றாடிக் கொண்டிருந்தார்.

**அவர் கற்பலகையை உடைத்து கன்றுக்குட்டியை எரித்துப் போட்டார்**. (.**யாத். 32:15-20 )**

பின்பு மோசே மலையிலிருந்து இறங்கினான்; சாட்சிப்பலகைகள் இரண்டும் அவன் கையில் இருந்தது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது. அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; அவர்கள் உண்டு பண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின் மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்.

**ஆசாரியர்களுக்கான மன்னிப்பு (யாத்32:21-24)** மோசே கன்றுகுட்டியைச் செய்து கொடுத்ததற்காக ஆரோனுடன் முரண்பட்டார், ஆனால் ஆரோன் தன்னுடைய குற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் ஆரோனும் அவனது பிள்ளைகளும் ஆவிக்குரிய தலைவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். (28:1)

**கர்த்தர் பக்கம் நிற்பவர்கள் யார். ? ( யாத் 32:25-29)** லேவியர்கள்! ஜனங்கள் எவ்வளவு அசுத்தமான காரியத்தைப்புரிந்துவிட்டார்கள் என்று லேவியர்கள் உணர்ந்தார்கள். மோசே யாவரையும் பார்த்து, கர்த்தர் பக்கம் நிற்பவர்கள் யார் என்று கூப்பிட்டார். தன்னிடத்தில் அவர்களை வரும்படி மோசே கேட்டுக் கொண்டார். லேவியின் புத்திரர் அதற்குப் பதிலளித்தார்கள். சுருப வணக்கத்தில் பங்கு கொண்டவர்களின் கூடாரங்களையழும் அவர்களையும் அழித்துப் போடும்படி மோசே அவர்களுக்குக் கட்டளையிட்டார்

**தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்**; **(32:30–33:23)** இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக்

கிறுக்கிப்போடும் (32:32). உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. (23:20).

மோசே கர்த்தரைச் சந்திக்கச் சென்றார். கர்த்தர் இஸ்ரவேலர்களைத் தொடர்ந்து வழிநடத்துவதாகக் கூறினார். மோசேக்கு இதனை உறுதிப்படுத்துவதற்காக அவருடைய மகிமையைப் பார்ப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்தார். (33:20-23; ஏசாயா . 6:1-5). யோசுவா தொடர்ந்து மோசேயின் உதவியாளனாக செயற்பட்டுக் கொண்டிருந்தார். (33:11).

**பத்துக் கட்டளைகளுக்கான புதிய கற்பலகைகள்**. *(யாத்* **34:1-9)** தன்னால் உடைக்கப்பட்ட கற்பலகைகளுக்குப்பதிலாக மோசே புதிய கற்பலகைகளுடன் சீனாய் மலைக்கு கர்த்தரைச் சந்திக்க ஏறினார். கர்த்தர் அவருக்குத் தரிசனமாகினார், மோசே கர்த்தரைப் பணிந்து ஆராதித்து, திரும்பவும் ஒருமுறை இஸ்ரவேலர்களை வழிநடத்தும்படி மன்றாடினார். கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, கர்த்தருடைய குணாதிசயங்கள் வேதம் முழுவதும் கூடறப்பட்டுள்ளது. 34; 6-7 இவ்வாறு கூறுகிறது "அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்". (20:5; 34:7) எசேக் 18:1-18.

**உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. . யாத் 34:10-17** இஸ்ரவேலர்களுடன் உடன்படிக்கையை மீளப்புதுப்பிப்பேன் என்று கர்த்தர் மோசேக்குக் கூறினார். ஆனால் இஸ்ரவேலர்கள் கானானியர்களின் வழிபாடுகளில் பங்குபற்றாமல் இருத்தல் வேண்டும், அத்துடன் நியாயப்பிரமாணத்தையும் காத்து நடக்கவேண்டும்.

**மீண்டும்**, **" பண்டிகைகளை மறக்க வேண்டாம்"( யாத்**. **34:18-26)** . இஸ்ரவேலர்களுக்காக கர்த்தரால் ஒழுங்கு செய்யப்பட்ட பண்டிகைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மீண்டும் கர்த்தர் ஞாபகப்படுத்தினார்.

**பாதுக் கற்பனைகளுக்காக புதிய இரண்டு கற்பலகைகள். ( யாத்.34:27-28)** கர்த்தர் கூறிய யாவற்றையும் மோசே புதிய கற்பலகைகளில் எழுதினார். மோசேதான் யாத்திரகாமத்தை எழுதினார் என்பதை உறுதிப்படுத்க்கூடியதாக இருக்கிறது**34:29-**

***மோசேயின் முகம் பிரகாசித்தது***. *(***யாத். 34; 35)**. கர்த்தருடன் மோசே பேசி முடித்தபின்பு மலையிலிருந்து கீழே இறங்கினார், அப்போது அவருடைய முகம் பிரகாசமாக இருந்தது. அதனைப் பார்த்த ஜனங்கள் பயந்தார்கள். மோசே தன் முகத்தை மூடியபடியே ஜனங்களோடு மலையில் கர்த்தர் கூறிய யாவற்றையும் பேசினார்.( 2கொரி. 3:7-18).

**ஆசாரிப்பு கூடாரம். (35–40)**

**மீண்டும் ஓய்வு நாள் வலியுறுத்தப்பட்டது.(யாத். 35:1-3)** . நீங்கள் ஆறுநாள் வேலைசெய்யவேண்டும், ஏழாம் நாளோ உங்களுக்குப் பரிசுத்த நாளாய் இருப்பதாக; அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலை செய்யப்படக்கடவன்.

**நன்றியுள்ள இருதயங்களிலிருந்து பெருந்தன்மையுடன் உதவிகள் வருவதாக. (யாத்.35:4–36:7 ).** ஆசாரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்காக, மோசே ஜனங்களிடமிருந்து காணிக்கையாகப் பணத்தையும், பொருட்களையும், தொழில்நுட்பத்தையும் பங்கிட்டுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார், ஜனங்கள் சந்தோஷத்துடன் அதற்கு இணங்கினார்கள். (35:20-29).

யாத்.31:1-11இல் கூறப்பட்டது போல பசலேலும், ஒகோலியாப்பும் இந்தத்திட்டத்தை நடத்து வதற்கு நியமிக்கப்பட்டார்கள். கொடுத்து போதும் என்று மோசே சொல்லுமளவிற்கு ஜனங்கள் தாராளமாய்க் கொடுத்தார்கள். (36:5-7). கொடுக்கப்பட்ட பொருட்கள் பற்றிய விபரங்கள் அதிகா ரம் 36:8–39:31இல் கூறப்பட்டுள்ளது.. எகிப்தில் கொள்ளையிடப்பட்ட பொருள்களிலிருந்தும் தாராளமாகக்கொடுத்தார்கள்.(12:35-36).

**ஆசாரிப்புக் கூடாரமும் அதன் பணிமுட்டுக்களும். (யாத். 36:8–38:31 ):** தாராளமாக்க் கொடுக்கப்பட்டபடியால் சிறப்பாகக்கட்டி முடிக்கப்பட்டது. தாராளமான தொழிலாளர் வசதிகளும் பொருள்களும் கொடுக்கப்பட்டபடியால் வேலைகள் சிறப்பாக முன்னெடுத்து முடிக்கப்பட்டன.

ஆசாரிய வஸ்த்திரங்கள்.( **யாத். 39:1-31 )** : கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்களையும், ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களையும் செய்தார்கள்.

**39:32-.42**. மோசே இவற்றிற்கான முத்திரையிட்டு அதிகாரமளித்தார். வேலைகள் முடிந்த பிற்பாடு மோசோ சகலவற்றையும் பரிசோதித்துப் பார்த்து கர்த்தர் கூறியபடியே சகலமும் இருப்பதைக்கண்டு திருப்தியடைந்தார். ஆசாரிப்புக் கூடாரமும், ஆசாரியர்களும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குப் புறப்படுவதற்காக ஆயத்தமானார்கள்.

**சிறப்பான திறப்புவிழா!( யாத். 40:1-33 )** இஸ்ரவேலர்கள் முதற்தடவையாக ஆசாரிப்புக் கூடாரத்தைச் செய்து முடித்துவிட்டார்கள். இவைகள் செய்துமுடிப்பதற்கு துல்லியமான செயல் முறைகள் பின்பற்றப்பட்டன, உடன்படிக்கைப் பெட்டி முன் செல்லும், அதற்குப் பின்பாக திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும். இந்த கொண்டு செல்லும் ஆசாரிப்புக் கூடாரம் நாற்பது வருட வனாந்தர வாழ்க்கையில் பல தடவைகள் நிறுத்தப்படுவதும் கொண்டு செல்லப்படுவதுமாக இருந்தது.

**கர்த்தருடைய மகிமை அதனுள்ளும் அதனைச் சூழ்ந்தும் காணப்படும். (யாத்40:34-38)** . ஆசாரிப்புக்கூடாரம் முழுமையடைந்து நிறுத்தப்பட்டபிற்பாடு, கர்த்தருடைய சமூகம் அதனை

நிரப்பியது, அதற்குள் மோசேயும் போகமுடியாதவாறு தேவபிரசன்னம் மூடியது. தேவதூதர்கள், (23:20-33; 33:1-3),மேகஸ்தம்பம், அக்கினிஸ்தம்பம் என்பன இஸ்ரவேலர்களை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி வழிநடத்தியது. (40:36-38)


| ஆசாரிப்புக் கூடாரம் அமைத்தல். |
|---|
| **இஸ்ரவேலர்களின் ஆராதனை இல்லம்.** |
| சீனாய் வனாந்தரத்திலிருந்து கி.மு 960இல் சாலமோனின் ஆலயம் வரைக்கும் உள்ள காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. |
| **இதன் அளவுத்திட்டம்.** |
| இது மூன்று பகுதிகளைக் கொண்டது. : (1) வெளிப்பிரகாரம். (2)உள்பிரகாரம் (3) மகா பரிசுத்த ஸ்தலம். |
| வெளிப்பிரகாரம். : 150 அடி நீளம், 75 அடி அகலம், 7 1/2 அடிஉயரம். |
| வெளிப்பிரகாரக் கூடாரம்.: 45 அடிநீளம் , 15 அடி அகலம் , 15 உயரம். |
| கூடாரம் இரண்டு அறைகளைக் கொண்டவையாகும், அவைகள் தடிப்பான திரைச்சீலைகளினால் வேறுபிரிக்கப்பட்டிருக்கும். |
| கிழக்குப்பக்கத்துக் கூடாரம் உள்பிரகாரம் அல்லது பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்படும். |
| மேற்குப்பக்கத்து கூடார அறை மகா பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்படும். |
| **கட்டிடத்திற்குப்பயன்படுத்தப்பட்ட பொருட்கள்.** தங்கம்வெள்ளி,செம்பு, மிருகத்தோல், அக்காயா மரம், ஒனிக்ஸ். |


ஆசாரிப்புக்கூடாரதளபாடங்கள்

1. **உடன்படிக்கைப் பெட்டி**( யாத். 25:10-22)
   ஆசாரிப்புக் கூடாரத்தில் , உடன்படிக்கைப் பெட்டியானது மிகவும் புனிதமானது. இதற்குள் 10 கற்பனைகளின் பிரதி ஒன்றுவைக்கப்பட்டிருக்கும்
2. **வெண்கலத் தொட்டி(யாத். 30:17-21)**
   இது ஆசாரியர்கள் துப்பரவு செய்வதற்காகப் பயன்படுத்தும் வெண்கலத் தொட்டியாகும். கர்த்தருடைய சமூகத்திற்குள் பிரவேசிக்கும் போது அவர்கள் பரிசுத்தமாக இருத்தல் வேண்டும்.
   வாசலில் வைக்கப்பட்டிருக்கும். பலிபீடத்தின் நான்கு கொம்புகளிலும் இரத்தப்பலி தெளிக்கப்படல் வேண்டும்

3. **பசும்பொன்குத்துவிளக்கு(யாத். 25:31-40)** பரிசுத்த பொன் குத்துவிளக்கு பரிசுத்த ஸ்தலத்தில் சமூகத்து அப்பங்களை வைக்கும் மேசைக்கு எதிராக வைக்கப்பட்டிருக்கும். இதற்கு ஏழு அகல்கள் இருக்கும்.

4. **தகன பலி செலுத்துவதற்கான பலி பீடம்** (யாத். 27:1-8) மிருகங்களை இந்த பலிபீடத்தில் பலியிடுவார்கள்.




Table of the Bread
of the Presence
Altar of Incense
The Ark of the
Covenant
The Washbasin
Brazen Altar
The Furnishings
of the Tabernacle
Golden Candlestick

## வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பாகால் தெய்வங்களின் பெயர்கள்.

| கடவுள் பெயர் | விபரம் | வேதாகமப்பகுதி |
|---|---|---|
| **அத்ரமலேக்** | இது ஒரு பாபிலோனிய தெய்வம். இதை செப்பர்வியர் செப்பர்வாயிமின் தேவர்களாகிய அத்ரமலேக்குக்கும் அன்னமலேக்குக்கும் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்து வந்தார்கள். | 2 ராஜா 17:31 |
| **அன்னமலேக்குக்கு** | இது ஒரு பாபிலோனிய தெய்வம். இதை செப்பர்வியர். | 2ராஜா. 17:31 |
| ஆசறா | கானானிய கடவுளாகிய **எல்** என்னும் தெய்வத்தின் மனைவி | 1 ராஜா 18:19 |
| அசிமா | இது ஒரு கைற்ற்றி (Hittite)தெய்வமாகும். கம்மாத் தேசத்தின் ஜனங்களால் ஆராதிக்கப்பட்டது | 2 ராஜா 17:30 |
| அஸ்தரோத்ஸ் | சிரிய நாட்டின் சந்திர தெய்வம். இது பாலியலுக்கும்,விருத்திக்கும் ஏற்ற தெய்வமாகும் | .நியாயா 10:6 |
| **அஸ்தரோத்** | சிரிய நாட்டின் சந்திர தெய்வம். இது பாலியலுக்கும்,விருத்திக்கும் ஏற்ற தெய்வமாகும் | 2 ராஜா 23:13 |
| பாகால் | கானானியர்களின் ஆண் தெய்வம் | எண் 22:41 |
| **பாகால்-பேரீத்** | பாகால் தெய்வத்திற்கான ஒரு பெயர், நியாயாதிபதிகளின் காலத்தில் ஆராதனை செய்யப்பட்டது | நியாயா 9:4 |
| **பாகால்பேயோர்** | மோவாப்பியரின் விக்கிரகம். சீமோஸ் சைப் போன்றது | சங். 106:28 |
| **பாகால்க** | பாகாலின் பன்மை வடிவம் | நியாயா |

| | | |
|---|---|---|
| **ள்** | | 8:33 |
| **பாகால்சேபூ** | பெலிஸ்தரின் நகரமாகிய எக்ரோன் நகரத்தில் இது வணங்கப்பட்டது. | 2 ராஜா. 1:2-3 |
| **பெயெல் செபூ** | புற ஜாதிகள் இதனை தெய்வமாக வணங்கினார்கள், ஆனால் யூதர்கள் பிசாசுகளின் தலைவன் எனக் கூறினார்கள் | மார்3:22 |
| பேல் | இது பாபிலோனியர்களின் பிரதான கடவுளாகும்.இது மாதுக் தெய்வத் தோட அடையாளப்படுத்தப்படும் | ஏசா. 46:1 |
| **கேமோஷ்** | மாபோபியர்களின் தேசியக்கடவுள். | எரே48: 7, 13 |
| கியூன் | நட்சத்திரக்கடவுள், சனியுடன் தொடர்புடையது | ஆமோ 5:26 |
| **தாகோனின்** | **பெலிஸ்தரின் பிரதான கடவுள்.** | 1 சாமு. 5:2-7 |
| தியானா | றோமானியர்களின் சந்திர, வேட்டை, காட்டு மிருகங்கள், கற்பு சம்பந்தமான கடவுள். | அப்19:24, 27-28 |
| காத் | இது இஸ்ரவேலர்களால் வணங்கப்பட்ட தெய்வமாகும். | ஏசா 65:11 |
| **பவுன்கன்றுக்குட்டி** | **வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களால் செய்யப்பட்ட விக்கிரகம்** | யாத்.32 |
| கேமெஸ்(மெர்க்கூரி) | இது கிரேக்க தேசத்தின் வியாபாரத்திற்கான ,விஞ்ஞானம், கண்டுபிடிப்புக்ள், எனபவற்றிற்கான கடவுள் | அப் 14:12 |
| மம்மோன் | godசெல்வம் என்று அர்த்தமுள்ள அராமிக்சொல்லிற்கான பொய்த தெய்வம் | லூக் 16:13 |
| மேனி | காத் என்ற தெய்வத்துடன் சேர்த்து,மேனி என்ற தெய்வத்தையும் வணங்குகின்றார்கள். இஸ்ரவேலர்கள் இந்த தெய்வங்களையும் வணங்கினார்கள். | ஏசா. 65:11 |
| **மெரொதாக்** | பாபிலோனியர்களின் யுத்தக்கடவுள். | எரே. 50:2 |
| மல்காமின் | **மேலேக்கின் இன்னுமொரு பெயர்.** | .செப்ப 1:5 |

| | | |
|---|---|---|
| மோளேக் | அம்மோனியர்களின் தேசிய கடவுள்,குழந்தைகளை பலியாக ஒப்புக் கொடுப்பார்கள். | லேவி18:21 |
| மோளேக் | அம்மோனியர்களின் தேசிய கடவுள்,குழந்தைகளை பலியாக ஒப்புக் கொடுப்பார்கள். | அப் 7:43 |
| நேபோ | பாபிலோனிய தெய்வம்,ஞானத்திறகும், கலைக்குமான வேலைக்குமானது | ஏசா 46:1 |
| நிகுஸ்தான் | வெண்கலச்சர்ப்பம்,இஸ்ரவேல்புத்திரர்அதற்குத்தூப காட்டிவந்தார்கள்; அதற்கு நிகுஸ் தான் என்று பேரிட்டான். | 2 ராஜா. 18:4 |
| நேர்கால் | மேதியா பெர்சியர்களின் யுத்தக்கடவுள். | 2 ராஜா 17:30 |
| நிபேகாஸ் | ஆவியர்கள இந்த விக்கிரகத்தை வணங்கினார்கள் | 2 ராஜா 17:31 |
| நிஸ்ரோக் | நினிவேயிலுள்ள ஆலயத்தில், அசீரியர்கள் இதை வழிபட்டார்கள் | ஏசா. 37:38 |
| ரெம்பான் | வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களால் வணங்கப்பட்ட தெய்வம். | அப்7:43 |
| ரிம்மோன் | அசீரியர்களின் தெய்வம், இடி,மின்னல், மழை என்பவற்றிற்கானது. | 2 Kin. 5:18 |
| சுக்கோத் | சனிக்கிரகத்திற்கு பாபிலோனியர் கொடுத்த பெயர். | Amos 5:26 |
| சுக்கோத்பெனோத் | பாபிலோனியர்களின் பெண் தெய்வம், மர்தூக் தெய்வத்தின் மனைவி. | 2 ராஜா. 17:30 |
| தம்மூசு | பாபிலோனிய அபிவிருத்திக் கடவுள். | எசே 8:14 |
| தர்தாக் | ஆவியர்களால் வணங்கப்பட்ட விக்கிரகம் | 2ராஜா. 17:31 |
| சீசஸ் மெர்க்கூரி | பழைய கிரேக்கர்களின் பிரதான தெய்வம் | அப் 14:12-13 |

**யாத்திராகமப் புத்தகத்திலிருந்து கவனத்தில் கொள்ளக்கூடிய நபர்கள்.**

**ஆரோன்.**

**முக்கிய சம்பவங்கள் (28:1; எண். 26:59).**;-மோசேயின் மூத்த சகோதரன், இஸ்ரவேலின் முதலாவது பிரதான ஆசாரியன்.

.**பிறப்பு**;- எண்ணாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எண். 26; 59 அம்ராமுடைய மனைவிக்கு யோகெபேத் என்றுபேர்; அவள் எகிப்திலே லேவிக்குப் பிறந்த குமாரத்தி; அவள் அம்ராமுக்கு **ஆரோனையும் மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள்**.

**தகப்பன்.;-** அம்ராம் ( எண். 26;59)

**தாயார்;-** யோகெபேத்( எண். 26;59)

**சகோதரி**: மீரியாம். (எண். 26:59)

**மனைவி**: எலிசபா (6:23)

**பிள்ளைகள்** ;- நாதாப், அபிகு, எலியேசர், இத்தாமர். (6:23)

**தொழில்;-** பிரதான ஆசாரியர் ( யாத். 28;1)

**அவருடைய வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள்;-**

- மோசேக்காக கதைப்பதற்காக நியமிக்கப்படல்(7:1)
- அவருடையகைத்தடி பாம்பாக மாறியது (7:8-13)
- பிரதான ஆசாரியராக நியமிக்கப்படல்(28:1)
- தங்கக் கன்றுக்குட்டி உருவாக்கியவர் (32:2-4)
- மோசேக்கு எதிராகப் பேசியவர். (எண் 12)
- அவருடைய கைத்தடி முழைவிட்டது(எண் 17)
- வாக்களிக்கப்பட்ட தேசத்திலிருந்து விலக்கப்பட்டவர். (எண். 20:12)

(பின்புகர்த்தர்மோசேயையும்ஆரோனையும்நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்.)

**மரணமடையும் போது வயது.;- 123 (எண். 20:27-28; எண். 33:39)**

**முக்கிய குறிப்புகள்;- உபா. 4:14--- 10:6; சங் 77:20; 105:26-45; 133; மீகா. 6:4; Acts 7:40; எபிரே. 5:4; 7:11**

**ஆரோனிடமிருந்து கற்கக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**.

- விசுவாசிகளாக இருக்கும் நாம் எங்களுடைய ஊழியர்களுக்காக மதிப்பழிப்பதற் காகவும், ஜெபிப்பதற்காகவும் அழைக்கப்பட்டுள்ளோம். (17:12-13; 1 திமோ 2:1-2; தீத்து 3:1-2; எபிரே. 13:7, 17; 1 பேது. 2:13-17).

- எங்கள் ஊழியக்கார்ரை அவதுறாகப் பேசுவதை நாம் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.(எண் 12:1-2; 1 திமோ. 5:19; யாக்கோ 1:19).

- சபையிலிருந்து எழும்பும் தேவையற்ற அழுத்தங்கள் குறித்து நாம் மிகவும் சவனமாக இருத்தல் வேண்டும். (32:1-5).

- எங்களுடைய பாவங்களுக்கு நாமே பொறுப்புக் கூறல் வேண்டும், மாறாக மற்றவர்கள்மேல் குற்றம் சுமத்தக் கூடாது. (32:4, 22-24).

- கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை நாம் மிகவும் கவனமாக பொறுபெடுக்க வேண்டும், அத்துடன் சபையிலுள்ளவர்களுக்கும் அதனை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும். (30:9; 32:1-5; லேவி. 10:1-7).

**திறப்புவசனம்**;-உன்சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும் அவனோடே கூட அவன்குமாரராகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக்கொள்வாயாக. (28:1).

**மோசே**

**முக்கிய சம்பவங்கள்**

இஸ்ரவேலர்களிற்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர், பஞ்சாகமத்தை எழுதியவர். (19–31;லூக் 24:44; யோவான்1:17; 5:46).

இவரது பிறப்பு பற்றி 2:2 இல் கூறப்பட்டுள்ளது.

**தகப்பன்**:- அம்ராம் (6:20)

**தாய்:-** யோகெபேத்( 6:20)

**சகோதரன்:** ஆரோன். (6: 20)

**சகோதரி** :-மீரியாம். ( எண் 26: 59)

**மனைவி** :-- சிப்போறாள் ( 2:21)

**மகன்மார்:-** கெர்சோம், எலியேசர் ( 18: 2-4)

**அவரது வாழ்வில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்.**

- ஆற்றிலிருந்து காப்பாற்றப்பட்டு, அரசகுமாரனாக வளர்க்கப்பட்டார். (2:3-10)
- மீதியான் தேசத்திற்கு ஓடிப்போனார்.(2:11-15)
- இஸ்ரவேலர்களை வழிநடத்த அழைக்கப்பட்டார். (3–4)
- யாத்திரை:- செங்கடலைக் கடந்து செல்லுதல்.(12:31-42; 13:17–14:31)
- கன்மலையிலிருந்து தண்ணீர் கொண்டுவருதல்.(17:1-7)
- சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொள்ளல். (19–31)
- ஆசாரிப்புக் கூடரம் கட்டுவதை மேற்பார்வை செய்தல்.(36–40)
- கானானுக்குள் உளவாளிகளை அனுப்புதல் (எண். 13)
- நாற்பது வருட அலைச்சலை அறிவித்தல்(எண். 14:26-39)
- கானானுக்குள் செல்லத் தடுக்கப்படல். (எண்20:1-13)
- வெண்கலச் சர்ப்பம்(எண் 21:4-9)
- பிரியாவிடைஉரை (உபா. 1–33)

மரணமாகும் போது வயது. **120 (**உபா 34:1-5, 7)

முக்கிய குறிப்புகள். யாத்—உபா .; சங் 90; 105: 26-45; ஏசா 63:11-13; யோவான்1:17; அப் 7:17-44; எபி 3:1-5; 11:23-29; வெளி. 15:2-4

**மோசேயிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**.

- அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டார் (எபி. 11:25-26).

- கர்த்தருடைய ஊழியத்திற்கான அழைப்பிற்கு சாட்டுப் பேக்குச் சொல்வதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை, அவர்சாட்டுப் போக்குகளுக்கும் பதில் தருவார்.,(3:11-15; 4:1-17).

- நாங்கள் எங்களுக்காக எதையும் முயற்சிக்கக் கூடாது. எங்களுக்கு மற்றவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் நினைக்க கூடாது. (18:13-26).

கர்த்தருடன் நாம் தொடர்பில் இருக்கும் போது எங்கள் வாழ்க்கையில் ஒளி வீசும், அதைப்பலரும் காண்பார்கள். (33:18-23; 34:29-35).

•மோசேயின் தலமைத்துவம் வெற்றி கண்டதற்குக் காரணம்,அவர் வழிநடத்தியவர்கள்மீது அன்பாக இருந்ததேயாகும். (32:32; ரோமர். 9:1-3; 10:1).

• மோசே உலகிலேயே மிகவும் தாழ்மையான சாந்த குணமுள்ள மனுஷனாகும். (எண் 12:3), அவருடைய கோபத்தினால் வாக்குப் பண்ணப்பட்டதேசத்தை இழந்தார்.(எண் 20:2-13). தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். என்று பரிசுத்த பவுல் கூறியுள்ளார். (1கொரி. 10:12).

• உலகவெற்றியல்ல, ஆவிக்குரிய வெற்றியே எங்கள் வாழ்க்கையின் நோக்கமாக இருத்தல் வேண்டும். (உபாக. 34:10-12; 2 திமேத். 4:7).

**பிரதான வசனம்:-** நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.( யோவான் 1:17).

நன்றி கர்த்தாவே

திராணி

உசாத்துணை நூல்கள்.

**THE BIBLE READER'S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**


**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**PARSONS BIBLE PICTURES PARSONS TECHNOLOGY, INC. Cedar Rapids, Iowa**


Physical Map of Palestine
0 5 10 15 20 25 30 35 40 45 50 Mls
0 10 20 30 40 50 60 70 80 Kms
© Copyright HAMMOND INCORPORATED, Maplewood, N. J.
Modern Arabic names are underlined
Elevations are given in feet
The terrain-vegetation model map here depicts the natural vegetation of Palestine as far as it can be determined. Primary ground cover has undergone changes by time and man. For example, vast areas of Mediterranean vegetation, originally a maquis-forest type, are now dwarf-shrub with only rare patches of forest. The sequence of colors below applies to both this map and subsequent maps of Palestine in the series.
Mediterranean vegetation
Grassland — steppe
Mixed grassland & forest
Sparse grassland & shrub
Riverine vegetation & oases
Snow & ice
Barren salt flats
Sandy or salt desert
Stony desert — hamada
Barren lava beds
Recent salt flats
The Great Sea
(Mediterranean Sea)
Sidon
Damascus
Abana
Pharpar
PHOENICIA
LEBANON
ANTI-LEBANON
Mt. Hermon 9,232
Leontes
Tyre
Dan
UPPER GALILEE
Lake Hula (L. Semechonitis)
Mt. Meron 3,963
BASHAN
Hauran
33°N
Acco
LOWER GALILEE
-696
Sea of Galilee (Chinnereth)
Mt. Carmel 1,791
Kishon
Nazareth
Mt. Tabor 1,929
Yarmuk
Plain of Esdraelon
Hill of Moreh
Dor
Megiddo
V. of Jezreel
Mt. Gilboa 1,640
Beth-shan
Caesarea
Dothan
GILEAD
Plain of Sharon
SAMARIA
Samaria
Mt. Ebal 3,083
Shechem
Mt. Gerizim 2,890
Jordan
Jabbok
(Zarqa)
Kanah
Farah
Jebel Yusha 3,652
Joppa
Shiloh
Tell Azur 3,333
Rabbah (Amman)
AMMON
Bethel
Aijalon
Jericho
Sorek
Jerusalem
Mt. of Olives 2,670
Plains of Moab
Mt. Nebo 2,631
Elah
Bethlehem
Plain of Philistia
Shephelah
JUDEA
Wilderness of Judea
Dead (Salt) Sea
-1,296
3,346
Hebron
Gaza
Arnon (W. al Maujib)
Desert
Gerar
MOAB
Raphia
Besor
Beer-sheba
Kir-hareseth
IDUMEA
Brook of Egypt (W. al 'Arish)
31°N
Zered (W. al Hasa)
Negeb
Wilderness of Zin
Arabah
EDOM
Jebel Helal 2,926
34°E
Kadesh-barnea
Local grid coordinate system of 50-kilometer squares
36°E

யாத்திரகாமம்


Routes in Palestine
Main routes
Other routes
0 10 20 30 40 50 Mls
0 20 40 60 80 Kms
© Copyright HAMMOND INCORPORATED, Maplewood, N. J.
The Great Sea
Sidon
Damascus
To Hamath, Aleppo, Tadmor (Palmyra)
MT. HERMON
Leontes
Tyre
Dan
The King's Highway
Hazor
Acco
Sea of Chinnereth
Ashtaroth
Yarmuk
Dor
Megiddo
Ramoth-gilead
Ibleam
Beth-shan
Soco
Tirzah
Jordan
Samaria
Mahanaim
Shechem
Succoth
Aphek
Shiloh
Joppa
Bethel
Rabbah
Lod
Gilgal
Ai
Aijalon
Jericho
Heshbon
Ashdod
Beth-shemesh
Jerusalem
To Dumah
Ashkelon
Salt
Lachish
Gaza
Hebron
Dibon
En-gedi
Arnon
Gerar
Sea
Arad
Beer-sheba
Kir-hareseth
To Pelusium (Sin)
The Way of the Sea
Zoar
Zered
N e g e b
Bozrah
To Heliopolis (On)
The Way to Shur
Oboth
Kadesh-barnea
Punon
Arabah
Petra
To Memphis (Noph)
Ezion-geber (Elath)
To Tema, Dedan


Mean Annual Rainfall
Based mainly on the Atlas of Israel
0 5 10 15 20 25 30 35 Mls
0 10 20 30 40 50 60 Kms
© Copyright HAMMOND INCORPORATED, Maplewood, N. J.
Mms
Inches
1100 44
1000 40
900 36
800 32
700 28
600 24
500 20
400 16
300 12
200 8
100 4
50 2
V
W
X
Y
Z
2
3
4
5
6
7
Sidon
Damascus
Tyre
MT. HERMON
Upper Galilee
Bashan
Acco
Lower Galilee
Sea of Galilee
Tiberias
Caesarea
Beth-shan
Gilead
Samaria
Jordan
Mediterranean Sea
Joppa
Amman
Jericho
Jerusalem
Shephelah
Hebron
Dead Sea
Gaza
Desert
Beersheba
Moab